www.padippakam.com
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஒக்.13–19,1996
ரூபா 11/00

# வாரமலர்
# தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 174



## பூவா? தலையா
## புதிய பொறி

போர்க்கள நிலவரம்

தரையிறங்கிய படை

## கனவுத் தொழிற்சாலையில் கண்ணீர் விடும் நடிகைகள்

www.padippakam.com

# முரசம்

## பிட்டும்-தேங்காய்ப்பூவும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அம்பாறை மாவட்ட
அசம்பாவிதங்கள்
வெந்த புண்ணில் நமக்கு நாமே
வேல் பாய்ச்சிக் கொண்டமாதிரித்தான்!

தமிழ்-முஸ்லிம் சமூகங்கள்
சுமுகமான உறவுகளால்
இணைந்திருப்பது மட்டுமே
இரு சமூகங்களுக்கும் ஆரோக்கியம்!

குட்டையைக் குழப்பிவிடுவோர்
இரு சமூகங்கள் மத்தியிலும்
இருக்கவே செய்கிறார்கள்!
மக்கள் விழிப்போடு இருந்தால்
சுயநலமிகளை அடையாளம் காணலாம்!

அம்பாறை அசம்பாவித விடயத்தில்
அதனை உடன் தடுக்க வேண்டியவர்கள்
ஆறுதலாகவே நடவடிக்கைகளை
எடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

"ஊர் ரெண்டுபட்டால்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்."
அரசியல்வாதிகள் சிலரையும்
கூத்தாடிகளோடு ஒப்பிடலாம்.

எனினும்-எரியும் நெருப்பில்
குளிர்காய நினைக்காமல்
பொறுப்போடு செயற்பட்ட
அரசியல்வாதிகளைப் பாராட்டலாம்.

வடக்கு-கிழக்கு
தமிழ் மக்களது தாயகம்மட்டுமல்ல,
முஸ்லிம் மக்களின்
தாயகமும் அதுதான்.
புலிகள் இயக்கத்தினரும்
அதனையே கூறியுள்ளனர்.

இரு சமூகங்களுக்கு இடையில்
ஒற்றுமையை ஏற்படுத்தும்
பாரிய பொறுப்பில் இருந்து
புலிகளும் கடந்த காலத்தில்
தவறியிருந்தனர்; தவறும் இழைத்தனர்!

பிட்டும் தேங்காய்ப் பூவும்போல
கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்கள்
கலந்து வாழ்ந்து வருகின்றனர்.
அந்தத் தேங்காய்ப் பூவைக்
கிள்ளியெறிவதுபோல புலிகளும்
நடந்து கொண்டனர்.

அதேபோல முஸ்லிம் மக்களின்
பெயரால் செயற்பட்ட

உதிரிக் குழுக்கள் சிலவும்
யாரோ இட்ட கட்டளைப்படி
சமூக முரண்பாடுகளுக்கு
தூபமிட்டன; தூண்டிவிட்டன!

கசப்பான கடந்த காலங்களை
நடப்புக் காலத்தின் நல்லுறவுகளால்
துடைத்தெறிய வேண்டாமா?

சமீபகாலமாக புலிகளும்
முஸ்லிம்கள் தொடர்பான
தமது அணுகுமுறைகளை
மாற்றிக் கொண்டுள்ளனர்.

இரு சமூகங்கள் மத்தியிலும்
இருக்கின்ற அரசியல் சக்திகளும்
பொறுப்போடு செயற்படவேண்டும்.

கலவரம் நடந்தபின்னர்
கண்டன அறிக்கைகள்
வெளியிடுவதை விடவும்
மீண்டும் ஒரு அசம்பாவிதம்
ஏற்படாமல் இருக்க வேண்டுமானால்
என்ன செய்யவேண்டும்?
என்று சிந்தித்து முடிவு காண்பது நலம்!

வெள்ளம் வர முன்னர்
அணைகட்டினால் மட்டும் போதாது;
அந்த அணையை உடைக்க
கங்கணம் கட்டி நிற்போரையும்
மக்களுக்கு இனம் காட்டவேண்டும்!

வேளாண்மை
வெள்ளத்தில் மூழ்கினால்
விவசாயிக்கு நஷ்டம்!
சமூகங்களின் ஒற்றுமை
கலவர வெள்ளத்தில் மூழ்கினால்
இரு சமூகங்களுக்குமே நஷ்டம்!

சாதாரண மக்கள்
புன்னகைகளை பரிமாறிக்கொள்ள
ஆசைப்படுகிறார்கள்!

பரிமாறிக்கொள்ளப்படும்
புன்னகைகள்
யாருக்கு முள்ளாக குத்துகின்றன?
இரு சமூக மக்களுக்கும்
அதற்கு விடை தெரியும்!

மக்கள் மௌனமாக
இருக்கிறார்கள் என்பதற்காக
அநியாயங்களை அங்கீகரிக்கிறார்கள்
என்று அர்த்தமல்ல!

தனது தலையில் தானே
மண் அள்ளிப்போடுமாம் யானை.
தமிழ்-முஸ்லிம் சமூகங்களையும்
அந்நிலைக்குத் தள்ளிவிட
யாரும் இடமளித்துவிடாதீர்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## பகை

நம்மைப்பகைக்கும் பலவிதமான மக்களுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏன்? எதற்கு என்று தெரியாமலே முகாந்திரமில்லாமல் எம்மை பகைக்கும் மக்களின் நடுவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நம்மை பகைக்கிறவர்கள் மத்தியில் நம்மை பாதுகாக்கவும், நம்மை இரட்சிக்கவும் இயேசு கிறிஸ்து உலகத்திற்குள் வந்தார்.

பகைவர்களுக்கெதிரே ஒரு பந்தியை எமக்காக ஆயத்தப் படுத்தும் தேவன் உண்டு- நாம் கலங்காதிருப்போம். லூக்கா1:74,75 கூறுவது என்ன...."நம்மை பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்."

இவ்விதமாக இயேசு கிறிஸ்து நம்மை பகைத்து, ஆதிமுதல் நமக்கு விரோதமாக செயல்படுகின்ற சத்துருவாகிய பிசாசின் சகல கிரியைகளையும் அழித்து நம்மை இரட்சிக்க இரட்சகராக இவ்வுலகில் தோன்றினார்.

பகைவர்களுக்கு மத்தியல் வாழும் நாம் பயப்படாது... இறைவனின் துணை நாடுவோம். அவர் எம்மை இரட்சிப்பார்.

ஜே. புளோரன்ஸ், கெங்கல்ல.

## ஆன்மீகம்



## குறிப்பிட்டோருக்கு நன்கொடை கொடுப்பது கூடாது!

ஹஸறத் நுஃமான் இப்னு பஷீர் (றலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: என் தகப்பனார் எனக்கு ஒரு நன்கொடையளித்தார். அப்பொழுது "றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை சாட்சி வைக்காத வரையில் நான் (இந்த நன்கொடையைப்) பொருந்திக் கொள்ளமாட்டேன்" என்று (என் தாயார்) அம்றத்து பின்து றவாஹா (றலி) கூறினார். உடனே அவர் (எனது தகப்பனார்) றஸுல் (ஸல்) அவர்களிடம் சென்று அம்றத்து பின்து றவாஹாவின் வயிற்றில் பிறந்த என் புதல்வருக்கு ஒரு நன்கொடையை அளித்தேன். அதற்கு தங்களை நான் சாட்சியாக வைக்க வேண்டும் என்று எனக்குக்கூறுகிறாள் யாரசூலல்லாஹ்!" என்று கூறினார். "உமது மக்கள் யாவருக்கும் இதைப் போல் (நன்கொடை) அளித்தீரா?" என்று றஸுல் (ஸல்) அவர்கள் வினவ, (அதற்கு அவர்) "இல்லை" என பதிலளித்தார். அப்பொழுது "அல்லாஹ்வைப் பயப்படு! உமது மக்களுக்கு இடையில் நீதியாக நடந்து கொள்வீராக!" என்று றஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் திரும்பச் சென்று (தாம்) அளித்த நன்கொடையை ரத்துச் செய்துவிட்டார். (ஆதாரம்:- ஸஹீஹுல் புஹாரி)

இந்த ஹதீதின் மூலம் தன் குடும்பத்தினருக்கும் சரி, வேறு எவருக்கேனும் நன் கொடை அளிக்கப்படும் போது அனைவருக்கும் சமமானதாகவும், நீதியான முறையிலும் அளிக்க வேண்டும் என்பதனை உணர்கின்றோம்! ஆகவே, இதனை எமது நடைமுறை வாழ்க்கையிலும் கடைப்பிடிப்போமாக!

எம்.ஏ.எம்.மசூத் அஹமத்-காத்தான்குடி

## கவிதைப் போட்டி இல.171



இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### போராட்சி

சுடுகாடும் எமக்கில்லை
நடுவீதி பிணக்காடு
விடெல்லாம் சுடுகாடு
பேயாட்சி போராட்சி
தெருவெங்கும் பிணமாச்சு!
வாலிபமும்-வயோதிபமும்
வாடமுன் உதிர்ந்து போயாச்சு!

ஆர்.சச்சிதானந்தன்-குருமன்காடு, வவுனியா.

### செய்தி என்ன?

ஆவென்றே வாய்திறந்து
ஆவியை நீத்தீர். அந்தோ!
ஆவென்ற வாயினூடே;
ஆவலாய்ச் சொல்ல வந்த,
ஆதர்ஷ செய்தி என்ன?
அகிலத்தின் சமாதானமோ?

எஸ்.எம்.ஸறூஜ்-நீர்கொழும்பு.

### சொத்து

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா'
என்று சொன்ன அறிஞர் எங்கே?
அதுவுமே தேவையில்லை
எங்கள் பூமியில்-

டாக்டர் புனிதா-அரசினர் வைத்தியசாலை,
திருகோணமலை.

### மடிந்து போகும் மனிதம்

மண் மீது மனிதம்
மடிந்திங்கு போனதால்,
மடிந்து கொண்டிருக்கும்
உயிர்களிங்கு!
மரணம் ஒன்றுதான்
இனி மீதமிங்கு...!

தெ.றஞ்ஜனா-சின்னப்புதுக்குளம், வவுனியா.

### சாலைகளும் இங்கே...!

மரணம்கள் மலிந்து
கிடக்கும் நம்நாட்டில்
சடலங்கள்-எப்படி
சவக்காலை செல்லும்?
நாட்டின் நடப்புநிலை
தொடருமாயின்....
சாலைகளும்-சவக்
காலைகளாகும்!

சிவசேகரன் சிவகுமார்-கல்லடி
மட்டக்களப்பு

### பரிதாபமுடிவு

போரை வெறுத்த பெரியவன் பிரான்ஸில்!
கைதுக்கு பயந்து இளையவன் இத்தாலியில்!
காட்டு வாழ்வுக்கு அஞ்சி கடைசி மகள் கனடாவில்!
பெற்றவர் முடிவு வீதியில் அனாதையாய்!

எம்.எச்.எம்.தௌபீக்-புதிய காத்தான்குடி.06.

### சாதனை

இலங்கையின் அநாதை
பிணங்களை
சேகரியுங்கள்;
சீக்கிரம்
கின்னஸில்
இடம்
பிடிக்கலாம்!

திருமதி-புவனேஸ்வரி,
கந்தசேனை, நமுனுகுல.

### விளம்பரம்

எறிகணைத் தாக்குதலில்
இறந்து போன என் அப்பாவை
எடுத்து நீங்கள் எரித்து விட்டால்
'எக்ஸ் பிறஸ்'ில் அனுப்புவேன்
ஔ்ணூறு அமெரிக்க டொலர்!
இப்படிக்கு; அன்பு மகன்-அமெரிக்கா.

செல்வி எஸ்.வதனி-வெள்ளவத்தை.

### ஏழ்மை

முதிர்ந்த மரம்
தன்னை அழித்து
விதையாகி
கொண்டதா.

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல-174



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 19.10.1996

–முகவரி–

கவிதைப் போட்டி இல.174 தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

என் அன்பு முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை நிறைந்ததாகவேயுள்ளன. அதிலும் ரசிகன் தரும் பூலான் தேவி தொடரும், ப.கோ. பிரபாவின் மறுபடி தா! தொடரும் அடுத்தடுத்த கிழமைகளை ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கின்றன. சிந்திக்க வைக்கின்ற சிந்தியாவின் பதில்களும், இலக்கிய நயமும் சேர்ந்து மனதை சிலிர்க்க வைப்பதுடன் ரசிக்கத் தூண்டும் தேன் கிண்ணம் வாசிக்கும் போது மதுக் கிண்ணமாகவே மாறிப் போகின்றது.

வசந்திகுமாரி, இரக்குவானை.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

எம்.எச்.எம். ஹம்ஸா, களுத்துறை தெற்கு.
த. கஜனி, கொழும்பு-14.
ஏ.எல். அமீர் ஹுஸைன், கல்முனை-3.
ரா. லலிதா, இறக்குவானை.
நவரெட்ணம் நவலோஜினி, மட்டக்களப்பு.
ரபீதா காசிம், புத்தளம்.
க. சந்திரகுமாரி, அலவத்துகொட.
பி. மூர்த்தி, கினிகத்தேனை.
எஸ். சக்திவேல், நானு ஓயா.
எம். ஜீவரத்னம், வெலிமட.
ரி. ரஜினிகாந்த், உக்குவளை.
வி. நிரஞ்சன், மட்டக்களப்பு.
சி. யுவராணி, பிட்டகந்த.
எச்.எம். பௌமி, குட்டிகம.
ஏ.சி. அன்ஹர், புத்தளம்.
ஏ.சீ.எம். மசூர், பலாங்கொடை.
வீ. குகதாசன், மட்டக்களப்பு.
இளையதம்பி உதயகலா, முறக்கொட்டாஞ்சேனை.
இரா. சந்திரசேகரன், கட்டுக்கிந்துள.
நித்தியானந்தன்-சுபராஜ், மட்டக்களப்பு.
ர். பாபு, பெல்மதுளை.
ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.
ஆ. உதயகுமார், மொன்றியல், கனடா.
எச். சிவராஜா, துபாய்.
ரிஸ்லா ஹனீபா, அக்குறணை.
சுப்பிரமணியம் சுசிலா, கந்தப்பலை.
நா. ஜெயகணேஸ், பொகவந்தலாவ.
கே.எம். தஸ்சியா இக்பால், நிக்கவெவ.
ரி.பி. சுசிர்தா, தாண்டவன்வெளி.
மு. அருமைநாயகம், ஜெர்மனி.




வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடயம் தொடர்பாக 'முரசு' எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தரப்பட்ட விளக்கம் தெளிவாக அமைந்திருந்தது. 'ஒருங்கிணைப்புக் குழு' என்னும் அமைப்பால் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் ஜீவாதார பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணுதல் இயலாத ஒன்று. தமிழ்-முஸ்லிம் கட்சிகளை இனப்பிரச்சனை தீர்வில் கணக்கில் எடுத்துக்கொள்ளாத நிலைதான் காணப்படுகிறது. தேவையானது தீர்வே தவிர, புண்ணுக்கு புணுகுபூசும் முயற்சிகளல்ல.

வி. மகாதேவன், பெரிய கல்லாறு.

அன்பு முரசே! 'சத்ஜய' நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்திலேயே 'படைபலம் அதிகமாக இருந்தால் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றுவது சாத்தியம்' என்று குறிப்பிட்டிருந்தாய். விடுதலைப் புலிகள் தாம் 'சத்ஜய' துருப்புக்களை திருப்பி அனுப்பி விட்டோம். மரபுப் போரில் பலம் பெற்று விட்டோம் எனக் குறிப்பிட்டுவந்தனர். 'சத்ஜய 3' புலிகளின் கணிப்பைப் பொய்யாக்கியுள்ளது. 'புலிகளின் பலம் கெரில்லா போரில்! படைகளின் பலம் மரபுப் போரில்' என்று முரசு கூறிவந்தது சரியே! இரு தரப்புமே சம பலத்தில் உள்ளன. இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் உடனே ஆரம்பிப்பதுதான் நல்லது. தேவையற்ற போர் வெற்றி தோல்வியின்றி தொடரத்தான் வேண்டுமா?

எஸ். அகஸ்ரின், நீர்கொழும்பு.

'வட்டுக் கோட்டைக்கு போகும் வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு' என்றானாம். அந்தக் கதையாகத்தான் இருக்கிறது- இனப்பிரச்சனை தீர்வு கேட்ட மக்களுக்கு ஒருங்கிணைப்புக் குழுவைக் காட்டுவதும். போரை தொடர்ந்தபடியே இடைக்கிடையே இப்படி ஏதாவது செய்து கொண்டிருந்தால்போதும் என அரச தலைமை நினைப்பது நல்ல சகுனமல்ல.

எம்.எம். நிசாம், பாணந்துறை.

நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் மிக, மிக பிரமாதம், அதிலிருந்து என்னைக் கவர்ந்தவை "கவிதைப்போட்டி", இலக்கியநயம், சிந்தியாவின் பதில்கள். உன் இனிய பணி தொடர என் மனமார்ந்த நன்றிகள்.

க. சுதர்சன், செங்கலடி.

## வாசக(ர்) சாலை

உன் கவிதைப் போட்டியும், எழில் பொங்கும் பற்பல ஆக்கங்களும் வர்ண அட்டையுடன் நீ தரும் அனைத்தும் முற்றிலும் உண்மையில் தரமானவைகளே! மேலும் நீ தற்பொழுது தரும் ரசிகனின் கொள்ளை ராணியின் அசத்தல் அருமை. என் மனம் கனிந்த நன்றிபல உனக்கு- வாழ்க!

யூ.எல்.ஏ. அலீம், சாய்ந்தமருது-07.

அன்பின் முரசுக்கு!

வாசகர்களை திருப்திப்படுத்தும் உள்ளம் முரசுக்கு மட்டும்தான் உண்டு. "மறுபடி தா" திகில் சூடுபறக்கிறது. கோபாலகிருஷ்ணனின் வாதம் திணறடிக்கிறது. இலக்கியநயம், சிந்தியா பதில்களில் புதுப்பொலிவு தெரிகிறது. உன்னை பாராட்டாத வாசகர்களே இல்லை. வாழ்க உன் சேவை.

பிரியதர்ஷினி குமாரசிங்கம், இலுப்படிச்சேனை, செங்கலடி.

திக்கெட்டும் முரசொலிக்க தேன்சுவை தரும் தினமுரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் பூலானின் தொடர் மிகவும் பிரமாதம். அதை வாராவாரம் தொடர்ந்து தரும் ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள். உன் சேவை மேலும் தொடர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

சி. நவமலர், கோட்லோஜ் எஸ்டேட், கந்தபொல.

'முரசின்' அரசியல் விமர்சனங்கள் தராசு முள்ளாய் இருக்கின்றன. உண்மையை அறிந்து உறுதிப்படுத்தப்பட்ட பின்பே தகவல்களை வெளியிட்டு வரும் முரசுக்கு அனைவர் சார்பிலும் எனது பாராட்டுக் கரகோஷங்கள்! 'உண்மைக்கு என்றும் அழிவில்லை.'

மொஹமட் ஸன்பர், கிண்ணியா-06.

உன்னை தா! தா! என்று கேட்டு வாங்கி, தா! என்னும் தொடர் கதையை தாகமாய் பார்க்க வைக்கும் பட்டுக்கோட்டை பிரபாகருக்கு என் கை குலுக்கல்கள்.

ஏ.ஜே.எம். ஜ.:.பர், கொழும்பு-15.

பல சுவையான அம்சங்களை வழங்கி வரும் முரசிற்கு என் வாழ்த்துக்கள்.

'காதிலை பூ கந்தசாமி'யின், நாடு முன்னேற நல்ல யோசனைகள் என்ற தலைப்பில் வெளியான நகைச்சுவையும், 'பாண் பாடலும்', தகவல் பெட்டியும் பிரமாதம்.

திருமதி. ராதா சிவபெருமாள், டவுன்சைட் எஸ்டேட், வெளிமடை.

மறுபடியும்; மறுபடியும்....! மனம் மகிழ்ந்து படித்திட வைக்கும் அசத்தல் தொடர், (மறுபடியும்) தா!... 'தூள்' பரத்துகிறது! தொடர் தரும் பட்டுக்கோட்டை பிரபாகருக்குப் பாராட்டுக்கள்!

முத்துமணி-பதுளை

www.padippakam.com

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புலிகள் உத்தரவு!
## உடனுக்குடன் நிறைவேற்றுவதில் எம்.பிக்கள் துரிதம்!

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக தமக்குத் தேவையான சில காரியங்களை புலிகள் இயக்கத்தினர் சாதித்துக்கொள்கின்றனர்.

புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் துரையால் அனுப்பிவைக்கப்படும் கடிதங்களுக்கு குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பயபக்தியான மரியாதை காட்டப்படுகிறதாம்.

வேலை வாய்ப்புக்கள், இடமாற்றங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், நிவாரணங்கள் தொடர்பாகவே புலிகள் இயக்கத்தினரால் உத்தரவுக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன. உடனடியாக அவை தொடர்பான நடவடிக்கைகள் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை தமது தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்வது மூலமாக கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள சிவில் நிர்வாகப் பொறுப்புக்கள் தமக்கொரு சுமையாகாமல் புலிகள் இயக்கத்தினர் பார்த்துக் கொள்கின்றனர்.

கிழக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது முழுவிபரங்களும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் துரையின் கையில் இருக்கின்றன.

வேலைவாய்ப்புக்களிலும், நியமனங்களிலும், வேறு பல வழிகளிலும் தவறாக நடந்துகொண்ட பிரதிநிதிகள் யார் எவர் என்ற விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளனவாம்.

தம்மைப்பற்றிய தகவல்கள் புலிகள் இயக்கத்தினரிடம் சென்றுள்ள விபரங்கள் குறிப்பிட்ட பிரதிநிதிகளுக்கும் நன்கு தெரியுமாம்.

எங்கே தம்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இருக்கும் அந்தப் பிரதிநிதிகள் புலிகள் இயக்கத்தினரின் சிபாரிசுகளை துரித வேகத்தில் கவனிக்கிறார்களாம்.

# "கிளிநொச்சியில் விரைவில் பெரும் தாக்குதல்"
# புலிகள் இயக்கத்தினர் வன்னியில் தெரிவிப்பு
## காங்கேசன்துறையில் 740பேர் தடுத்துவைப்பு!

யாழ்குடாநாட்டில் காணாமல் போவோர் தொடர்பான முறையீடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக யாழ் அரசாங்க செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை முன்னூறுக்கு மேற்பட்டோர் தொடர்பான விபரங்கள் கிடைத்துள்ளன. தமது பிள்ளைகளைக் காணவில்லை என்று காணாமல்போனோரின் பெற்றோர்கள் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர்.

அவ்வாறு யாரையும் கைதுசெய்யவில்லை; காணாமல் போனதாகக் கூறப்படுவோர் புலிகள் இயக்கத்தினரிடம் சென்று சேர்ந்திருக்கலாம் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இளைஞர்களும், யுவதிகளுமாக 740 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

30.03.96 முதல் 29.08.96 வரை கைது செய்யப்பட்டவர்களே அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அங்கு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பான விபரங்கள், கைது செய்யப்பட்ட திகதிகள் போன்றவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் யாழ் அரச அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ் குடாநாட்டில் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவலும் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

படையினரும் தொடர்ந்து தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். அப்பகுதிகள் தமது தளங்களாகிவருவதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

இந்திய அமைதிப்படைக் காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சயனைட் உட்கொண்டு புலிகள் இயக்க உறுப்பினர்கள் 12 பேர் மரணமானார்கள்.

புலிகள் இயக்க முக்கிய தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 புலிகள் அவ்வாறு மரணமானார்கள். அவர்களது நினைவுநாள் கூட்டங்கள் யாழ்குடாநாட்டின் சில பகுதிகளில் புலிகள் இயக்கத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டன. கொக்குவில், மானிப்பாய், இணுவில், சங்கானை, சண்டிலிப்பாய், சித்தங்கேணி, சங்கரத்தை ஆகிய பகுதிகளில் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டதாக புலிகள் இயக்கத்தினரின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் பத்தாம் திகதி பலியான புலிகள் இயக்க பெண் உறுப்பினரான லெப்டினன்ட் மாலதியின் நினைவு தினக் கூட்டம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

புலிகள் இயக்கத்தில் மோதலில் பலியான முதலாவது பெண் உறுப்பினர் மாலதி என்பது குறிப்பிடத்தக்கது. மாலதியின் நினைவுதினத்தை 'தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக' புலிகள் இயக்கத்தினர் அனுஷ்டித்து வருகின்றனர்.

கிளிநொச்சி நகரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்மீது பெரும் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று புலிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை 'சத்ஜய' மூன்றாம் கட்ட நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகர் படையினர் வசம் சென்றபின்னரும் புலிகள் இயக்க வெளிநாட்டு கிளைகள் அதனை மறுத்துக் கொண்டிருந்தன.

இலண்டன் பி.பி.சிக்கு பேட்டியளித்த புலிகள் இயக்கப் பிரமுகரான திலகர், கிளிநொச்சி நகர் படையினரால் கைப்பற்றப்பட்ட செய்தி தொடர்பாக தடுமாற்றமான கருத்துக்களையே வெளியிட்டிருந்தார்.

கிளிநொச்சி நகர் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னரும், கிளிநொச்சி நகரில் பலத்த சண்டை நடைபெற்று வருவதாகவே புலிகள் இயக்க வெளிநாட்டுச் செய்திகள் தெரிவித்துக் கொண்டிருந்தன.

'சத்ஜய' மூன்றாம் கட்ட நடவடிக்கையில் தமது தரப்பில் பலியான 135 பேர்வரையான விபரங்களை புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் தொடர்ந்தும் மோட்டார் ஷெல் முழக்கங்கள் கேட்ட வண்ணமுள்ளன.

வன்னிப் பகுதியில் மருந்துத் தட்டுப்பாடு கடுமையாகியுள்ளது. மலேரியா போன்ற நோய்களுக்கான மருந்துகள், நீர் சுத்திகரிப்புக்கு தேவையான குளோரின் போன்றவை பற்றாக்குறையாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரில் இருந்து இடம்பெயர்ந்து கட்டைக்காடு, புளியம்பொக்கனை, பிரமந்தன் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் நோய்களால் பாதிப்படைந்துள்ளனர். பாம்புக்கடி காரணமாகவும் மரணங்கள் சம்பவித்துள்ளன. குண்டுத்தாக்குதல்களும் இடைக்கிடையே நடைபெற்று வருகின்றன. சமீபகாலமாக நோய்கள் காரணமாக வன்னியில் இறப்புவீதம் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புலிகள் வழங்கிய பாதுகாப்பு

(ஏறாவூர் நிருபர்)

மருதமுனை அசம்பாவித சம்பவத்தைத் தொடர்ந்து 35 மைல்கள் தொலைவிலுள்ள ஏறாவூரில் சிவிலியனான முஸ்லிம் வாலிபரின் கொலை இடம்பெற்றதின்பின்னர் மட்டக்களப்புப் பகுதித் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் அச்சமும் பீதியும் நிலவியது. உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டதைத் தொடர்ந்து வதந்திகள் பரவியதால் அண்டிய பகுதிகளிலுள்ள தமிழ்- முஸ்லிம் மக்கள் இரவு வேளைகளில் இடம் பெயர்ந்தார்கள். எனினும் முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் தமிழ் முஸ்லிம் பகுதிகளில் தமது வழமையான அலுவல்களில் ஈடுபட்டனர். தமிழ்ப் பகுதிகளில் அலுவல்களுக்குச் சென்றிருந்த முஸ்லிம்களுக்குப் புலிகள் தமது பூரண ஆதரவை வழங்கியிருந்ததாகவும், முஸ்லிம் பொதுமக்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையில் யாரும் இறங்கக்கூடாதென்று தமிழ் மக்களைக் கேட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. முஸ்லிம் மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை என்று புலிகள் தெரிவித்ததாகவும் அறிய வருகிறது.

## கூட்டுக் கமிட்டியின் கண்டனக் கூட்டம்
## மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு

தோட்டத் தொழிலாளர்களுக்கு, வாழ்க்கைச் செலவு புள்ளி நிறுத்தம், சம்பள உயர்வில் ஏற்பட்டுள்ள தடை, விலைவாசி உயர்வு, இ.தொ.காவும், இ.தே.தோ.தொ. சங்கமும் கம்பனிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் என்பவற்றிற்கு எதிராக தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி மலையகம் எங்கும் பொதுக்கூட்டங்களை நடத்திவருகின்றது.

அவ்வாறான ஒரு பொதுக்கூட்டம் எதிர்வரும் 13.10.96 ஞாயிறன்று காலை 10.00 மணிக்கு, தலவாக்கலை நகரத்தில் நடைபெறும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பெருந்தோட்ட, வீடமைப்பு, பொது வசதிகள் பிரதியமைச்சருமான பெ. சந்திரசேகரன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியைச் சேர்ந்தோர் கூட்டத்தில் உரையாற்றுவர்

## மறியல் செய்து மீட்டனர்

யாழ் குடாநாட்டில் மறவன்புலவு என்னுமிடத்தில் வாகனமொன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட இளைஞர்களை பொதுமக்கள் மறியல் செய்து மீட்டெடுத்துள்ளனர்.

30.9.96 அன்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இளைஞர்களை பிடித்து ஏற்றிச் சென்ற வாகனத்தின் முன்பாகவே அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் திரண்டு மறியல் செய்தனர். அதன் பின்னர் இளைஞர்களைப் பிடித்துச் சென்றவர்கள் அவர்களை இறக்கிவிட்டுச் சென்றனராம்.

## ஐந்து பேரைக் காணவில்லை

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 11ம் காலனியில் உள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்களில் தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. கடந்த 25.09.96 அன்றுதான் தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின்பின்னர் பலர் கைதுசெய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் அவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இதேவேளை தமது உறவினர்கள் ஐந்து பேரைக் காணவில்லை என்று அவர்களது குடும்பத்தினர் புகார் செய்துள்ளனர். குறிப்பிட்ட ஐந்து பேரும் தம்மால் கைது செய்யப்படவில்லை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## புலிகள் உரிமை கோரல்

மட்டக்களப்பில் 29.09.1996 அன்று ரயில்வண்டி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு புலிகள் இயக்கத்தினர் உரிமை கோரியுள்ளனர்.

இராணுவப் பாதுகாப்புடன் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில்வண்டி தம்மால் தாக்கப்பட்டதாகவும், அத்தாக்குதலில் தமது தரப்பில் மேஜர் ராஜன் என்பவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

03.10.96 அன்று அம்பாறையில் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லையென்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## புலி பொறுப்பாளர் பலி

ஏறாவூர், செங்கலடிப் பகுதிப் பொறுப்பாளரான ஏறாவூர் தளவாயைச் சேர்ந்த பாஸ்கரன் (சைனீஸ்) என்பவரும் மற்றொரு புலி உறுப்பினரும் தளவாயில் வைத்துப் படையினரால் 05.10.96 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

'றெட்பானா' எனப்படும் உதவி நிறுவனத்தின் பிக்-அப் வாகனத்தைப் புலிகள் வெல்லாவெளியில் வைத்துப் பறித்துச் சென்றுள்ளனர். பலமுறை முயன்றும் வாகனம் இனிக் கிடைக்காது என்ற பதிலே புலிகளிடமிருந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கடை திறக்கச் சொல்லிய படையினர்

(ஏறாவூர் நிருபர்)

மருதமுனைப் படுகொலைகளைக் கண்டித்து மட்டக்களப்பில் மாணவர் அணி நடாத்துவதாகக் கூறியிருந்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்குமாறு படையினரையும், பொதுமக்களையும் தான் கேட்டிருந்ததாகவும் படையினர் அதற்கு இணங்கியதாகவும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பி.பி.சி. பேட்டியின்போது தெரிவித்திருந்தார். ஆனால் மட்டக்களப்பு கல்லடியில் ஹர்த்தால் தினத்தன்று கடைகள் பூட்டப்பட்டு சனநடமாட்டம் இல்லாதிருந்தைக்கண்ட படையினர் வீடுவீடாகவும், கடைகடையாகவும் சென்று எல்லாக் கடைகளையும் திறக்குமாறும் இல்லையேல் இனிமேல் கடைகள் திறக்க முடியாதவாறு சீல் வைத்துமூடப்படும் என்று கூறியதையடுத்து கல்லடிப் பகுதியில் அனைத்துக் கடைகளும் ஹர்த்தாலன்று திறந்திருந்தன.

## மூவாயிரம் அகதிகள் தஞ்சம்!

இவ்வருடம் ஜூலை மாதம் 31ம் திகதி முதல் அக்டோபர் முதலாம் திகதிவரை இலங்கையிலிருந்து மூவாயிரம் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர்.

தொடர்ந்தும் அகதிகள் வருகை அதிகரிக்கலாம் என்று தமிழக அரசு கருதுகிறது.

சமீபத்தில் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகொன்று நடுக்கடலில் மூழ்கியது. அப்படகில் இருந்த எட்டுப்பேரில் ஏழுபேர் உயிர்தப்பினார்கள். முல்லைத்தீவைச் சேர்ந்த இராசரட்ணம் கலைச்செல்வன் என்னும் 18 வயது இளைஞர் கடலில் மூழ்கிப் பலியானார்.

அக்டோபர் முதலாம் திகதி 139 குடும்பங்களைச் சேர்ந்த 346 அகதிகள் தமிழகம் சென்றனர். "கிளிநொச்சியில் இடம்பெயர்ந்து காட்டுவழியாக மன்னார் சென்றோம். அங்கிருந்து தமிழகம் வந்து சேர்ந்தோம்," என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஐந்து படகுகளில் அகதிகள் தமிழகம் சென்றனர். அதில் நாலு படகுகளை தமிழகப் பொலிசார் பறிமுதல் செய்துள்ளனர்.

## மன்னார் தொலைத் தொடர்பில் பாதிப்பில்லை!
## மின் விநியோகம் தற்போதைக்கு சாத்தியமில்லை!

(மன்னார் நிருபர்)

கடந்த 02.10.1996 புதன்கிழமையன்று இரவு வேளையில் மன்னார் தொலைத் தொடர்புக் கோபுரம், மின்சார நிலையம் என்பன புலிகள் இயக்கத்தினரின் குண்டுத் தாக்குதலால் தகர்க்கப்பட்டன.

இத்தாக்குதலையடுத்து தொலைத் தொடர்புக் கோபுரம் கீழே விழாமல் சற்று விலகிக் கொண்டது. இதனால் தொலைத் தொடர்பு சேவையில் பாதிப்புகள் ஏற்படவில்லை. இக்கோபுரம் தற்காலிகமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக ஏற்படும் அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மின்சார நிலையம் பலத்த சேதத்திற்குள்ளானதால் மன்னார் தீவுப் பகுதி முழுவதற்குமான மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நகருக்கு மின் விநியோகம் மேற்கொள்ள இரண்டு வாரங்களாவது செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் அத்தியாவசிய சேவைகளான வைத்தியசாலை, தொலைத்தொடர்பு, நீர் விநியோகம் போன்றவற்றிற்கு இன்னும் ஓரிரு நாட்களில் மின் விநியோகம் இடம் பெறலாம் எனத் தெரியவருகிறது.

மின்சாரம் இல்லாததால் மன்னார் தீவுப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ளன. நீர்விநியோகமும் நகரில் தினமும் 10 நிமிடம் வரையேமேற்கொள்ளப்படுகிறது.

## இறுதிச் சடங்குகளில் கரும்புலிகள்!
## படை உயர் அதிகாரிகளுக்கு குறி!

வடக்கில் நடைபெறும் போரில் மரணமான இராணுவ அதிகாரிகளின் பிரேத அடக்கம் போன்ற நிகழ்ச்சிகளில் புலிகள் இயக்க தற்கொலைப்படையினரும் கலந்து கொள்வதாகத் தெரிகிறது. இந்நிகழ்சிகளில் ஆயுதப்படைப்பிரிவுகளின் உயர் அதிகாரிகள் ஒரே நேரத்தில் பலர் வந்து கலந்து கொள்வார்கள் என்பதனால், அவ்விடத்தில் தமது உடம்பில் குண்டைக் கட்டிக்கொண்டு தற்கொலைப் படையினர் தமது தாக்குதலைத் தொடுக்கக்கூடும் என்ற சந்தேகம் பொலிஸ் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இவ்வாறு குண்டு கட்டிக்கொண்டு வரும் தற்கொலைப் படையைச் சேர்ந்த நபர் சிங்கள அல்லது முஸ்லிம் பெயரில் துக்கம் தெரிவிப்பவர் போல் நுழைந்துவிடக்கூடும் என்று பொலிஸ் புலன் விசாரணைகளிலிருந்து தெரிகிறது. இக் காரணத்தினால் இத்தகைய மரணச் சடங்குகளில் எந்த உயர் அதிகாரியும் பங்குபற்றுவதில்லை எனத் தெரிகிறது.

மக்கள் குறைவாகக் காணப்படும் இரவு அல்லது அதிகாலை நேரங்களில் அவர்கள் மரணவீடு சென்று தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துவிட்டு வந்து விடுகிறார்களாம்.

## இயக்க ஆயுதங்கள் பறிப்பு!
## கொலை தொடர்பாக இருவர் கைது!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூரைச் சேர்ந்த- மாடு வாங்கச் சென்ற முஸ்லிம் இளைஞனின் கொலை தொடர்பாக செங்கலடியில் உள்ள றெலோ காரியாலயத்தைச் சேர்ந்த பூபாலப்பிள்ளை-சங்கர், தருமலிங்கம்- சிவா ஆகியோர் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் எஸ். ஈ. ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அந்த இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறும் இம்மாதம் 14ம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சென்ற 28.09.1996 அன்று மாடுவாங்கச் சென்று திரும்பிக்கொண்டிருந்த நால்வரில் கடைசியாக வந்த சீ.மீராஸாஹிபு(28) என்பவரை வந்தாறுமூலையில் உள்ள பாழ் வீடொன்றுக்கருகில் பாதுகாப்புப் படையினருடன் நின்று கொண்டிருந்த றெலோ இயக்கத்தவர்கள் விசாரித்துள்ளனர். அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் கலங்கிப்போயினர். மறுநாள் தமிழ்ப் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து, வழக்கமாகப் படையினரும் றெலோ இயக்கத்தவரும் வீதிக்காவலுக்குப் போகும் நேரத்திற்கு முன்னர், முஸ்லிம் வாலிபர் விசாரிக்கப்பட்ட இடத்தைச் சென்று பார்த்தபோது அவர் அணிந்திருந்த செருப்பு மாத்திரம் இரத்தக் கறையுடன் காணப்பட்டது. பின்னர் பொலிசாருடன் சென்று அந்தப் பாழ்வீட்டைச் சோதனை செய்தபோது வீட்டு உள் கூரையில் சாக்கொன்றால் சுற்றப்பட்டு கறுப்புத் துணியால் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தீ பட்டு எரிந்த மாதிரி சடலத்தின் முகத்திலுள்ள தோல் உரிந்து காணப்பட்டது.

இக்கொலையைத் தொடர்ந்தே மேற்படி இரு றெலோ அங்கத்தவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அத்துடன் செங்கலடி றெலோ அலுவலகத்திலுள்ள அனைவரதும் ஆயுதங்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மருதமுனைக் கொலைச் சம்பவங்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பீதி நிலவிய தருணத்திலேயே இந்த முஸ்லிம் நபர் கொல்லப்பட்டார்.

## அடையாள அட்டை மூவாயிரம் ரூபாய்!
## ஆட்பதிவு திணைக்கள ஊழியர்கள் உடந்தை!

சிங்களப் பெயர்களிலும் முஸ்லிம் பெயர்களிலும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்ற எல்.ரி.ரி.ஈ.யைச்சேர்ந்த ஆண்களும் பெண்களும் கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் உலாவருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தெஹிவளை குண்டு வெடிப்புத் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இருவரிடம், கொழும்பு திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் காணப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

பொய்யான அத்தாட்சிப் பத்திரங்களையும் ஆவணங்களையும் ஆட்பதிவுத்திணைக்களத்தில் ஒப்படைத்து நூற்றுக்கணக்கான அடையாள அட்டைகளை பலர் பெற்றுக் கொண்டதாக குற்றத் தடுப்பு இலாகாவில் விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது. ரூபா 2000 முதல் ரூ 3000 வீதம் வரை ஒவ்வொரு அடையாள அட்டைக்கும் பெற்றுக் கொண்டு திணைக்கள ஊழியர்களே இத்தகைய அடையாள அட்டைகளை வழங்கி வருவதாகத் தெரிகிறது.

கொழும்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் பொதுமக்கள் பயண வண்டிகளனைத்தும் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு பயணிகள் கீழிறக்கப்பட்டு அடையாள அட்டைகள் பொலிசாரால் பரிசோதிக்கப்படுகின்றன.

ஆட்பதிவுத் திணைக்களத்தில் பணிபுரியும் நான்கு ஊழியர்கள் இத்தகைய ஊழல் குற்றச்சாட்டின்மீது, திணைக்கள அதிகாரி விஜய ரணசிங்காவினால் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். ஆனால் அவர்கள் நால்வரும் எத்தகைய தண்டனைகளும் பெறாமல் வேறு இலாகாக்களுக்கு மாற்றப்பட்டு விட்டதாக அவ்வதிகாரி தெரிவிக்கிறார்.

ஆட்பதிவுத்திணைக்களத்தின் கடும் விதிகளால் சாதாரண தமிழ் மக்கள் அடையாள அட்டை பெறுவது மட்டும்தான் கஷ்டமாக இருக்கிறது!


படிப்பகம்

www.padippakam.com

# "குரல் கொடுக்க தலைவர்கள் இல்லை"

## மட்டக்களப்பு மாணவர்கள் தெரிவிப்பு!

**3.10.96** அன்று மட்டக்களப்பில் மாணவர்களால் ஹர்த்தால் நடத்தப்பட்டது. ஹர்த்தாலை முன்னிட்டு 'கண்ணீர் அஞ்சலியும் கண்டிப்பும்' என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. அப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

**அன்புள்ள தமிழ் பேசும் மட்டக்களப்பு மக்களே!**

28-09-96 அன்று! மருதமுனையில் இனப்படுகொலை வரிசையில் மாய்ந்து போன எம் இனமக்களுக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்த வேண்டிய கடமைப்பாடு உங்களைச் சார்ந்து நிற்கின்றது. அந்த வகையில் '03.10.96 அன்று வியாழக்கிழமை மரணித்த எமது மக்களுக்காய் அனுதாபம் செலுத்தும் முகமாகவும், நினைவு கூரும் முகமாகவும், இது போன்ற இனப்படுகொலையை கண்டிக்கும் முகமாகவும், அன்றைய நாளை கறுப்பு நாளாக- அதாவது, ஹர்த்தாலாக பிரகடனப் படுத்துமாறு உங்களை கேட்டுக் கொள்கின்றோம். எமது மக்களைப் பற்றி சிந்திப்பதற்கும் குரல் கொடுப்பதற்கும் எமது அரசியலில் வலுவான தலைவர்கள் இல்லை. எம் இன மக்களின் ஒடுக்கல்களையும், ஒழிப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய மக்களாகிய உங்களையே இப்போது சார்ந்து நிற்கிறது. எனவே, அன்றைய நாளில் தங்களை கடைகள், அலுவலகங்கள், பாடசாலைகளை மூடியும், கறுப்பு கொடிகளை பறக்க விட்டும் கடமைகளையும் பகிஷ்கரித்தும் எமது இந்த போராட்டத்துக்கு உதவுமாறு கேட்கின்றோம்.

"மக்களுக்காய் மக்கள் வாழ வேண்டிய காலம் வந்துவிட்டது. புரிந்துகொள் தமிழா!"

## முஸ்லிம் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள்!

**3.10.96** மட்டக்களப்பு மாணவர்கள் நடத்திய ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து முஸ்லிம் வர்த்தகர்கள் என்னும் பெயரில் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது:

முஸ்லிம் வர்த்தகர்கள் அனைவரையும் தங்களது வியாபார ஸ்தாபனங்களைப் பூட்டி வைத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இரு சமூகங்களுக்கிடையேயும் இடம் பெறும் படுகொலைகளை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் கட்டி எழுப்ப நாம் அனைவரும் ஒத்துழைப்போமாக.

இவ்வாறு அப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

## மன்னார் நிலவரம்

### பாண்விலை ஒன்பது ரூபாய்

(மன்னார் நிருபர்)

* மன்னார்ப்பகுதி பேக்கரிகளில் ஒரு இறாத்தல் பாணின் விலை ஒன்பது ரூபாவாகும்.
* ஜீ.ஏ.கியூ, ஜீ.சீ.கியூ. மாணவர்களின் நலன் கருதி வங்காலை உயர்கல்வி நிறுவகம் புதிய வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.
* மன்னார் நகரில் பாற்சாலை திறக்கப்பட்டு பால், நெய், தயிர் விற்பனை நடைபெற்று வருகின்றது.
* மன்னாரிலுள்ள புத்தக நிலையங்களில் சகல பயிற்சிப் புத்தகங்கள், வினா-விடை புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் எல்லாம் இரட்டிப்பான விலையில் விற்கப்படுகின்றன.
* மன்னார்- கற்பிட்டி பயண ஒழுங்கு விதிக்கட்டுப்பாடுகளில் தளர்வு கொண்டு வருமாறு பயணிகள் கோரியுள்ளனர்.
* அளவை நிறுவைகளில் மோசடி செய்யும் வியாபாரிகளின் தராசுகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.
* மன்னார் ச.தொ.ச.வில் அத்தியாவசியப் பொருட்களில்லை. இதனால் பொது மக்கள் அதிகவிலை கொடுத்து பொருட்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
* மன்னார் பஸ்நிலையத்தை மாலை 7 மணிக்குப் பின்னர் நாய்கள், பூனைகள், பன்றிகள், கழுதைகள், ஆடு, மாடுகள் ஆகியன ஆக்கிரமிக்கின்றன. காலையில் பிரயாணிகள் இரவில் பிராணிகள்!
* மன்னார்ப் பகுதியில் மரக்கறி வகைகளின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.
* தாராபுரத்திற்கண்மையிலுள்ள கோரைக் குளம் சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் தோண்டப்படவுள்ளது.
* உப்புக்குளம் பள்ளிவாசலுக்கு தொலைபேசி இணைப்பு கிடைத்துள்ளது.

## வரட்சி நிவாரணம் மறுப்பு!

## பத்தாயிரம் குடும்பங்கள் பாதிப்பு!

(திருமலை நிருபர்)

மூதூர், ஈச்சிலம்பற்றை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பெரும் போக விளைச்சலை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கடும் வரட்சி காரணமாக இருபோக வேளாண்மை முற்றாக நாசமானதைத் தொடர்ந்தே இந்த நிலை உருவாகியுள்ளது. எந்த விதமான நிவாரணங்களும் வழங்கப்படாத நிலையில் அன்றாட உணவுக்கே இவர்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. விதை நெல் ஒரு மூடை ஆயிரம் ரூபாவுக்கு வாங்கி விதைப்பை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என அவ்விவசாயிகள் கேட்கிறார்கள்.

பெரும்போக விளைச்சலுக்கு வங்கிகள் விவசாயக்கடன்கள் தந்துதவ முன்வந்தால் மட்டுமே விவசாயத் தொழிலை மேற்கொள்ளவோ தங்கள் குடும்பங்கள் வாழவோ முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக விவசாய அமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோருடன் சமூக சேவகர் எஸ். குணநாயகம் ஜே.பி. தொடர்பு கொண்டுள்ளார்.

## மீண்டும் தொலைபேசித் தொடர்பு

(கல்முனை நிருபர்)

தற்பொழுது தொடர்பற்று இருக்கும் கல்முனை தொலைத் தொடர்பு நிலையம் 1996.10.20 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்குமெனவும், ஏற்கனவே தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ள சுமார் 600 பேர் முதலில் பேசுவர் எனவும் அவ்வலுவலக பேச்சாளர் ஒருவர் தினமுரசுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தகவல் தருகையில் மட்டக்களப்பில் இருந்து பழைய ஒரு கண்டெயினர் கல்முனைக்குக் கொண்டு வரப்பட்டு முதலில் தொலைபேசிகளை இயங்க வைத்தபின்னர், படிப்படியாக புதிய ஒப்பந்த வேலைகள் முடிவுற்றதும், இவ்வருட இறுதிக்குள், விண்ணப்பித்த சகலருக்கும், தொலைபேசி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனிடையில் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள தொலைபேசிப் பாவனையாளர்கள், ரெலிகொம் நிறுவனம் கல்முனை தொலைத் தொடர்பினை விரைவுபடுத்தவில்லை என்றும், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் கல்முனையைப் பற்றி தொலைத்தொடர்பு அமைச்சர், பிரதியமைச்சர், பாராளுமன்றப் பிரதிநிதி, ஆகியோர் இதுவரை தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவ்வாறு எடுத்திருந்தால் சொற்ப காலத்தில் மக்களின் துயரம் நீங்கியிருக்கும் எனவும் குற்றஞ்சாட்டுகின்றனர். இதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த தொலைபேசிப் பாவனையாளர்கள் ஒரு நாளைக்கு 500/= ரூபாக்கு மேலாக தொலைபேசிக்காக செலவழிக்க வேண்டியுள்ளது எனவும் அம்பாறை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் சென்று அல்லது தனிப்பட்ட தொலைபேசிகளை வைத்து, கொள்ளை இலாபமீட்டுபவர்களுக்கு பணத்தை அள்ளிக் கொட்டவேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கின்றனர். தினமுரசு மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனம் கேட்டுக் கொண்டனர்.

## விதை நெல்லின்றி விவசாயம் பாதிப்பு!

### மட்டக்களப்பில் திண்டாட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் போகப் பயிற்செய்கைக்காக வயல்கள் உழப்பட்டு நெல் விதைப்பிற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இம்முறை விவசாயிகளுக்கு போதுமான விதைநெல் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

தொடர்ந்து வந்த அசம்பாவிதங்களினால் கடந்த பல ஆண்டுகளாகச் செய்கை பண்ணப்படாதிருந்த பல ஏக்கர் காணியையும் இம்முறை பயிர்ச் செய்கைக்குட்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்க அதிபர் ஏ.கே. பத்மநாதன் செய்திருக்கிறார். இருப்பினும் வழமையாகத் தேவைப்படும் 15000 புசல் விதை நெல்லில் மூன்றில் ஒரு பங்குதானும் இம் முறை கிடைப்பதற்கு இயலாதிருக்கிறது.

மட்டக்களப்புக்குத் தேவையான விதை நெல்லைச் சேகரிக்க முடியாமல் சிறுபோக அறுவடைகாலத்தில் மழை பெய்தது. மேலதிகமாகத் தேவைப்படும் விதை நெல்லை, பொலன்னறுவை, ஹிங்குராகொடை நெல்சந்தைப்படுத்தும் திணைக்களம் வழங்குவது வழக்கம். ஆனால் இம்முறை அத்திணைக்கள அதிகாரிகள் கை விரித்துவிட்டனர். விவசாயத் திணைக்களம் அம்பாறையிலிருந்து 5000 புசல் விதை நெல்லைப் பெற்றுத்தருவதாக வாக்களித்தது. இதையாவது உரிய வேளையில் கிடைப்பதற்கு முடியாமல் அம்பாறையிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை சாக்குப் போக்குச் சொல்லி வருகிறது.

## பட்டிருப்பில் புது 'டிப்போ'

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பிராந்தியத்தில் கேந்திர ஸ்தானமாகக் கருதப்படும் களுவாஞ்சிக்குடியில் இ.போ.ச. புதிய டிப்போ ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த பஸ் டிப்போவினால் பட்டிருப்புத் தொகுதி மக்கள்-குறிப்பாக மட்டக்களப்பு வாவியின் மேற்கேயுள்ள படுவாங்கரை வாழ் மக்கள்- இதுகாலவரை அனுபவித்து வந்த பிரயாண நெருக்கடிகள் வெகுவாகக் குறையும், என்று களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு.சா.முருகேசு ஜே.பி.தெரிவித்தார். டிப்போவுக்கான இடம் பட்டிருப்பில் அமைகிறது. இந்த டிப்போவுக்குத் தேவையான பஸ்களை பட்டிருப்பு பா.உ.பொன். செல்வராஜா பெற்றுத்தருவதாக வாக்களித்திருக்கிறார்.

## தவறான மறுப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தமிழில் அரசாங்கம் அனுப்பும் சுற்றுநிருபங்களை ஆங்கிலத்தில் மொழிமாற்றி அனுப்புகிறார் என்று முரசில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் தமிழ் மொழி அமுலாக்கத்தை நடை முறைப்படுத்த வேண்டியவரே அவ்வாறு செய்வது சரியாகாது என்பதே செய்தியின் சாரம்சம்.

அச் செய்தி தவறானது என்று வடக்கு-கிழக்கு மாகாணசபையின் அரச கரும மொழி நடைமுறைப்படுத்தல் உதவி ஆணையாளர் மறுத்திருந்தார். அந்த மறுப்பு கடந்தவாரம் முரசில் வெளியானது.

அவரது மறுப்பு உண்மையானதல்ல. வடக்கு-கிழக்கு மாகாண சபை தலைமைச் செயலாளரால் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட சுற்று நிருபம் முரசு நிருபரிடம் உள்ளது. முரசு வெளியிட்ட செய்தி முற்றிலும் சரியானது. ஆதாரபூர்வமானது. உதவி ஆணையாளர் அவசரப்பட்டு தலைமைச் செயலாளர் சார்பில் மறுப்பு வெளியிட்டதுதான் தவறானது. தவறுகள் திருத்தப்பட வேண்டுமே தவிர மூடிமறைக்க முற்படக்கூடாது. ஆ.ர்.


## விளம்பரப் பகுதி

**Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி**

Bright ன் தபால் மூலம் கல்வி

**புதிய வெற்றிக்கனி 1-10**

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.

புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

**Bright Book Centre (Pvt) Ltd**
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770

**ரெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை**
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு தபாற் செலவு இலவசம்

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770

**தபால் மூலம் கல்வி**

**ENGLISH - ஆங்கிலம்**

கீழ்வரும் ஆங்கில பாடநெறிகளை தபால் மூலம் வீட்டிலிருந்து கற்று சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெறவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக PRELIMINARY ENGLISH TEST (PET)

ஆங்கில அறிவு அறவே இல்லாதவர்கள் கூட ஒரு வருடத்தில் ஆங்கிலத்தை முழுமையாக கற்று இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சான்றிதழைப் பெறலாம்.

(2) LONDON G.C.E O/L
(I) English Language
(II) English Literature

ஆங்கில அறிவு அறவே இல்லாதவர்கள் கூட ஒரு வருடத்தில் ஆங்கிலத்தை முழுமையாக கற்று இலண்டன் பல்கலைக்கழக சான்றிதழ்களைப் பெறலாம்.

ஒலி நாடாக்கள் (கசட்டுக்கள்) மூலம் ஆங்கில உச்சரிப்பு முறைகள் கற்பிக்கப்படும்.

விபரங்களை சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட நீள கடிதவுறையை 31. 10. 96 க்கு முன் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்

**EXTERNAL STUDIES ACADEMY**
**P.O. BOX. 660, COLOMBO.**

**Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்.................................
விலாசம்.............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஒக்டோபர் 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST..) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 நவம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஒக்டோபர் 12, 13, 14 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 33 TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மூன்றாம் தரப்பின் தலையீடு!

நாரதர்

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை புலிகள் கேட்டால் அரசாங்கம் அதனைப் பரிசீலிக்கும்"- 'ஃபுரொன்ட்லைன்' பத்திரிகைக்கு ஜனாதிபதி பேட்டியளித்திருந்தார்.

அப்பேட்டி வெளியானதும் அரசாங்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு தயாராகிவிட்டது. பேச்சுவார்த்தைக் கதவு திறக்கப்பட்டுவிட்டது என்று ஒருசாரார் கூறினார்கள்.

இன்னொரு சாரார், புலிகள் இயக்கத்தினரின் தாக்குதல்கள் காரணமாக அரசாங்கம் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. எனவேதான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றனர்.

ஆனால், உண்மை நிலவரம் மேற்குறிப்பிட்ட இரு சாராரின் கருத்துக்கும் அப்பாற்பட்டது: அதாவது நேர்மாறானது.

கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்க முன்னர் பூவா தலையா போட்டுப்பார்ப்பார்கள். அதனைவைத்துத்தான் யார் 'பேட்டிங்', யார் 'போலிங்' என்று தீர்மானிக்கப்படும்.

'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகையிக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியும் அப்படித்தான்.

'ஃபுரொன்ட்லைன்' தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகை. அதன் ஆசிரியர் என்.ராம்.

'ஃபுரொன்ட்லைன்' சார்பாக ஜனாதிபதியைப் பேட்டி கண்டவர் ராம் மாணிக்கலிங்கம். இவர் இலங்கையைச் சேர்ந்தவர். ஆனால் 'ஃபுரொன்ட்லைன்' நிருபரல்ல.

'ஃபுரொன்ட்லைன்' ஆசிரியர் என். ராமும், ராம் மாணிக்கலிங்கமும் நண்பர்கள்.

என். ராம் ஒரு காலத்தில் புலிகளை வெகு தீவிரமாக ஆதரித்தவர். ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் புலிகளை வெகு தீவிரமாக எதிர்த்து வருகிறார் ராம்.

ராம் மாணிக்கலிங்கம் ஜனாதிபதியுடன் அரசியல் ரீதியாக நெருக்கமானவர். புலிகள் இயக்கம் தொடர்பாக எதிரான அபிப்பிராயம் உடையவர்.

புலிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள் என்பவற்றுக்கு புறம்பான மூன்றாவது சக்தியொன்றை தமிழ் மக்களிடம் உருவாக்கமுடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டமைக்கு காரணகர்த்தாக்களில் ஒருவர் ராம் மாணிக்கலிங்கம்.

அவர்தான் ஜனாதிபதியைப் 'ஃபுரொன்ட்லைன்' சார்பாக பேட்டி கண்டுள்ளார்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய தப்பான அபிப்பிராயங்களைப் போக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே அப்பேட்டியை ராம் மாணிக்கலிங்கம் ஏற்பாடு செய்தது போலத் தெரிகிறது. தொடுக்கப்பட்ட கேள்விகளும் அவ்வாறுதான் இருக்கின்றன.

'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகையின் நிருபர் ஒருவரே ஜனாதிபதியைப் பேட்டி கண்டிருக்க முடியும். வேண்டுமானால் அதற்கான ஏற்பாட்டை செய்துவிட்டு ராம் மாணிக்கலிங்கம் ஒதுங்கியிருந்திருக்க லாம்.

ஆனால் ராம் மாணிக்கலிங்கம் தானே நேரடியாக இறங்கி அடித்தாடக்கூடிய பந்துகளாகப் போட்டுக்கொடுக்க, ஜனாதிபதியும் பவுண்டரி, சிக்ஸர் என்று விளாசியிருக்கிறார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான கேள்வியைக்கூட 'புலிகள் தாமாகவே விரும்பிக்கேட்டால் அர்சாங்கம் எவ்வாறு நடந்துகொள்ளும்' என்ற ரீதியில்தான் எழுப்பியுள்ளார்.

அக்கேள்வியை வேறு ஒரு முறையிலும் கேட்டிருக்கலாம்.

"இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு அரசாங்கம் முன்வந்து புலிகளையும் அதற்கு இணங்குமாறு அழைப்பு விடுப்பீர்களா?" என்று கேட்டிருக்கலாம்.

அப்படிக்கேட்டிருந்தால் பதில் சொல்வதில் ஒரு சிரமம் உண்டு.

'ஆம்' என்று சொன்னால் 'யுத்தம் மூலமே சமாதானம். புலிகளை தோற்கடித்தே தீருவோம்' என்று அரசாங்கம் கூறிவரும் கருத்து பலவீனமாகிவிடும். யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு கிடையாது என்று விமர்சனங்கள் எழும்.

'இல்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை. புலிகளை நாம் தனியாக கவனித்துக்கொள்வோம்' என்று நேரடியாகப் பதில் சொன்னால், வெளியுலகில் அரசாங்கத்தின் மீதுள்ள 'சமாதானத்தை விரும்பும் அரசு' என்ற 'இமேஜ்' கெட்டுவிடும்.

உள்நாட்டில், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற்றுவரும் அரசாங்கம் என்ற 'இமேஜை' காப்பாற்றியாக வேண்டும்.

வெளியுலகில், சமாதானத்தை விரும்பி, வேறு வழியில்லாமல் புலிகளுடன் யுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள அரசாங்கம் என்ற 'இமேஜை' காப்பாற்றியாக வேண்டும்.

உள்நாட்டில் தமது 'இமேஜை' அரசாங்கம் காப்பாற்றியாக வேண்டுமானால் புலிகளுடன் தாமாக பேச்சுவார்த்தைக்கு செல்ல முடியாது. பேச்சுக்கு வருமாறு புலிகளை உடனடியாக அழைக்கவும் முடியாது.

வெளியுலகில் தனது இமேஜை' காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால், பேச்சுவார்த்தைகளுக்கு முற்று முழுதாக மறுப்புத் தெரிவிப்பதாக காட்டிக்கொள்ளக்கூடாது.

இந்த நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே 'ஃபுரொன்ட்லைன்' பேட்டியில் கேள்விகளும், அதற்கான பதில்களும் அமைந்துள்ளன.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பிரபாகரன் கோரினால் அரசு பரிசீலிக்கத் தயார்' என்று ஜனாதிபதி கூறியிருப்பதும் பூவா? தலையா? விவகாரம்தான்.

பூ விழுந்தால் 'பேட்டிங்', தலை விழுந்தால் 'போலிங்'.

அதாவது, 'ஃபுரொன்ட்லைன்' பேட்டியைப் பார்த்துவிட்டு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார் என்று பிரபாகரன் அறிவித்தால், அது புலிகள் பந்துவீச ஆரம்பித்தது மாதிரிதான்.

உடனே அரசாங்கம் துடுப்பெடுத்தாட ஆரம்பிக்கும். 'புலிகள் பலவீனமாகிவிட்டார்கள். அதனால்தான் தாமாக வந்து மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை என்றெல்லாம் கோரிக்கை விடுக்கிறார்கள். இது யுத்தத்தில் கிடைத்த பலன்தானே' என்று அரசாங்கம் சொல்லமுடியும். அதன் மூலம் ஒரு சிக்ஸர் அடித்துவிடலாம்.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இப்போது தேவையில்லை' என்று புலிகள் மறுத்தால், அரசாங்கம் பந்து வீச ஆரம்பிக்கும். புலிகள் உலக நாடுகளைக்கூட நம்பத் தயாராக இல்லை. இவர்களோடு போர் செய்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று அரசாங்கம் சொல்லும். வெளியுலகில் புலிகள் 'கிளீன் போல்ட்'டாகிவிடுவார்கள்.

எக்கருத்தும் கூறாமல் புலிகள் மௌனமாக இருந்தாலும் அரசாங்கத்திற்கு சாதகம்தான். நாம்தான் முன்னரே சொல்லிவிட்டோமே, புலிகள்தான் விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ளலாம்.

புலிகளுக்கும் 'பேட்டிங் செய்வதா? 'போலிங்' செய்வதா? என்று உடனடியாகத் தீர்மானிப்பதில் சிரமங்கள் இருக்கின்றன.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார் என்று உடனடியாக புலிகள் அறிவித்தால் அந்த 'மூன்றாவது தரப்பு எது?' என்ற கேள்விக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

தற்போதைய நிலையில் இந்தியாவில் தமக்குச் சாதகமான நிலை ஒன்றையே புலிகள் விரும்புகின்றனர்.

தமிழ் நாட்டுக்கு அகதிகள் செல்வதற்கு புலிகள் அனுமதித்தமைக்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

எதிர்பார்த்ததுபோலவே அகதிகள் பிரச்சனை தமிழக அரசுக்கு தர்மசங்கடத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் 'இந்திய மத்திய அரசு தலையிட்டு இலங்கை அரசுடன்' பேச வேண்டும் என்று கூறிவருகிறார்.

இந்நிலையில் 'இந்தியா' தவிர்ந்த மூன்றாம் தரப்பொன்றின் பெயரைச் சொல்வது புலிகளைப் பொறுத்தவரை இராஜதந்திரமாகாது.

அவ்வாறு இந்தியாவை மீண்டும் புலிகள் ஓரம்கட்டினால் இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் ஒருபடி வளரவே செய்யும். அரசாங்கம் அதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும்.

## குறுக்கிடும் இரு தரப்புகள்!



எனவே 'மூன்றாம் தரப்பு' மத்தியஸ்த விடயத்தில் புலிகள் உடனடியாக தடாலடியான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கப் போவதில்லை. குறிப்பாக பிரபாகரன் நேரடியாகக் கருத்துக் கூறப்போவதில்லை.

அதனை உணர்ந்துதான் 'பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரினால்...' என்று கேள்வி தொடுக்கப்பட்டுள்ளது.

'மூன்றாம் தரப்பு' மத்தியஸ்தம் தொடர்பாக புலிகள் மறுப்புத் தெரிவிக்கப்போவதில்லை. அமெரிக்கா விரும்பினால் இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்யலாம் என்று விடுதலைப் புலிகள் பத்திரிகையில் சிலமாதங்களுக்கு முன்னர் ஆசிரியர் தலையங்கம் வெளியாகியிருந்தது.

இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதவி செய்வதை தடுக்கும் வகையில் புலிகள் தெரிவித்த கருத்தே அதுவாகும்.

உண்மையில் அரசும், புலிகளும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற விடயத்தை 'வெளியுலகம்மீது நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.' என்று காட்டிக்கொள்ளவே பயன்படுத்துகின்றனர்.

இரு தரப்பில் ஏதாவது ஒரு தரப்புக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்த விடயத்தில் உண்மையான அக்கறைகாட்டினால் அதற்கான முயற்சிகளில் ஈடுபட பல வாய்ப்புக்கள் உள்ளன.

'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு ஜனாதிபதி பேட்டி கொடுத்த பின்னர்தான் பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் டாக்டர் ஸியாம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அரசும், புலிகளும் விரும்பினால் மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் தயார் என்று பகிரங்கமாகவே அவர் கூறியிருந்தார். அவரது கருத்து தமது காதில் விழுந்தது போலவே அரசாங்கம் காட்டிக்கொள்ள வில்லை. புலிகளும் அது தொடர்பாக மூச்சு விடவில்லை.

ஆக, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு அழைப்புமில்லை, மறுப்புமில்லை என்ற நிலையில்தான் இருதரப்புமே இருக்கின்றன.

இருதரப்போடும் சம்பந்தப்படாதவர்கள்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமது விருப்பப்படி மூன்றாம் தரப்பாக செயற்படக் கூடிய நாடுகளின் பெயர்களையும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய நிலையில் மூன்றாம் தரப்பாக மத்தியஸ்தம் செய்ய விரும்பும் எந்தவொரு நாட்டுக்கும் இரு தரப்பின் சம்மதமும்தான் தேவை.

சம்மதம் கிடைத்தால் எந்த நிலையில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க இரு தரப்பும் விரும்புகின்றன என்பது அடுத்த கேள்வியாக இருக்கும்.

'வடக்கில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து திரும்பிச் சென்றால்தான் பேச்சுவார்த்தை' என்பது புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு.

'புலிகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளத்தக்க நிலை ஏற்படாது என்று உத்தரவாதம் இருந்தால்தான் பேச்சு நடத்தலாம்' என்கிறார் ஜனாதிபதி சந்திரிக்கா.

இந்த இரு நிலைப்பாடுகளும் மூன்றாம் தரப்பொன்றால் தீர்வு காண முடியாத விடயங்கள்.

யாழ் குடாநாட்டில் இருந்து படையினர் திரும்பிச் செல்ல வேண்டும் என்று மூன்றாம் தரப்பு எதுவும் அரசாங்கத்தைக் கோரமுடியாது. புலிகளுக்கும் படையினருக்குமான பலப்பரீட்சை மூலம் தீர்வு காணவேண்டிய பிரச்சனையே அதுவாகும்.

அதுபோல பேச்சுவார்த்தைக் காலத்தில் இருதரப்பும் மோதல்களில் ஈடுபடக்கூடாது என்று மட்டுமே மூன்றாம் தரப்பு சொல்ல முடியும். இரு தரப்பும் தமது அணிகளைப் பலப்படுத்தும் விடயத்தில் மூன்றாம் தரப்பு தலையிட முடியாது.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் நியாயமான ஒரு தீர்வை எட்டுவதற்குத்தான் மூன்றாம் தரப்பினர் மத்தியஸ்தம் வகிக்கலாமே தவிர, இரு தரப்பின் பலம், பலவீனம் தொடர்பான விடயங்களில் மூக்கை நுளைக்க எந்தவொரு நாடும் விரும்பாது.

எனவே இரு தரப்பின் நிபந்தனைகளும் மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்துக்கு ஏற்றதாக இல்லை.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இரு தரப்பும் சம பலமாக இருக்கும்வரை, அந்த சம பலம் இழக்கப்படுவதை இரு தரப்புமே விரும்பாது. இரு தரப்பில் ஒரு தரப்பு பலவீனமாகும் கட்டம் ஏற்பட்டால்தான் நிபந்தனைகளில் தளர்வுகள் ஏற்படும். 'விழுந்தும் மீசையில் மண் படவில்லை' என்ற கதையாக நிபந்தனைகள் விடயத்தில் ஒரு உடன்பாட்டுக்கு வரக்கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு யுத்தத்தில் முன்னைய அரசாங்கங்களைவிட தாம் மட்டுமே உறுதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்துகொள்வதாக காட்டிக் கொள்ளவே விரும்புகிறது.

அடுத்த தேர்தலில் அரசாங்கம் தனது வெற்றிக்கு நம்பியிருக்கும் துருப்புச் சீட்டும் அதுதான்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டால் அரசுக்கு லாபமா? நஷ்டமா? என்று பார்த்தால் நஷ்டம்தான்.

இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள யோசனைகள் தமிழ் கட்சிகளால் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. திருப்தி கொடுக்க வில்லை. ஆனால் அந்த யோசனைகளைக் கூட இனவாதிகள் எதிர்த்து வருகிறார்கள்.

எனவே இந்த யோசனைகளை வைத்துக் கொண்டே தடுமாறும் அரசாங்கத்தால் இதற்கு மேலான ஒரு தீர்வுக்கு செல்ல முடியாது.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு ஒன்று தலையிடுமானால் தற்போதைய யோசனைகளில் உள்ளதைவிட மேலும் சில விடயங்களை சேர்க்க வேண்டி ஏற்படலாம். அதனால் அரசுக்கு அரசியல் ரீதியில் பாதகங்கள் ஏற்படும்.

இந்திய-இலங்கை ஒப்பந்த நேரத்தில் ஜே.ஆர். இலங்கை மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று பிரசாரம் செய்தது சிறீலங்கா சுதந்திரக்கட்சி.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அடிப்படையில் தற்போதுள்ள தீர்வு யோசனைகளுக்கு மேலான ஒன்றை அரசாங்கம் வழங்கவேண்டி ஏற்பட்டால் எறிந்த பந்து திரும்பி வரும்.

முன்னர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி கூறிய அதே குற்றச் சாட்டை ஐக்கிய தேசியக்கட்சி திருப்பிச் சொல்லும்.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் தவிர்க்கக்கூடிய நிபந்தனைகளையே அரசாங்கம் முன்வைக்கும்.

புலிகளைப் பொறுத்தவரை தலையே போனாலும் சமஷ்டிக்கு குறைந்த ஒரு தீர்வுக்கு அவர்கள் முன்வரமுடியாது. வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் விட்டுக்கொடுக்கவும் முடியாது.

தற்போதைய நிலையில் வடபகுதியில் யாழ் குடாநாட்டிலும், கிளிநொச்சி நகரிலும் புலிகள் தமது பிடியை இழந்துள்ளனர். மரபுப் போர் முறையில் ஏற்பட்ட பின்னடைவுகளே அவையாகும்.

எனினும் கெரில்லா போர் முறை மூலமாக வடக்கில் நிலைகொண்டுள்ள படையினரை பொறிக்குள் சிக்கவைக்க முடியும் என்பதே புலிகளது நம்பிக்கையாக இருக்கிறது.

கரும்புலிகள் அணியில் நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் தமக்கு சாதகமான நிலை ஏற்படும். படையினரது நடவடிக்கைகள் காரணமாக புதிய உறுப்பினர்களும் பெருமளவில் தமது அணிகளுக்கு வருவார்கள் என்பதே புலிகளது நம்பிக்கை.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு ஒன்று தலையிட்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் போன்ற ஒரு தீர்வுக்கு நிர்ப்பந்தித்தால் தமது இயக்க உறுப்பினர்களின் உத்வேகம் பாதிக்கப்படலாம். நிர்ப்பந்தத்துக்கு பணிய மறுத்தால் வெளியுலகில் கெட்ட பெயர் ஏற்படலாம். மூன்றாம் தரப்பாக வரும் நாடுகளை பகைக்க வேண்டியும் ஏற்படலாம் என்றே புலிகள் நினைப்பார்கள்.

குறைந்த பட்சம் வடக்கு-கிழக்கில் தமது பலம் தற்போதுள்ளதைவிட மேலோங்கும் நிலைவரையாவது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை தவிர்க்கவே புலிகள் விரும்புவார்கள்.

எனவே-மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் உடனடியாக ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படவில்லை.

எனினும் என்றோ ஒருநாள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று ஏற்பட்டேயாகும். எதிர்கால யுத்த முனை நிலவரங்கள்தான் அதற்கான அவசியத்தை உருவாக்குமே தவிர, தற்போதைய அரசியல் அணுகுமுறைகள் அல்ல. கசப்பாக இருந்தாலும் உண்மை நிலவரம் அதுதான்.

போரிடும் இரு தரப்புக்களில் ஒரு தரப்பு யுத்தம் தொடர்வதைக் காட்டிலும் அதனை நிறுத்துவதே தனது அரசியல்-இராணுவரீதியான வீழ்ச்சியைத் தடுக்கும் என்ற கட்டத்துக்கு சென்றாக வேண்டும். அப்போதுதான் அவமானகரமான தோல்வியைவிட சமாதானம் செய்து கொள்வது பரவாயில்லை என்ற ஞானோதயம் பிறக்கும். அந்த ஞானோதயம்தான் மூன்றாம் தரப்பின் தலையீட்டுடன் பேச்சு நடத்தும் கதவைத் திறக்கவைக்கும்.

---

# அதிரடி அய்யாத்துரை



திருவானமலையின் தங்கமானவர் அதிகாரத் தரப்பினரின் பின்னாலும் முன்னாலும் அலைந்து வேலைவாய்ப்புக்கள் பெறுவதில் கில்லாடி. சென்ற வாரமும் அது பற்றிக் கூறியிருந்தேன். இந்தவாரம் ஒரு சோகமான செய்தி சொல்லப்போறன். தங்கமானவரின் சிபாரிசால் தகுதியில்லாத நாலு பேருக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் உத்தியோகம் கிடைத்திருப்பது பற்றி 'முரசு' முன்பு செய்தி வெளியிட்டது ஞாபகமிருக்கலாம். அந்த நாலுபேருக்கும் பதவி நீக்க உத்தரவை பக்குவமாகக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிப்போட்டார்களாம். தங்கமானவர் அங்கே இங்கே இலட்சிய வேட்கையுடன் ஓடிப்பார்த்தும் ஒரு புண்ணியமும் இல்லையாம்.

அம்பாறை மாவட்டத்தில் 'சமுர்த்தி' வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு கொடுக்கப்பட்டதை முதலில் இடைநிறுத்தி வைத்தவர் கூட்டான கட்சி சார்பில் அங்கு சென்ற முறை போட்டியிட்ட சேனாதிபதியார்தானாம். தனது ஆதரவாளர்கள் பட்டியல் ஒன்றை மேலிடத்துக்கு கொடுத்திருந்தவராம். வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் பட்டியலில் அவர் சிபாரிசு செய்த ஆட்களின் பெயர் இருக்கவில்லை. உடனே பிடிக்க வேண்டியவர்களைப் பிடிச்சு அந்தப் பட்டியலை கிடப்பில் போடவைத்து சாதனை படைத்தாராம் சேனாதிபதியார். வாழ்க, பொதுநலம்.

மீன்பாடும் தேனாட்டில் அரசியல்வாதிகள் பலர் இருந்தும், அவர்களுக்கு வசதிகள் பல இருந்தும் மாணவர்கள் ஹர்த்தால் நடத்தியிருக்கினம். இரு சமூகங்களும் ஹர்த்தால் நடத்த ஒத்துழைச்சதை நினைத்து சில அரசியல்வாதிகளுக்கும் வயிற்றெரிச்சலாம். சனம் அடிபட்டால்தானே ஒவ்வொரு பக்கமாய் நிண்டு தூண்டிவிட்டுப்போட்டு அடுத்த தேர்தலில் 'நான் உங்கள் நண்பன்', எண்டு வேண்டி விரும்பி வாக்குக் கேட்கலாம்.

சம்பத்திய வடபுலப் பலப்பரீட்சையில் வெளியே சொல்லப்பட்டதை விட 'ஸ்கோர்' அதிகம் எண்டுதான் கதை. அதெல்லாம் இருக்கட்டும், சம்பத்திய ஒப்பரேசனை மக்களை விடுவிக்கும் பணி எண்டு வானொலி விளக்கம் கொடுக்குது. ஒரேயொரு நாய் மட்டும்தான் (அதுவும் தப்பித் தவறிதான்) நிண்டது எண்டு பாதுகாப்பு தரப்பினர் கூறுகினம். மக்களை விடுவிக்கும் நடவடிக்கை எண்டு வானொலி கூறுவதற்கு என்ன அர்த்தம் எண்டு எனக்கு புரியேல்லை. வானொலியின் அகராதியில் மக்கள் என்றால் என்ன அர்த்தம்?

தமிழ் கட்சிகளில் ஜனநாயகக் கட்சித் தலைவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்படப்போவதாக சென்றவாரம் செய்திகள் அடிபட்டது. எல்லாம் அட்டகாசமான வதந்தியாம். ஆங்கில பத்திரிகை ஒண்டு கிளப்பிவிட்ட சூப்பர் வதந்திதான் பரவியதாம். இப்பெல்லாம் செய்திகளைவிட வதந்திகளுக்குத்தான் கலாதியான மரியாதை.

அவுஸ்திரேலியாவில் முன்னர் இருந்த அரசாங்கம் ரெண்டு எழுத்தாருக்கு சார்பானதாக இருந்தது. தற்போதைய அரசாங்கம் முகம் சுளிக்குதாம். சமயம் பார்த்து வெளிநாட்டு விவகாரத்துக்கு பொறுப்பானவரும் ரெண்டு எழுத்தார் தொடர்பான மாறுபட்ட அபிப்பிராயத்துக்கு கொம்பு சீவி விட்டுப்போட்டாராம். முன்பிருந்த வெளிநாட்டு விவகார பொறுப்பானவர்களை எல்லாம் மிஞ்சும்வகையில் தற்போதுள்ள 'கதிர்' சூறாவளிப் பிரசாரம் செய்கிறார். ரெண்டு எழுத்தார் அவர்மீது கடும் கசப்பில் இருக்கிறார்களாம். ரெண்டு எழுத்தாரின் ஆஸ்தான கவிஞர் 'ரத்தினத்தார்' எழுதும் ஒவ்வொரு கவிதையிலும் 'கதிர் பெயருக்கும் மறக்காமல் அர்ச்சனை செய்யப்படுகிறது.

கிழக்கில் சமூக மோதல் தூண்டிவிடப்பட்ட நேரத்தில் ஒரு தமிழ் இயக்கம் எரியும் நெருப்பில் எண்ணெய்விடுவதுபோல செயற்பட்டதாம். ஏறாவூரில் நிதி கேட்டு கைவரிசையைக் காட்டினவையாம். நேரம் காலம் பார்த்து காரியம் செய்யும் குணம் இல்லாமல் போகலாமோ? சனம் முதலில் ரெண்டு எழுத்தார் எண்டு நினைச்சு பதட்டமாகி பின்னர் உண்மை விளங்கி அடக்கமானதாம்.

குடாநாட்டு நிலவரம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைதான் எண்டு சனங்கள் ரொம்ப கவலைப்படுகினம். ரெண்டு எழுத்தார் சர்வசுதந்திரமாக நடமாடுகினமாம். தகவல் கொடுக்கும் ஆட்களின் வீட்டுக் கதவுகளை நள்ளிரவில் தட்டி முதல் எச்சரிக்கை விடப்படுகிறதாம். மறுதரப்பாரோ ரெண்டு எழுத்தார் எண்டு வாட்டசாட்டமான இளம் தரப்பார்மீது வலைவீசிக்கொண்டிருக்கினமாம். மற்றொரு தகவல், காணாமல் போன 'கிருசாந்தி' எண்ட மாணவி துணிச்சலானரகம். எதிர்த்துப் பேசக்கூடியவராம். அதுதான் வினையாக முடிஞ்சதோ?

சென்றவார கவிதையை எழுதிய தரு மு சிவராமு தமிழ்நாட்டுக் கவிஞர் எண்டு குறிப்பிட்டிருந்தேன். தவறுங்கோ. அவர் தமிழ்நாட்டில் தற்போது வசித்தாலும் பிறந்தது திருமலையில்! இந்தவாரக் கவிதை புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு சொந்தம்.

"கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# மகிழ்ச்சி வெள்ளத்தில் இந்தியப் படைகள்!

### சுட்டுத்தள்ள உத்தரவு

ராஜீவ் காந்தியின் வருகை இலங்கையில் இருண்டயுகத்தின் ஆரம்பம் என்று ஒப்பந்தத்துக்கு எதிரான தென்பகுதியினர் விபரித்தனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்த விடயத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் துணிச்சல் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்று முடிவு செய்தபின்னர் அதற்கெதிரான சக்திகளின் எதிர்ப்பைக் கண்டு ஜே.ஆர். அஞ்சவில்லை.

தனது கட்சிக்குள் பிரேமதாசா போன்ற சக்திமிக்க தலைவர்களின் எதிர்ப்பு ஏற்படும் என்று தெரிந்தபோதும் அதனையும் எதிர்கொள்ள அவர் தயாரானார்.

கொழும்பிலும் ஆர்ப்பாட்டங்கள் பாரியளவில் நடைபெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்களை கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளுமாறு உத்தரவிட்டார் ஜே.ஆர்.

கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களது உடல்களை அள்ளிக்கொண்டுபோய் பிரேத அறையில் போட்டார்கள்.

வெளியே சொல்லப்பட்ட கணக்கை விட சுட்டுக்கொல்லப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகம்.

பௌத்த மதகுருமாரின் உடையுடன் வந்தவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பிரேத அறையில்வைத்து அவர்களது உடைகளைக் களைந்த பொலிசாருக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

மதகுருமார் அணியும் அங்கிகளின் உள்ளே டெனிம் ஜீன்ஸ் அணிந்திருந்தனர். பின்னர்தான் விபரம் தெரிந்தது. அவர்கள் பௌத்த குருமார்களல்ல.



பௌத்த குருமார்களும் ஒப்பந்தத்தை எதிர்க்கிறார்கள் என்றால் மக்களுக்கும் உணர்ச்சி ஏற்படும். அதற்காகவே ரவுடிகள் சிலருக்கு மதகுருமார் அணியும் அங்கிகளைப் போட்டு ஆர்ப்பாட்டத்தில் இறக்கிவிட்டார்கள்.

இந்த அபாரமான திட்டத்தின் பின்னணியில் அநுரா பண்டாரநாயக்காதான் இருந்திருக்கலாம் என்று நம்பப்பட்டது.

இதேபோல மற்றொரு சம்பவம். கொழும்பில் ஊரடங்கு போடப்பட்டிருந்தது. தெகிவளையில் இருந்து ஒரு கும்பல் புறப்பட்டு வந்தது.

அந்தக் கும்பலை தடுத்து நிறுத்தினார்கள் இராணுவத்தினர். கும்பலின் தலைவனை இராணுவக் கப்டனுக்கு நன்கு தெரியும். 'குடுக்காரன்' என்று அழைக்கப்படும் போதைப்பொருள் பாவிக்கும் ஒருவன்தான் கும்பலின் முன்னால் நின்றான்.

இராணுவக் கப்டன் அந்தக் குடுக்காரனை "திரும்பிப் போய்விடு, உனக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? நீ ஒரு குடுக்காரன்" என்று எச்சரித்தார்.

குடுக்காரன் கேட்கவில்லை. "சுடு பார்ப்போம்!" என்றுவிட்டு தடையைத் தாண்ட முற்பட்டான்.

இராணுவக் கப்டன் உடனே சுட்டார். கும்பல் காணாமல் போனது. குடுக்காரன் பலியானான்.

அரசாங்கமும் பாதுகாப்புப்படையினரும் கலவரங்களை ஒடுக்கவேண்டும் என்னும் கண்டிப்போடும், உறுதியோடும் செயற்பட்டால் அடக்கிவிடலாம் என்பதற்கு, ஒப்பந்தத்துக்கு எதிரான கலவரங்கள் அடக்கப்பட்டமையும் ஒரு உதாரணம்.

### தாக்குதல்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் ராஜீவ் காந்தி நாடு திரும்ப ஆயத்தமானார்.

இலங்கைக் கடற்படையின் அணிவகுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா விடுத்த அழைப்பை ராஜீவ் காந்தி ஏற்றுக்கொண்டார்.

அணிவகுப்பு மரியாதை ஆரம்பமானது. கடற்படைத்தளபதியும், ராஜீவ் காந்தியின் மெய்ப்பாதுகாவலர்களும் ராஜீவுடன் கூடவந்தனர்.

விஜிதமுனி ரோகன டி சில்வா, 19 வயதான அந்த கடற்படைவீரன் இதயம் படபடக்க தன்னைக் கடக்கப்போகும் ராஜீவ் காந்தியை தலையில் அடித்துச் சாய்க்கத் தயாராக நின்றான்.

முக மலர்ச்சியுடன் அணிவகுப்பைப் பார்வையிட்டபடி வந்தார் ராஜீவ் காந்தி.

ராஜீவ் காந்தி இளைஞர். துடிப்பாவனர். விமான ஓட்டியாக இருந்தவர். அதனால் அவதானமும் அவரது இரத்தத்தில் ஊறியிருந்தது.

அணிவகுப்பை பார்வையிட்டபடி நடந்து சென்று கொண்டிருந்த ராஜீவ் காந்திக்கு தனக்கு பக்கவாட்டில் யாரோ அசைவது போலத் தெரிந்தது.

கடற்படைத்தளபதியோ, மெய்ப்பாதுகாவலர்களோ அணிவகுப்பில் நேர்பார்வை பார்த்துக்கொண்டிருந்த வீரர்களோ அந்த அசைவைக் கவனிக்க முன்பாக ராஜீவ் உணர்ந்துவிட்டார்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அணிவகுப்பில் இருந்து முன்நோக்கி நகர்ந்து தனது ரைபிளின் பின்பகுதியை ராஜீவின் தலையை குறிவைத்து ஓங்கி அடித்தான் விஜிதமுனி.

அதேநேரம் தனது உணர்வுக்கு ஏற்ப தலையை முன்பக்கமாக வளைத்து குனிந்தபடி முன்னால் நகர்ந்தார் ராஜீவ் காந்தி.

அதனால் அடி குறி தவறியது.

ராஜீவ் காந்தியின் பின் கழுத்துப் புறத்திலும் தோளிலும்தான் அடிபட்டது.

அடி குறிதப்பியதாலும், ராஜீவ் காந்தி கீழே விழாததாலும், திட்டமிட்டபடி விஜிதமுனியின் கூட்டாளிகளான ஏனைய இரு கடற்படைவீரர்களும் செயற்படவில்லை.

ராஜீவ் கீழே விழுந்திருந்தால் அவர்கள் இருவரும் பாய்ந்து துப்பாக்கியின் 'பேனற்' கத்தியினால் குத்துவது என்பதுதான் திட்டம்.

### புகைப்படம்

அணிவகுப்பில் ராஜீவ் காந்தி தாக்கப்பட்ட செய்தி இலங்கையில் பீதியையும், இந்தியாவெங்கும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

ராஜீவ் காந்தி தாக்கப்பட்டதால் இந்தியப் படைகள் கொழும்புக்குள் புகுந்துவிடுமோ என்று எங்கும் பீதி நிலவியது.

ராஜீவ் காந்தி எதிர்பாராமல் தாக்கப்பட்ட அந்த நொடிகளில் அதனை கச்சிதமாகப் படமெடுத்து பாராட்டுப் பெற்றவர் லேக்ஹவுஸ் புகைப்படப் பிடிப்பாளர்.

அப் புகைப்படத்துக்கு பயங்கர மவுசு. எவ்வளவு பணம் கொடுத்தாயினும் அப் புகைப்படத்தைப் பெறுவதற்கு வெளிநாட்டுப் பத்திரிகைகள் போட்டி போட்டன.

லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் அவர் பணியாற்றியதால் வேறு நிறுவனங்களுக்கு புகைப்படத்தைக் கொடுக்க முடியாது.

எனினும் ரோய்டர் செய்தி நிறுவனம் கிட்டத்தட்ட 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து அப் புகைப்படத்தைப் பெற்றுக்கொண்டது.

குறிப்பிட்ட புகைப்படப்பிடிப்பாளரை பின்னர் அதிக சம்பளம் தருவதாகக் கூறி ஃபிரான்ஸ் செய்தி நிறுவனமான ஏ.எஃப்.பி. தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இத்தனைக்கும் குறிப்பிட்ட புகைப்படப் பிடிப்பாளர் லேக்ஹவுஸில் பியோனாக வேலைபார்த்தவர். புகைப்படப்பிடிப்பாளராக அவர் விரும்பியதால் அந்த வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

புகைப்படப்பிடிப்பாளர் வேலையில் சேர்ந்தபின்னர் அவர் முதன் முதலாக படமெடுக்கச் சென்றது ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்ட அணிவகுப்புக்குத்தான்.

ராஜீவ் தாக்கப்பட்டதால் அவருக்கு அடித்தது அதிஷ்டம். இவ்வாறான சுவாரசியமான சம்பவங்களும் நடைபெறுவதுண்டு.

### படைகள் வந்தன

ஒப்பந்தம் கைச்சாத்தான மறுநாள் ஜூலை 30ம் திகதி இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் இறங்கின.

இந்தப் படை இறக்கத்திலும் இந்திய இராணுவம் ஒரு பரீட்சார்த்த முயற்சி செய்து பார்க்கத் தவறவில்லை.

வான்மூலமும், கடல்வழியாகவும் எத்தனை வேகமாக படையை தரை இறக்க முடிகிறது என்று பரீட்சித்துப் பார்த்தது இந்திய இராணுவம்.

ஜே. ஆரும் ராஜீவ் காந்தியும் ஒப்பந்தம் மூலமாக தமது அரசியல் பலத்தை உயர்த்திக்கொள்ள நினைத்தனர்.

இந்திய இராணுவத்தளபதி கிருஷ்ணசாமி சுந்தர்ஜி படை இறக்கம் மூலமாக இந்திய இராணுவத்தின் பலத்தை பரிசீலித்துப் பார்க்க நினைத்தார்.



விமானங்கள் மூலமாக பலாலி விமானத் தளத்தில் படைகள் தரை இறங்கின. கடல் வழியாக வந்த படைகள் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரை இறங்கின.

இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் தரை இறங்கிய செய்தி நாடெங்கும் காட்டுத்தீயாகப் பரவியது. வதந்திகளும், பீதிகளும் பரவின.

'இந்தியா தலையிடவில்லை. இலங்கை அரசாங்கத்தால் அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும், அமைதிக்கும் உதவுவதே இந்தியாவின் பணி' என்று இந்திய அரசு விளக்கமளித்தது.

ஜனாதிபதி ஜயவர்த்தனா பின்வருமாறு கூறினார்:

"கண்டி பெரஹராவில் பாதுகாப்பு வழங்குவதற்கு 20 ஆயிரம் வரையான பொலிசார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் கலவரங்களை அடக்க ஆட்கள் தேவைப்பட்டனர். பெரஹராவை நடைபெறாமல் தடுக்க நான் விரும்பவில்லை. இதே வேளை 'ஏதாவது உதவி தேவையா?' என்று ராஜீவ் காந்தி என்னிடம் கேட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து துருப்புக்களை தென்னிலங்கைக்கு கொண்டுவர விமானங்களை தந்து உதவுமாறு நான் கேட்டேன்.

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் படைகளின் பணியினைப் பொறுப்பெடுப்பதற்காக இந்தியப் படைகள் வருகின்றன." என்றார் ஜே.ஆர்.

எட்டாயிரம் இந்தியத் துருப்புக்கள்தான் வந்துள்ளன. அவை ஒப்பந்தத்தை அமுல் படுத்தும் விடயத்தில் தலையிடப்போவதில்லை" என்றும் கூறியிருந்தார் ஜே.ஆர்.

### வரவேற்பு

இந்தியப் படைகள் வந்திறங்கிய செய்தி தென்னிலங்கையில் எந்தளவுக்குப் பீதியை ஏற்படுத்தியதோ அந்தளவுக்கு யாழ்ப்பாண மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

காங்கேசன்துறையில் வந்திறங்கிய படைகளை வரவேற்க புலிகள் இயக்கத்தினரும் சென்றனர்.

புலிகள் இயக்கப் பிரதித் தலைவர் கோபாலசாமி மாத்தையா, திலீபன், யோகி ஆகியோர் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

இந்தியப் படைகளுக்கு தலைமை தாங்கிவந்தவர் மேஜர் ஜனரல் ஹரிகிரத் சிங். பிரிகேடியர் பெர்னாண்டசும் வந்திருந்தார். (பின்னர் காஷ்மீர் குண்டுவெடிப்பில் பலியானவர்தான் பெர்னாண்டஸ்)

மேஜர் ஜெனரல் ஹரிகிரத் சிங்கையும், பிரிகேடியர் பெர்னாண்டசையும் கைகுலுக்கி வரவேற்றார் மாத்தையா. அதன்பின்னர் புலிகள் இயக்கத்தின் ஏனைய பிரமுகர்களும் கைகுலுக்கி வரவேற்றனர்.

மக்கள் திரண்டு நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்பளித்தனர். பலர் முண்டியத்து அதிகாரிகளுக்கு மாலைசூட்டி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். வரவேற்பில் பெருந்திரளான பெண்களும் கலந்துகொண்டு ஆனந்தக் கண்ணீரோடு வரவேற்ற காட்சி இந்தியப் படையினரை நெகிழச் செய்தது.

குளிர்பானங்கள், அன்பளிப்புக்கள் என்று வாரியிறைத்து இந்தியத் துருப்புக்களை மக்கள் திக்குமுக்காடச் செய்துவிட்டனர்.

புலிகளும் இந்தியப் படை அதிகாரிகளை தமது முகாமுக்கு அழைத்துச் சென்று உபசரித்தனர்.

### பிரபா எங்கே?

ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிட்டது; இந்தியப் படைகள் வந்திறங்கிவிட்டன.

இந்தியா சென்ற பிரபாகரன் திரும்பவில்லை.

புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் மாத்தையாவிடம் ஆயுத ஒப்படைப்பு தொடர்பாக இந்திய அதிகாரிகள் பேசினார்கள்.

"தலைவர் நாடு திரும்பினால்தான் அதனைப் பற்றி முடிவு செய்யலாம். முதலில் பிரபாகரனை இங்கு கொண்டுவாருங்கள்" என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார் மாத்தையா.

ஜூலை 30 ம் திகதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஒழுங்கு செய்தனர் புலிகள்.



தரையிறங்கிய இந்தியப் படை

# பிரபா தொடர்பாக ராஜீவ் அனுப்பிய இரகசியக் கடிதம்!

'பிரபாகரனை பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும்' என்பதே ஆர்ப்பாட்டங்களின் கோரிக்கையாக இருந்தது.

புதுடில்லியில் இருந்த பிரபாகரனின் நடமாட்டங்கள் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டே வந்தன. தொலைபேசியில் பேசுவதற்கு மட்டும் தடைகள் இருக்கவில்லை. தொலைபேசியில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டபோதும் தொலைபேசிப் பேச்சுக்கள் ஒட்டுக்கேட்கப்பட்டன.

எங்கிருந்து பிரபாகரனுக்கு தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன என்பதையும் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

ராஜீவ் காந்தியிடமிருந்து மிக மிக அந்தரங்கமான கடிதம் ஒன்று ஜே.ஆருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பிரபாகரன் தொடர்பாக எவ்வாறு இந்தியா நடந்துகொள்ளப் போகிறது என்ற விடயம்தான் அக் கடிதத்தில் இடம் பெற்றிருந்தது.

மிக முக்கியமான அந்த அந்தரங்கக் கடிதத்தில் காணப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

1. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமையவிருக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கு எத்தகைய பணிகள் இருக்கும் என்பதை திக்ஷித் மூலம் (ஆகஸ்ட் 1,1987) அறிவித்திருந்தோம். ஆயுதங்களை ஒப்படைக்கும் பட்சத்தில் தமிழ் இயக்க உறுப்பினர்களுக்கான தொழில்வசதிகள் பற்றி எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனுக்கு திக்ஷித் தெரியப் படுத்தியபோது, பிரபாகரன்:

(அ) ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த சம்மதம் அளித்துள்ளார்.

(ஆ) ஆயுதங்களை ஒப்படைக்க சம்மதித்தார்.

(இ) ஆயுதங்களை ஒப்படைக்கும்போது பிரபாகரன் தானும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று விரும்புகிறார்.

2. நல்லிணக்கமான முறையில் ஒப்பந்தத்தை அமைதியான முறையில் நடைமுறைப்படுத்துவதைக் கருத்தில் கொண்டு ஆகஸ்ட் 2ம் திகதி பிரபாகரன் விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவார்.

இந்திய அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணைப்படி அயுதங்கள் ஒப்படைக்கப் படுவதற்கு பிரபாகரன் சம்மதித்துள்ளார்.

**ஆகஸ்ட் 2 மாலை:-** பிரபாகரன் யாழ் வருகை.

**ஆகஸ்ட் 3:-** இந்தியப் படைகள் யாழ் நகர் உட்பட குடாநாட்டின் சகல பகுதிகளிலும் பரவலாக நிலை கொள்ளும்.

**ஆகஸ்ட் 3 (பிற்பகல்):** இந்தியத் தூதருக்கு ஆகஸ்ட் 4ம் திகதி மாலை ஆறு மணிக்கு முன்பாக ஆயுதங்கள் ஒப்படைக்கப்படும் என்பதை எல்.ரி.ரி.ஈ. முறைப்படி அறிவிக்கும் அதே செய்தி பகிரங்கப்படுத்தப்படும்.

**ஆகஸ்ட் 4,5:-** எல்.ரி.ரி.ஈ. ஆயுதங்களை ஒப்படைப்பதை பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும் பார்வையிட வேண்டும்.

**ஆகஸ்ட் 5:-** ஜனாதிபதி ஜயவர்த்தனா வடக்கு-கிழக்கு மாகாணத்தில், மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும் என்ற தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். இதன் விபரங்கள் இந்திய அரசுடன் கலந்து உருவாக்கப்படும்.

3. பிரபாகரன் கொடுத்த வாக்கைமீறி ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் இந்தியப் படை எல்.ரி.ரி.ஈ.யின் ஆயுதங்களை பலாத்காரமாகப் பறித்தெடுக்கும் என்பதை உறுதியுடன் கூறவிரும்புகிறேன்.

4. ஆகஸ்ட் 3 முதல் 5ம் திகதிவரை ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான கால எல்லை நீடிக்கப்படவேண்டுமானால் மேலும் 48 மணிநேரம் நீடிக்கப்படலாம். போர் நிறுத்தம் இந்தியப் படைகளால் கண்காணிக்கப்படும்.

5. ஆகஸ்ட் 3ம் திகதி பிற்பகலுக்கு முன்னர் இந்த ஒழுங்குகள் பற்றி அறிவிக்க வேண்டாம். ஆகஸ்ட் 3 பிற்பகலில் வெளியிடப்படலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுதான் கடிதம்.

இக்கடிதத்தில் இந்தியாவின் கடும்போக்கும், பிரபாகரனை தமது பிடியில் உள்ள ஒருவர் போலவே ராஜீவ் நடந்துகொண்டமையும் தெளிவாகத் தெரிகின்றன.

தமது அழைப்பை ஏற்று இந்தியா சென்ற ஒரு இயக்கத் தலைவரை தம்மிடமுள்ள ஒரு கைதிபோலவே இந்தியப் பிரதமர் கருதிக் கொண்டமைதான் பின்னர் விபரீதங்களுக்கு வித்திட்டது.

பிரபாகரன் சென்னை வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டபோது, கிட்டுவும் பிரபாகரனுடன் இணைந்து வந்தார்.

பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்து இறங்கியபோது யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தினரால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com



அலசுவது– இராஜதந்திரி

# நீண்டு செல்லும் 'இரத்தப்பிரவாகம்'

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்தவாரம் நாட்டுமக்களிடம் உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்திருந்தார்.

சத்ஜய-3 இராணுவ நடவடிக்கையையடுத்துப் படுகாயமுற்ற படைவீரர்களுக்கு வழங்குவதற்கு பெருமளவு இரத்தம் தேவைப்படுகின்றது. எனவே நாட்டுமக்கள் இரத்ததானம் செய்து ஜீவமரணப்போராட்டம் நடத்தும் படைவீரர்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி தமது வேண்டுகோளில் குறிப்பிட்டிருந்தார்.

இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படும்போது முதலுதவிச் சிகிச்சைக்கான அனைத்தையும் தயார்படுத்துவதோடு, உயிரற்ற சடலங்களை மூடிக்கட்டுவதற்கான பைகளைக்கூட ஆயத்தப்படுத்தி வைப்பதுண்டு.

வடக்கே இராணுவ ஒப்பரேஷன்கள் இடம்பெறும் சமயங்களில் கொழும்பிலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் காயமடைந்தவர்களைக் கையாளச் செல்வதுண்டு.

கூடவே உயிரிழப்புக்களை எதிர்பார்த்த நிலையில் சடலங்களைப் பதப்படுத்துவதற்காக அந்திம காலச்சேவை நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இராணுவ ஒப்பரேஷன் இடம்பெறும் பிரதேசத்துக்குச் செல்வதுண்டு.

இலங்கையின் வடக்கு- கிழக்கு யுத்தம் ஏராளமான உயிரிழப்புக்களுக்கும், பணவிரயத்துக்கும் காரணமாக இருக்கின்றது.

மறுபுறத்தே இறந்த படைவீரர்களுக்காகப் பிரேதப் பெட்டிகளை விற்று கோடி கோடியாகப் பணம் குவிக்கும் அந்தியகாலச்சேவை நிறுவனங்களும் கொழும்பில் இருக்கவே செய்கின்றன.

கலிங்கத்துப்பரணியில் சூரிய அஸ்த்தமனத்தின் பின்னர் கழுகுகளும், பருந்துகளும் உயிரற்ற சடலங்களைத் தின்னுவதற்காக போர்க்களம் மீது வட்டமிட்டுப்பறக்கும் காட்சி அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பேய்கள்கூட இறந்த உடல்களைக் கொண்டு கூழ் காய்ச்சி உண்ணத் தயாராகின்றன என்றும் பாடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தமும் நாளுக்குநாள் மூர்க்கமடைந்து கலிங்கத்துப்பரணிக் காட்சிகளையே மனக்கண்முன் நிறுத்துவதாகவும் இருக்கின்றது.

"இரத்தம் தேவை" என்று தேசத்தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவே நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுக்குமளவுக்கு பெருந்தொகையான படைவீரர்களின் உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருப்பதையே ஊகிக்க முடிகின்றது.

அர்த்தமற்ற, அநாவசியமான யுத்தமொன்றுக்காக இலங்கையில் இரத்தப்பிரவாகம் ஏற்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

நாட்டின் ஈடேற்றத்துக்காக உழைக்க வேண்டிய திடகாத்திரமான உடல்கள் வெறுமனே வெட்டிவீழ்த்தப்படும் அவல நிலை காணப்படுகின்றது.

இரத்ததானம் செய்யும்படி வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ள அதேசமயம், படைகளில் சேருமாறு இளைஞர்களை ஊக்குவிக்கும் கண்கவர் விளம்பரங்களும் பத்திரிகை,' தொலைக்காட்சி மூலமாக இடையறாது வெளிவந்தவண்ணமுமுள்ளன.

## "இராணுவ ஆட்சேர்ப்பில் காட்டப்படும் ஆர்வம், அரசியல்–அணுகுமுறைகளை முன்னெடுப்பதில் காட்டப்படுவதில்லை"

யுத்த களத்தில் தினமும் மரிக்கும் ஏராளமான இளைஞர்கள் மிகவும் வறிய பின்னணியைக் கொண்டவர்கள். எனவே அவர்களின் வறுமை, பின்தங்கிய நிலை என்பனவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் பெரும் அரசியல் சதுரங்கத்தை ஆடி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

யுத்தத்தினால் காயமடைந்த படையினருக்காக இரத்ததானம் செய்யும்படி ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ.தரப்பிலும் பலர் காயமடைந்து இரத்தத்துக்காகவும், சிகிச்சைக்காகவும் ஏங்குவார்கள் என்பதை அனுமானிக்கமுடியும்.

யாழ்ப்பாணத்தை எல்.ரி.ரி.ஈ.யினர் தம்வசப்படுத்தி வைத்திருந்தகாலப் பகுதியில் ஆனையிறவுத் தாக்குதல், பூநகரித் தாக்குதல் மற்றும் அவற்றையொத்த வேறு தாக்குதல்களின் போதெல்லாம் எல்.ரி.ரி.ஈ.தரப்பிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

அப்போதெல்லாம் காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்குமாறு எல்.ரி.ரி.ஈ.வேண்டுகோள்விடுத்து வந்தது. அவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து வடபகுதி மக்கள் இரத்ததானம் செய்தும் வந்தனர்.

ஆனால் தற்போது எல்.ரி.ரி.ஈ.யினர் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

இரத்தம் சேகரிப்பது, காயமடைந்தவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளை வழங்குவது என்பதில் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ளவே செய்வர்.

எனவே இருதரப்பிலும் கொடிய யுத்தம் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து 'உயிர்ப்பிச்சை'க்காக இளைஞர்களை ஏங்கச்செய்யும் நிலையையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

யுத்தம் நிறுத்தப்படாமல் நீடித்துச் செல்லுமானால் தொடர்ந்து உயிர்விரயமும், இரத்தவிரயமும் ஏற்படுமென்பதைத் தெளிவாகவே அறிந்து கொள்ள முடியும்.

சமாதானம், அமைதி வேண்டும் என்று கோரி வந்த ஜனாதிபதி, இரத்தம் வேண்டி நிற்பதை நோக்கும்போது அழிவுதான் நாட்டின் நியதியாகி விட்டதோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம் ஏற்படுத்தி வரும் தாக்கத்தை 'சர்வ அதிகாரம்' கொண்டவர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் நன்கறிந்துகொள்ள முடியும்.

முப்படைகளினதும் பிரதம தளபதி (COMMANDER IN CHIEF) என்ற அந்தஸ்தில் இருக்கும் ஜனாதிபதி, தாம் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவி என்பதையும் மறக்கலாகாது.

ஜனநாயக ஆட்சி என்றபோர்வையில் இராணுவத்தர்பார்இடம்பெறுவதற்கு இடமளிக்கலாகாது.
சூதாட்டத்தையொத்ததே கெடுபிடியுத்தம். இதில் மனித உயிர்களே விரயமாகிச் செல்லும்.

இந்த உயிர்விரயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

அரசியல் தீர்வுபற்றி அதிகம் பேசினால் இராணுவத்தில் சேருவதற்கு முன்வருவோரின் எண்ணிக்கை குறைந்து விடும் என்று ஆட்சியாளர்கள் நினைக்கலாகாது.

இராணுவத்தில் ஆட்சேர்ப்புக்காக பிரசாரங்களை மேற்கொள்வதில் காட்டப்படும் ஆர்வம், அரசியல் அணுகுமுறைகளை முன்னெடுப்பதில் காட்டப்படவில்லை.

ஐ.நா.ஸ்தாபனத்தில் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதன் மூலமும், பிரபல பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் ஊடாக பேட்டிகளை வழங்குவதன் மூலமாகவும் தம்மை அரசியல் அணுகுமுறைகளில் ஆர்வமுடையோர் என்று ஆட்சியாளர்கள் சித்தரிக்க முனையலாம்.

ஆனால் செயலளவில் ஆட்சியாளர்களால் தகுந்த அரசியல் அணுகுமுறைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதே கண்கூடு.

புலிகளுடன் பேச்சுக்கள், அப்பேச்சுக்களுக்கான நிபந்தனைகள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றெல்லாம் ஜனாதிபதியும், அவரது சிரேஷ்ட அமைச்சர்களும் நிறையவே கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆனால் இக்கருத்துக் கண்ணோட்டங்கள் யாவும் புலிகளைச் சென்றடைந்தனவா? அல்லது பேச்சுவார்த்தைகள் குறித்த அவர்களது நிலைப்பாட்டை ஆட்சியாளர்கள் உரிய தொடர்புகள் மூலமாக அறிய முற்பட்டார்களா? என்பது சந்தேகமே!

கடந்த 13 வருடகாலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினை மூர்க்கமடைந்துள்ளது. இக்காலகட்டத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவின் தலையீட்டுடன் கூடிய அரைவேக்காடான பேச்சுக்கள் மட்டுமே நடத்தப்பட்டனவே தவிர ஆரோக்கியமாக எதுவும் பேசப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேசியதையும், இன்றைய ஆட்சியாளர்களது பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் ஓரிரு சுற்றுப்பேச்சுக்கள் நடத்தியதையும் காத்திரமான அரசியல் அணுகுமுறைகள் என்று கொள்ளலாகாது.

மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் யிட் ஷாக் ராபினுக்கும், பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்துக்குமிடையே ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்காக இருதலைவர்களுக்கும் நோபல் பரிசுகள்கூட வழங்கப்பட்டன.

ஆனால் கடந்த வாரங்களில் இஸ்ரேலிய-பாலஸ்தீன ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை தொடர்பாகத் தோன்றிய முரண்பாடுகள் காரணமாக இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்களும் மீண்டும் மோதிக் கொண்டனர்.




நோபல் பரிசை வென்ற தீர்வுத்திட்டங்கள்கூட தோல்வியைத் தழுவியுள்ளதறுவாயில், இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிக் கூறிக்கொண்டும், புலிகள் பேச்சுக்கு வரவில்லை; அவர்கள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்; தனிநாட்டு கோரிக்கையை கைவிடவேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறிவருவதும், அவர்களது அணுகுமுறைகளில் தெளிவின்மையை பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இதுவரை காத்திரமான, ஆரோக்கியமான பேச்சுக்கள் இடம்பெறவில்லை, என்பதை ஆட்சியாளர்கள் உளப்பூர்வமாக முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனடிப்படையிலேயே புதிய பேச்சுக்கள், அரசியல் அணுகுமுறைகளை அவர்கள் கட்டி எழுப்பமுன்வரவேண்டும்.

# பயணங்கள் முடிவதில்லை

கொழும்பு பம்பலப்பிட்டியில் பனம் பொருள் கூட்டுத்தாபனம் இருக்கிறது. 'கற்பகம்' என்னும் பெயரில் உள்ள அதன் கட்டிடத்தின் ஒரு பகுதியில் யாழ் அரசாங்க அதிபரின் கொழும்பு காரியாலயம் இயங்குகிறது.

'கற்பகம்' கட்டிடத்தின் கீழே ஒரு அறிவித்தல் பலகை இருக்கிறது. தினமும் பல நூற்றுக்கணக் கானோர் அந்த அறிவிப்புப்பலகை முன் கூடுகின் றனர். பின்னர் ஏமாற்றத்தோடு திரும்புகின்றனர்.

யாழ் குடாநாட்டுக்கு செல்வதற்காக பாது காப்பு அமைச்சின் அனுமதியை எதிர்பார்த்து காத்துக்கிடப்பவர்கள்தான் அவர்கள்.

கொழும்பிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு ஒருவர் செல்லவேண்டுமானால் குறைந்தது இரண்டுமாதம் காத்திருக்க வேண்டும்.

முதலில் பொலிஸ்நிலையம் சென்று ஒரு விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளவேண்டும். அதனை பூர்த்தி செய்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

கொழும்பில் வசிப்பதற்கான வதிவிடத் துண்டு இருந்தால்தான் பொலிசில் விண்ணப் பப்படிவமே கொடுப்பார்கள். அப்படியிருந்தும் குறிப்பிட்ட விண்ணப்பம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னர் விண்ணப்பம் செய்தவர் தொடர்பாக இராணுவ உளவுப்பிரிவினரும் விசாரணை மேற்கொள்கிறார்கள்.

விசாரணைகள் முடிந்த பின்னரும் உடனடி யாக அனுமதி கிடைத்துவிடாது. அனுமதி கேட்ட வருக்கும் நேரடியாகவோ அவரது முகவரிக்கோ தகவல் சொல்லப்படுவதில்லை.

'கற்பகம்' முன்பாக உள்ள அறிவித்தல் பலகையில் அனுமதி வழங்கப்பட்டோரின் பெயர் களை ஒரு தாளில் எழுதி ஒட்டிவைப்பார்கள்.

அங்குபோய்த்தான் தமது பெயரும் இருக் கிறதா என்று கண்டறியவேண்டும். எப்போது பெயர் வரும் என்று தெரியாது என்பதால் தின மும் 'கற்பகம்' நோக்கி அலைந்து திரியவேண்டும்.

யாழ் செல்ல விண்ணப்பிக்கும் ஒருவருக்கு அவரது தினசரிக் கடமைகளில் ஒன்றாக 'கற்பகம்' முன்பு சென்று பெயர் தேடும் படலமும் சேர்ந்து கொள்கிறது.

இரண்டுமாதகாலமாக கற்பகத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள்.

இதனைவிட திருமலையில் இருந்து கப்பலில் செல்வதற்காக திருமலையில் காத்திருப்பவர்களின் கதையும் சோகமானது.

திடீர் திடீர் என்று கப்பல் பயணிகளுக்கான பதிவுகள் நிறுத்தப்படும். கப்பல் புறப்படும் திகதிகளும் திடீர் என்று பின் தள்ளிப்போடப்படும்.

திருமலையில் இருந்து ஒருவர் கப்பலில் செல்லவேண்டுமானால் திருமலை பொலிஸாரின் 'கிளியரன்ஸ்' தேவை என்று முதலில் ஒரு விதி இருந்தது. பின்னர் ஈ.பி.டி.பி தலையிட்டு பாது காப்பு அமைச்சுடன் பேசியதையடுத்து அந்த விதி மாற்றப்பட்டுள்ளது.

திருமலை பிரதேச செயலாளரிடம் பயணி கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். அவர் பயணிகளின் பட்டியலை கடற்படையினருக்கு அனுப்பி வைப்பார். அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களை ஆராய்ந்து கடற்படையினர் அனுமதி கொடுக்க வேண்டும்.

இதுவரை திருமலை பிரதேச செயலாளரால் கொடுக்கப்பட்ட பட்டியல்களில் ஒரு சிலருக்கு மட்டுமே அனுமதி மறுக்கப்பட்டது.

கொழும்பு மூலமான விமானப்பயணத்தோடு ஒப்பிடும்போது திருமலை மூலமான கப்பல் பயணத்தில் விசாரணைக் கெடுபிடிகள் குறைவாக உள்ளன.

பொலிஸ் நிலையத்துக்கு அலைச்சல். பின்னர் விசாரணைக்கு உட்படுதல். அதன்பின்னர் 'கற்பகம்' நோக்கிய அலைச்சல் போன்ற கட்டங் கள் கப்பல் போக்குவரத்து விடயத்தில் கடைப் பிடிக்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணம் நோக்கிய பயணவிடயத்தில் கொழும்பில் ஒரு அணுகுமுறையும், திருமலையில் மற்றொரு அணுகுமுறையும் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஆனால் இரண்டு போக்குவரத்துமே பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்கு உட் பட்டதுதான்.

விமானப் பயணம் என்பதால் பாதுகாப்புத் தரப்பினர் உஷாராக இருக்கிறார்கள் என்று காரணம் கூறப்படுகிறது.

பயணிகள் முற்று முழுதான பரிசோதனை யின் பின்னரே விமானத்தில் ஏற்றப்படுகின்றனர். எனவே பாதுகாப்பு தொடர்பான காரணங் களால் கொழும்பு கெடுபிடியை நியாயப்படுத்த இயலாது.

புலிகளும் பயணிகளோடு பயணிகளாக சென்றுவிடுவார்கள் என்று கூறப்படும் காரணம் சொத்தையானது.

யாழ் குடாநாட்டுக்கு சாதாரண மக்கள் செல்வதற்கு இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று கொழும்பு, இன்னொன்று திருமலை.

யாழ்-குடாநாட்டுக்குள் புலிகள் செல்வதற்கு பல வழிகள் இருக்கின்றன.

வன்னியிலிருந்து ஒரு படகுமூலம் யாழ் குடாநாட்டுக்கு புலிகள் உடனடியாகச் சென்றுவிட லாம். சென்று கொண்டும் இருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன்தான் யாழ் செல்ல வேண்டும் என்ற அவசியம் புலிகளுக்கு கிடையாது.

யாழ் குடாநாட்டுக்கு புலிகள் செல்லும் பாதைகள் பல இருக்கும்போது, பாதுகாப்பு



அமைச்சு பொதுமக்களின் பாதையில் நின்று மறித்துக் கொண்டிருக்கிறது.

யாழ் செல்வதற்காக கொழும்பில் உள்ள ஒரு புலி விண்ணப்பம் போடுவதாக ஒரு வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும், அதனை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறார்கள்?

கொழும்பில் பதிவு மற்றும் தன்னை ஒரு சாதாரண நபராக காட்டிக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளோடுதான் ஒரு புலி தங்கியிருக்க முடியும். தகவல்கள் கிடைத்தால் மட்டுமே அவர் புலிதான் என்று தெரியவரும். அப்படித் தகவல்கள் கிடைத்திருந்தால் மறு நிமிடமே அவர் கைது செய்யப்பட்டிருப்பாரே தவிர, யாழ் செல்ல விண்ணப்பம் போட வெளியில் இருக்கமாட்டார்.

யாழ் பயணிகள் விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள் யாழ் குடாநாட்டில் மட்டுமல்லாமல், யாழ் செல்ல விண்ணப்பம் போட்டுவிட்டு அலையும் மக்களிட மும் அரசாங்கம்மீதான அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றன.

வடபகுதியில் இருந்து வவுனியா வருவதற்கு காத்திருக்கும் மக்களும் வெறுப்புற்றுள்ளார்கள்.

அந்நிய நாடொன்றுக்குள் பிரவேசிப்பது போன்ற மனநிலைதான் தாண்டிக்குளத்தில் காத்திருக்கும் மக்களிடம் காணப்படுகிறது.

பயணக் கட்டுப்பாடுகள் புலிகளாலும் விதிக் கப்பட்டன. விதிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் புலிகளைப் பொறுத்தவரை இலங்கையில் இரு நாடுகள் இரு அரசுகள் என்ற கோணத்திலிருந்தே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தை பொறுத்தவரை இலங்கை ஒரு நாடு. ஆனால் பயணிகள் விடயத்தில் கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறைகள் அதற்கு நேர் மாறானதாக உள்ளன.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களில் இருக்கும் மக்கள் வெளியேறுவதற்குத்தான் கட்டுப்பாடுகள் விதித்திருந்தனர். வெளியே இருந்து உள்ளே செல்ல கட்டுப்பாடுகள் இருந்த தில்லை.

ஆனால் யாழ் குடாநாட்டை படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னர் அங்கு செல்வதற்கும் அனுமதி கேட்டு மக்கள் காத்திருக்க வேண்டி இருக்கிறது.

இதுதவிர போக்குவரத்து அனுமதியில் கடும் விதிகள் இருப்பதால் ஊழல்களும் மலிந்துள்ளன.

தாண்டிக்குளத்தில் காத்திருக்கும் மக்களிடம் இடைத்தரகர்கள் மூலம் 20 ஆயிரம் ரூபாவரை பேரம் பேசப்படுகிறது.

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக வந்து காத்திருப்போர் பணத்தைக் கொடுத்துவிடு கிறார்கள்.

அதுபோல கொழும்பிலிருந்து யாழ் செல்ல காத்திருக்கும் பயணிகளிடமும் பத்தாயிரம் ரூபாவரை பேரம் பேசப்பட்டதாம்.

விதிகளும், கெடுபிடிகளும் அதிகமாவதால் போக்குவரத்து அனுமதியில் ஊழல்கள் அதிக மாகும். அது புலிகளுக்கு வசதி. தாராளமாக பணம் கொடுத்து காரியம் சாதிக்கமுடியும். ஆனால் பொதுமக்கள் பாடுதான் கஷ்டம்.

பாதுகாப்பு உயர் மட்டத்தின் காதுகளுக்கு இவையெல்லாம் எட்டுமா? ருசி கண்டவர்கள் எட்டவிடுவார்களா? போக்குவரத்து கட்டுப்பாடு களால்தான் புலிகளையே எங்கும் காணவில்லை என்றுதான் ருசி கண்டவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதனை பாதுகாப்பு அமைச்சும் நம்பிக் கொண்டிருக்குமானால் நிலமை சீராகப்போவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## தருவது 13 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

**சென்ற வாரம்**

பூலான்தேவியின் அப்பாவின் காணிக்குள் உள்ள வேப்பமரத்தை
பூலானின் சித்தப்பா பிள்ளை மையாதீனும் அவனது கையாட்களும் வெட்டுகிறார்கள்.
பூலான் அவர்களை கற்களால் தாக்குகிறாள்.
அவர்கள் பூலானை மரத்தில் கட்டிவைத்து விட்டு
பொலிசாரை கூட்டிவருகிறார்கள்.

இனி...

மையாதீனுடன் மூன்று பொலிஸ்காரர்கள் வந்திருந்தார்கள். பொலிஸ்காரர்களைக் கண்டதும் கிராமமக்கள் முகங்களில் பீதி தெரிந்தது.

அம்மா கத்திக்குழறிக்கொண்டிருந்தாள். பொலிசார் வந்ததும் மையாதீன் தன் ஆட்களுக்கு என் கட்டுக்களை அவிழ்த்துவிடுமாறு சைகை செய்தான்.

"ஐயா! என் மகள் சின்னப் பெண் ஐயா! ஒன்றும் அறியாதவள் ஐயா! இவர்கள்தான் எங்கள் காணிக்குள் வேப்பமரத்தை வெட்டிச்சாய்க்க வந்தார்கள் ஐயா! என் பிள்ளையை விடச் சொல்லுங்கள் ஐயா!" அம்மா ஒரு பொலிஸ்காரன் முன்னால் மண்டியிட்டு மன்றாடிக்கொண்டிருந்தாள்.

அந்தப் பொலிஸ்காரனும் மையாதீனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். மையாதீன் கண்களால் ஏதோ ஜாடை காட்டினான். அதனைப் புரிந்து கொண்டதுபோல பொலிஸ்காரன் அம்மாவிடம்:

"சரி சரி அழாதே! அதுதான் நாங்கள் வந்துவிட்டோமே! யார் தப்புச் செய்தாலும் சும்மாவிடப்போறதில்லை."

அந்தப் பொலிஸ்காரன் பானைபோல உப்பியிருந்த தனது வயிற்றை தடவிக்கொண்டே பேசினான். அவன் சொல்வதெல்லாம் பச்சைப்பொய் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. அம்மா பாவம்; இந்த நாடகமெல்லாம் அவளுக்கெங்கு புரியப்போகிறது?

"ஐயா! தரும பிரபு! உங்களுக்கு புண்ணியம் ஐயா! நீங்கள் பெண்டாட்டி பிள்ளைகளோட நல்லா இருக்கனும் ஐயா!" என்றாள் அம்மா தனது மூக்கைச் சிந்திக்கொண்டு.

அந்தப் பானை வயிறுப் பொலிஸ்காரன் மையாதீனைப்பார்த்து கண்ணடித்தான். அவன் முகத்தில் காறித்துப்ப வேண்டும்போல இருந்தது. அவனோடு வந்த இரண்டு பொலிஸ்காரர்களும் என்னை முறைத்து முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மூதேவிகள்!

நான் முந்தானையை இழுத்து சரிப்படுத்திக் கொண்டேன். கழிசடைகள்! எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"இங்கேபார், உன் மகளை நாங்கள்.. இவளுக்கு என்ன பெயர்?"

"பூலான் தேவி ஐயா! பூலான் என்று கூப்பிடுவோம் ஐயா! சின்னப் பெண் ஐயா! விட்டுடுங்க ஐயா!"

"ஆமா, ஆமா! சின்னப் பெண்ணுதான். பார்க்கவே தெரியுதே. பசு! சின்னப் பசு! நாங்கள் உன் மகளை பொலிஸ் ஸ்ரேசனுக்கு கூட்டிப்போய், என்ன ஏது நடந்தது என்று பக்குவமா விசாரித்துவிட்டு அனுப்பிவைக்கிறோம்? என்ன."

"ஐயா! பொலிசு ஸ்ரேசனுக்கா ஐயா! வேண்டாம் ஐயா! வேண்டாம்." அம்மா மன்றாடினாள்.

பொலிஸ் நிலையத்துக்கு ஒரு பெண்ணைக் கொண்டு செல்வது என்பது கிராமத்தைப் பொறுத்தவரை அசிங்கமான விஷயம். அவமானம்.

அம்மா அந்தப் பொலிஸ்காரனின் கால்களை கட்டிக்கொண்டு மன்றாடினாள். கிராமத்து ஆட்கள் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நானும் இதில் ஒன்றுமே சம்பந்தப்படாத மூன்றாம் மனுசிபோல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

இனிமேலும் என்ன நடக்க வேண்டியிருக்கிறது. நடப்பதெல்லாம் நடக்கட்டும். இதற்கெல்லாம் என்றோ ஒருநாள் முடிவு கட்டத்தான் போகிறேன் என்று நான் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன்.

அன்றொருநாள் என்னை தொட்ட கொள்ளைக்காரர்களை அறைந்தானே அந்தக் கொள்ளைக்கூட்டத் தலைவன். அவனது முகம் என் நினைவில் வந்து போனது.

இந்தப் பொலிஸ்காரர்களைவிட அவன் மிக நல்லவன். அவனைச் சந்திக்க வேண்டும். எங்கே சந்திக்கலாம்? என்றுதான் நான் யோசிச்சுக்கொண்டிருந்தேனே தவிர, பொலிஸ்காரர்கள் என்னைக் கொண்டு செல்லப் போகிறார்களே என்ற பயமோ கவலையோ என்னிடம் துளியும் எழவில்லை.

'துணிந்தால் துக்கமில்லை.
பயந்தால் வாழ்க்கையில்லை'

ஏன் பயப்படவேண்டும்? நான் எதற்கும் தயாராகிவிட்டேன்.

ஒரு நாயை கல்லால் எறிந்தீர்களானால் அது ஓடும். துரத்தித் துரத்தி எறிந்தாலும் ஓடும். ஓடவே முடியாதபடி ஒருமூலைக்குள் சிக்கிக்கொள்ளுமானால் அந்த நாய் கடிக்கத்தான் முயலும். நாய் மட்டுமல்ல, பயந்து பயந்து நடுங்கும் மனிதர்களும் அப்படித்தான்.

என்னால் இனி ஓடமுடியாது. ஓடுவதற்கும் இடமில்லை. ஒரே வழிதான் இருக்கிறது. திருப்பி அடிக்க வேண்டும். அப்போது ஒன்றில் நான் ஒழிந்து போவேன். அல்லது துரத்திக்கொண்டிருக்கும் இந்த கழிசடைகள் ஒழிந்து போவார்கள்.

அம்மாவின் மன்றாட்டம் செல்லவில்லை. என்னை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அம்மா பின்னாலேயே வந்தாள்.

"நீ வரவேண்டாம். நாங்கள் உன் மகளை பத்திரமாக அனுப்பிவைக்கிறோம்."

"ஐயா! சின்னப் பெண் ஐயா!"

"அங்கே இன்ஸ்பெக்டர் ஐயா இருப்பார்.



பூலான

அவருக்கு சின்னப்பெண்கள் என்றால் கொள்ளைப் பாசம். நீ பயப்படாதே என்ன. பார், உன் மகள் ஆம்பிளையாட்டம் தைரியமாய் இருக்கிறாள். நீ அழுவுறியே! வீட்டுக்குப் போ! நட வாம்மா சின்னப்பொண்ணு!"

"ஐயா!"

"என்ன?"

"எனக்கு பயமா இருக்கய்யா!"

"பொலிஸில் நம்பிக்கை இல்லையா சொல்லு?"

"இருக்கய்யா! நாங்கள் ஏழைகள் ஐயா. எங்களுக்கு உங்களைவிட்டா வேறுயார் ஐயா நீதி சொல்லறது?"

"பிறகென்ன? தைரியமாப் போ!"

அம்மா அழுதுகொண்டே, நான் அவள் கண்ணிலிருந்து மறையும்வரை அங்கேயே நின்றாள்.

பொலிஸ் நிலையத்தில் அந்த இன்ஸ்பெக்டர் முன்னால் என்னைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

வழுக்கைத் தலை. நீண்ட மூக்கு. முகத்தில் அம்மைபோட்ட வடு. வெற்றிலையை வாய்நிறையப்போட்டுக் குதப்பிக்கொண்டிருந்தான். முதல் பார்வையிலேயே அவனை எனக்கு பிடிக்காமல் போனது.

என்னைப்பற்றிய விபரங்களையெல்லாம் பொலிஸ்காரர்கள் முதலிலேயே அவனிடம் சொல்லியிருப்பார்கள் போலும். என்னை அவன் முன்னால் நிறுத்திவிட்டு பொலிஸ்காரர்கள் போய்விட்டார்கள்.

அவனும் நானும் மட்டுமே அந்த அறையில் இருந்தோம். ஒரு மூலையில் துப்பாக்கிகள் சுவரோடு சாத்திவைக்கப்பட்டிருந்தன. சுவரெல்லாம் அழுக்காக இருந்தது. அவனது தலைக்குப் பின்னால் மேலே கண்ணாடி அணிந்த கிழவர் ஒருவரின் படம் தொங்கியது. கிராமத்தில் எங்கோ இந்தப் படத்தைப் பார்த்திருக்கிறேன். 'அதுதான் மகாத்மா காந்தி' என்று யாரோ சொல்லித்தந்தது நினைவுக்கு வந்தது.

"இவர்தான் சுதந்திரம் வாங்கித் தந்தார்" என்று யாரோ சொன்னதும், "யாருக்கு வாங்கித் தந்தார்?" என்று நான் கேட்டேன். "எங்களுக்குத்தான்!" என்று சொன்னார்கள். எனக்கு எதுவுமே புரியவில்லை. இப்போது அந்தப் படத்தைப் பார்த்ததும்தான் அதெல்லாம் மீண்டும் நினைவுக்கு வந்தது.

அந்த இன்ஸ்பெக்டர் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே,

"எத்தனை வயசு?" என்றான். அவனுக்கு பதில் சொல்லவே எனக்குப் பிடிக்கவில்லை. மௌனமாய் சுவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

அவனுக்கு கோபம் வந்திருக்க வேண்டும். கதிரையைச் சத்தமாக பின்னுக்கு தள்ளியபடியே எழுந்து என் எதிரே வந்து நின்றான். வியர்வை நாற்றம் அடித்தது. சாராயமும் குடித்திருப்பான் போலும். வயிற்றைக் குமட்டியது.

"ஏய் குட்டி! கொள்ளுத்தின்ற குதிரையாட்டம் இருக்கிறாய்! இளசுதானே?" என்றான். நான் அவனை முகத்துக்கு நேரே பார்த்தேன்.

"வயசைக் கேட்டேன்." என்றான்.

"இருபத்தியொன்று!" என்றேன் வெறுப்பாக.

"அட.. ரொம்ப இளசு! நல்லா சண்டை போடுவியா நீ? அவனுக்கு என்ன பெயர், ம்.ம்..மையாதீன். அவன் மண்டையை பிளந்துவிட்டாயே! அதற்கு என்ன தண்டனை தெரியுமா? ஆறு வருசம்! ஜெயிலில் களிதான் தருவார்கள்! களி தின்றால் இந்த உடம்பு கெட்டுப்போயிடாது? கெட்டுப்போகும்! என்ன செய்யலாம்? நான் சொல்லுறபடி கேட்பியா? சிறையும் இல்லை. களியும் இல்லை. நாளைக்கே நீ வீட்டுக்கு போக நான் ஒரு யோசனை சொல்லட்டுமா கண்ணு?"

நான் இப்போது அவனைப் பார்க்காமல் சுவரில் சாத்தியிருந்த துப்பாக்கிகளைப் பார்த்தேன். எனக்கு மட்டும் துப்பாக்கி சுடத் தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? என்று நினைத்தேன்.

"என்ன கண்ணு யோசனை. பெரிய இடத்தில் கைவைத்திருக்கிறாய். என் உதவி ஒத்தாசை இருந்தால்தான் நீ தப்பிக்கலாம். என்ன இது, கையைத் தா பார்க்கலாம்." என் இடது கையை பிடித்துப்பார்த்தான். நான் தூண் மாதிரி அசையாமல் நின்றேன்.

நான் அப்படி நின்றதை விட்டுக்கொடுப்பாக நினைத்திருப்பான் போலும். மேலும் கிட்ட வந்து மூச்சுவிட்டான். மறுபடி குமட்டிக் கொண்டு வந்தது.

"அடித்தார்களா?" என்று கரிசனைப்படுகிறவன் போலக் கேட்டான். நான் பதில் சொல்லவில்லை.

"சொல்ல வெட்கமா கண்ணு? நானே பார்க்கிறேன்." சொல்லியபடியே என் முந்தானையை சட்டென்று விலக்கினான். விலக்கியவன் சடக்கென்று என்னை மூர்க்கமாக இறுக்கி அணைத்துக்கொண்டான்.

எனக்கு மூச்சு முட்டியது. கோபம் கொப்பளித்தது. அவன் பிடியில் இருந்து விடுபடத் திமிறினேன். அவன் பிடி பலமாக இருந்தது. எனக்கு முதுகெலும்பு உடைந்து விடும்போல இருந்தது. அத்தனை மூர்க்கமாக என்னை தன்னோடு சேர்த்து இறுக்கினான்.

"விடு.. விடடா டேய்.. விட..விடடா!" என்று உரத்துக் கத்தினேன். நான் சத்தம் போட்டதுவெளியே கேட்டிருக்க வேண்டும். பூட்ஸ் கால்களின் ஓசை கேட்டது. யாரோ ஓடிவருகிறார்கள்.

அவன் என்னை தன் பிடியில் இருந்து விட்டான். மறுநொடியே என் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். ஓடிவந்த ஒரு பொலிஸ்காரன் உள்ளே எட்டிப்பார்த்தான்.

"சொல்லடி நீதானே மண்டையைப் பிளந்தாய்? கல்லுமாதிரி நிற்கிறாள் பார். ஏய் கான்ஸ்டபிள் அந்த பிரம்பை எடுத்து வாப்பா!"

என்னமாய் நடிக்கிறான் இந்த இன்ஸ்பெக்டர். எனக்கு வியப்பாகவும், வெறுப்பாகவும் இருந்தது. பிரம்பு வந்து சேர்ந்தது. கொடுத்துவிட்டு கான்ஸ்டபிள் பல்லியமாய் நின்றான்.

"நீ போ!" என்றான் இஸ்பெக்டர். அவன் போனதும் அந்த இன்ஸ்பெக்டர் பிசாசுமாதிரி இளித்தான். என்னைச் சுற்றி சுற்றி இருதடவை வந்தவன், பின்புறமிருந்து என்னை அணைத்துக் கொண்டு, "சத்தம் போட்டாயோ, குரல்வளையைத் திருகி விடுவேன்" என்றபடி என் வயிற்றை தன் கைகளால் வருடினான். அவன் கைகளை பிடித்து பலம்கொண்ட மட்டும் இழுத்து விலக்கினேன்.

"விடடா!" என்றேன். என் வாயைப் பொத்தினான். அதுதான் அவன் செய்த மடைத்தனம். என் வாயைப் பொத்திய அவன் கரத்தைப் பிடித்து ஒரே கடியாக கடித்துவிட்டேன்.

அவன் கத்தவும் முடியாமல், கத்தினால் வெளியே கேட்டுவிடுமே அதனால் கத்தவும் முடியாமல், வலியைத் தாங்கவும் முடியாமல் தன் கையை இழுத்து விடுவித்துக் கொண்டான்.

அவன் கையை உதறிக்கொண்டு முகத்தை கோணலாக்கிக் கொண்டதைப் பார்க்க எனக்குச் சிரிப்பாக இருந்தது. அடக்கிக்கொண்டேன்.

அவன் என்னை முறைத்துப் பார்த்தபடியே தன் இடுப்பில் இருந்து பெல்டைக் கழற்றினான்.

"நாயே! உன்னை பிய்த்து பிய்த்துப் போடுகிறேன் பார்! சிறுக்கிமவளே, என்னிடமா உன் திமிரைக் காட்டுகிறாய்?"

பெல்ட்டை உயர்த்தி வீசினான்.

முதுகில் பட்டது. பயங்கரமானவலி.

பல்லைக்கடித்துக் கொண்டேன். உள்ளே வலியை அடக்கிக் கொண்டேன்.

சளார். சளார். சளார்.

என் முதுகுப் பக்கம் ரவிக்கை கிழிந்திருக்க வேண்டும். தோலின்மீது பெல்ட் அடிபட்டு மரணவலியாக இருந்தது.

என் கண்கள் இருண்டுகொண்டு வந்தன. அப்படியே பின்னடைந்து சுவரில் சாய்ந்து கீழே மடங்கி அமர்ந்தேன்.

நாவெல்லாம் வரண்டு தண்ணீர் வேண்டும்போல இருந்தது. அப்படியே சரிந்து படுத்தேன்.

அவன் பெல்டை மேசையில் போட்டுவிட்டு என் அருகே வந்து தன் பூட்ஸ் காலால் என்னைத் தள்ளி மல்லாக்கத் திருப்பினான்.

நான் மயக்கமானதுபோல கண்களைத் திறக்காமல் கிடந்தேன். அவன் என்னிடமிருந்து விலகிப்போய் யாரையோ அழைத்தான்.

"இந்த சிறுக்கியை கொண்டுபோய் 'செல்'லில் பூட்டு. பிறகு கவனித்துக் கொள்ளலாம்!" என்றான்.

என்னை கால்களில் இருவரும், கைகளில் இரண்டுபேரும் பிடித்து தூக்கிக்கொண்டு போய் ஒரு குப்பைபோல செல்லில் போட்டு பூட்டிவிட்டு போனார்கள்.

அன்றிரவு நடக்கப்போகும் பயங்கரமான கொடுமையை அறியாமல் என் நடிப்பை நான் வியந்துகொண்டேன். (தொடர்ந்து வரும்)

# ஜாக்சனின் ஏக்கம்



## பணமிருந்தும் அமைதியில்லை

கோடி கோடியாகப் பணம் இருக் கிறது. உலகெங்கும் கோடிக்கணக்கான இரசிகர்களும், இரசிகைகளும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர் மனதில் நிம்மதியில்லை. ஏக்கம் நிறைந்திருக்கிறது.

அவர்தான் பொப் இசைப் புயல் மைக்கேல் ஜாக்சன். அப்படி என்னதான் ஏக்கம் என்கிறீர்களா? தனக்கொரு குழந்தை இல்லையே என்ற ஏக்கம்தான்.

மைக்கேல் ஜாக்சனுக்கும் லிசாவுக்கும் இடையே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது.

மைக்கேல் ஜாக்சன் பெண்தன்மை கொண்டவர்; அவரால் லிசாவுக்கு ஏற்ற கணவராக நடந்துகொள்ள முடியுமா? முடியவே முடியாது என்றெல்லாம் மைக்கல் ஜாக்கனின் விரோதிகள் கதை கட்டினார்கள்.

மைக்கேல் ஜாக்சனையும், லிசாவையும் பத்திரிகையாளர்களும் கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டு வெறுப்பேற்றினார்கள்.

ஒரு கட்டத்தில் கடுப்பான லிசா, மைக்கேல் ஜாக்சன் ஒரு கணவர் எப்படி நடந்து கொள்ளவேண்டுமோ அப்படித்தான் நடந்துகொள்கிறார். என்று பத்திரிகையாளர்களிடம் பொரிந்து தள்ளினார்.

தன் கணவர் மைக்கேல் ஜாக்சனுக்காக வரிந்து கட்டிக்கொண்டு பொரிந்து தள்ளிய லிசா கடந்த ஜனவரி மாதம் திடுக்கிடும் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

"மைக்கேல் ஜாக்சனுடன் இணைந்து வாழ முடியாது. அவரிடம் ஒரு கணவருக்குரிய குணாம்சங்களைக் காணமுடியவில்லை. நான் கடும் வெறுப்புற்றுள்ளேன். விரக்தியோடு இருக்கிறேன்" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டு, பிரிந்து சென்று விட்டார்.

மைக்கேல் ஜாக்சனும், லிசாவும் ஒன்றாக இருந்தபோது குழந்தை ஒன்றை தத்தெடுக்கத் திட்டமிட்டிருந்தனர்.

மிக இரகசியமாக பிரபல நிறுவனம் ஒன்றை அணுகினார் மைக்கேல் ஜாக்சன்.

"பிறந்த மறு நிமிடமே ஒரு குழந்தையை தத்தெடுக்க முடியுமா? ஏற்பாடு செய்யுங்கள். எவ்வளவு பணமானாலும் தருகிறேன்" என்று பேரம் பேசியிருந்தார் மைக்கேல் ஜாக்சன்.

பிறந்தவுடன் குழந்தை கிடைக்குமானால் அதனை தனக்கும், லிசாவுக்கும் பிறந்த குழந்தை என்று பத்திரிகையாளர்களுக்கு காண்பித்து திணறடிக்கத் திட்டமிட்டிருந்தாராம் மைக்கேல் ஜாக்சன்.

லிசா திடீரென்று குண்டைத்தூக்கிப் போட்டுவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதால் ஜாக்சனின் திட்டம் 'சட்டி சுட்டதடா கைவிட்டதடா' என்ற கதையாகிவிட்டது.

தற்போது தனியாக இருக்கும் லிசாவுக்கு அவரது முன்னாள் கணவர் டோனி மூலம் இரண்டு குழந்தைகள் இருக்கின்றன.

மைக்கேல் ஜாக்சன் இப்போதும் லிசாவுக்காக காத்திருக்கிறார். "நான் யாரையும் இனிமேல் காதலிக்க மாட்டேன். திருமணமும் செய்துகொள்ளமாட்டேன்." என்று கூறும் மைக்கேல் ஜாக்சன் லிசாவோடு மறுபடி சேர்ந்து ஒரு குழந்தைக்கு அப்பாவாகவேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் லிசாவின் முன்னாள் கணவர் டோனி, "மைக்கேலும், லிசாவும் மீண்டும் ஒன்றுசேர நான் ஒத்துழைப்பேன்" என்று அறிக்கைவிட்டும் பரபரப்பு ஏற்படுத்தி இருக்கிறார்.

உலகெங்கும் உள்ள கோடிக்கணக்கான இரசிக உள்ளங்களை கொள்ளை கொள்ளும் ஜாக்சனின் உள்ளத்தில் எத்தனை சோகம்! பணம் இருந்தால் மட்டும் போதுமா? மனம் வெறுமையாகிக் கிடக்கிறதே, என்று ஓயாத கவலை அவருக்கு! கவலை இல்லாத மனிதனே கிடையாது போலிருக்கிறது!

## சில்க் மரணம் — தொடரும் சந்தேகம்!

சில்க் சுமிதா மரணம் தற்கொலைதான் என்று ஃபைலை மூடிவிட்டது தமிழக பொலிஸ்.

சில்க் சுமிதாவின் எடையுள்ள ஒரு பொம்மையைச் செய்து ஃபானில் தொங்க விட்டுப் பார்த்தார்கள். ஃபானில் அவரால் தொங்கியிருக்க முடியுமா என்று கண்டறியத்தான் அந்தச் சோதனை.

சில்க் சுமிதா மரணத்தின் முன்னரே இப்படியொரு காட்சி மலையாளப் படமொன்றிலும் இடம்பெற்றிருந்தது. படத்தின் பெயர் 'ஜாக்கிரதா'.

ஒரு நடிகையை கொலை செய்துவிட்டு ஃபானில் கட்டி தொங்கவிடுகிறார்கள். அவளது மரணத்தில் சந்தேகப்பட்ட விசாரணையாளர் ஒரு பொம்மையை தயாரித்து ஃபானில் தொங்க விட்டுப்பார்க்கிறார். பொம்மையின் எடையை ஃபான் தாங்கமறுக்கிறது.

கொலை செய்யப்பட்டபின்னர்தான் நடிகை தொங்கவிடப்பட்டாள் என்று விசாரணையாளர் முடிவுக்கு வருகிறார்.

படத்தில் இடம்பெற்ற அதே காட்சி இப்போது சில்க் சுமிதா விடயத்திலும் இடம்பெற்று விட்டதுதான் அபூர்வ ஒற்றுமை.

ஆனாலும் சில்க் சுமிதாவின் எடையுள்ள பொம்மையை ஃபான் தாங்கிவிட்டது. எனவே சில்க் சுமிதா ஃபானில் தொங்கியிருக்கமுடியும் என்ற முடிவுக்கு பொலிசார் வந்துள்ளனர். அதுதான் படக்காட்சிக்கும், நிஜக் காட்சிக்கும் இடையில் உள்ள வேற்றுமை.

சில்க் சுமிதா எடையை ஃபான் தாங்கியது என்பதை மட்டும் வைத்து அவரது மரணம் கொலையல்ல என்ற முடிவுக்கு வரலாமா?

அவரது கழுத்தை சேலையால் இறுக்கி கொலை செய்துவிட்டு, அதே சேலையில் கட்டி தொங்கவிட்டிருக்கலாம் அல்லவா? அப்படியும் ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.

சில்க் சுமிதாவின் காதலர் ராதாகிருஷ்ணன் ஒரு டாக்டர். ஒரு டாக்டருக்கு பிரேத பரிசோதனையில் மாட்டிக்கொள்ளாதிருக்கும் வழிமுறைகள் தெரிந்திருக்கலாம் என்பதும் அந்த சந்தேகத்துக்கு மேலும் ஒரு ஆதாரமாகிறது.

சில்க் சுமிதா மரணத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களும், அதற்கு ஆதாரமான சம்பவங்களும் பல இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே பட்டியலிட்டுள்ளோம்.

* சில்க் சுமிதா எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தில் காதலர் ராதாகிருஷ்ணன்மீது வெறுப்போடு இருந்தார் என்று தெரிகிறது. அப்படியிருந்தும் டாக்டர் ராதாகிருஷ்ணன் சில்க் வீட்டிலேயே எப்படி இருந்தார்; அவரை சில்க் சுமிதா விரட்ட முடியாமல் போனது ஏன்?
* தனது தாயாரின் வறுமையைப் போக்கவும், தம்பியைப் படிக்கவைக்கவுமே சில்க் சுமிதா நடிக்க வந்தார். அப்படியிருந்தும் அவர்கள் இருவரையும் சுமிதாவால் கவனிக்க முடியவில்லை. சுமிதாவின் தயாரும், தம்பியும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். தம்பி படிக்க முடியாமல் லொறி சாரதியாக இருக்கிறார். அவர்களுக்கு உதவ முடியாமல் சுமிதாவை தடுத்தது யார்?
* சில்க் சுமிதாவின் கடிதத்தில் பாபு என்னும் காதலர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பாபு யார்? சுயமாக உழைத்து சம்பாதித்த சில்க் சுமிதாவுக்கு அவரை திருமணம் செய்ய என்ன தடை?
* தூக்குமாட்டிக்கொண்டு இறந்தால் வாயில் நுரை தள்ளும். நாக்கு வெளியேறும். கண்கள் பிதுங்கும். சில்க் சுமிதா உடலில் மேற்கண்ட அடையாளங்கள் காணப்படவில்லை.
* மரணமாவதற்கு முதல்நாள் இரவு படப்பிடிப்புக்கு தேதி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். விரக்தியில் இருந்திருந்தால் அவ்வாறு செய்திருப்பாரா?
* பொலிசார் வரமுன்னரே சில்க் சுமிதாவின் உடலை கீழே இறக்கி சிகிச்சை செய்ய முயன்றாராம் ராதாகிருஷ்ணன். ஒரு டாக்டருக்கு சில்க் இறந்து விட்டார் என்பதை தூக்கில் தொங்கிய நிலையில் இருந்தே கண்டறிய முடியாதா?

இவ்வாறு பல சந்தேகங்களுக்கு பொலிசாரால் விடை சொல்ல இயலவில்லை.

சில்க் சுமிதா சம்பாதித்த கறுப்புப்பணம் எங்கே என்பது பற்றியும் பொலிசார் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

வெகு வேகமாக விசாரணையை முடித்து தற்கொலைதான் என்று ஒரு அறிக்கையும் கொடுத்திருக்கிறது பொலிஸ்.

பொலிசாரின் அறிக்கையால் தமிழ் திரையுலக கனவுக் கன்னியின் மரணத்தின் மீது படிந்துள்ள சந்தேகப் புகையை ஊதித் தள்ள முடியவில்லை. நெருப்பில்லாமல் புகை வருமா?



...யுலகத் தேவதை மரணத்தின் மடியில்...



படிப்பகம்

www.padippakam.com



# எதையும் தாங்கும் தலை

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணாத்துரை. இவரோ எதையும் தாங்கும் தலை வேண்டும் என்கிறார். இவரது பெயர் ஜோன்ஸ்எவன். முரசு வாசகர்களுக்கு முன்னரே இவர் அறிமுகமானவர். பால் புட்டிகளை மலைபோல் அடுக்கி தலையில் சுமந்து சாதனை படைத்து முரசில் இடம் பெற்றவர்தான் இவர். இப்போது 67 செங்கட்டிகளை தலையில் சுமந்து சாதனை படைத்துள்ளார். தலையில் பாரம் சுமந்தபடி சமநிலை தவறாமல் நிற்கும் சாதனைதான் இது. 'சமநிலைக்கான உலக சாம்பியன்' பட்டத்தை கின்னஸ் புத்தக நிறுவனம் வழங்கியிருக்கிறது.



## சுமையோ சுமை

படத்தில் ஆளை விட பெரிசாக இருப்பது முள்ளங்கி. இதன் எடை 11 கிலோ. உலகில் இதுதான் எடைகூடிய முள்ளங்கி. அதனை வைத்திருப்பவர்தான் உரிமையாளர். பெயர்: அலைஸ் விட்மர். குளிர்கால சளியைப் போக்க முள்ளங்கி உதவும். இந்த ஒரு முள்ளங்கிபோதும் பலருக்கு சளிபோக்கிவிடலாம்.

## ஓயாத 44 நாட்கள்




டீசல், பெற்றோல் விலை யேற்றம் மட்டுமல்ல டயர் விலை யேற்றமும் இவரைப் பாதிக்காது. சாதாரண சைக்கிளுக்கு இரண்டு டயர்கள் தேவை. இந்த சைக்கிளுக்கு ஒரு டயர் போதும்.

இந்த ஒற்றைச் சில்லு சைக்கிளில் 44 நாட்கள் தொடர்ச்சி யாக ஓடி உலகசாதனையும் படைத்திருக்கிறார். தினமும் 128 கிலோ மீட்டர் (80 மைல்கள்) என்ற கணக்கில் 44 நாட்கள் ஓடி முடித்தார். அவர் ஓய்வெடுத்த மணி நேரங்களை கணக்கிட்டால் மொத்தம் மூன்று நாட்கள் மட்டுமே ஓய்வெடுத்துள்ளார். இந்த சாதனை வீரரின் பெயர் அசிறா மற்சூசிமா. அமெரிக்க இளைஞர். முதிரா இளைஞர் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் இவரது வயது 15 மட்டுமே.

## இரட்டையர் இரண்டுவகை



அமெரிக்காவைச் சேர்ந்த இரட்டையர்கள் மோசஸ், ஆரான் சகோதரர்கள். 17 வருடங்களுக்கு முன்னர் இவர்களை கௌரவிக்க விரும்பிய ஒரு மனிதர் 'ட்வின்ஸ்பர்க்' என்ற நகரையே உருவாக்கினார். வருடா வருடம் அங்கு இரட்டையர்கள் ஒன்றாகக் கூடி விழா நடத்தி அமர்க்களப்படுத்துகிறார்கள். ஒரே ஒரு நிபந்தனை மட்டும் உண்டு. விழாவில் கலந்து கொள்பவர்கள் சர்வசம இரட்டையர்களாக இருக்கவேண்டும். அது என்ன சர்வசம இரட்டையர் என்கிறீர்களா?

இரண்டு குழந்தைகள் ஒரே நேரத்தில் ஆனால் வெவ்வேறு முட்டையிலிருந்து பிறந்தால் சாதாரண இரட்டையர் என்று அழைக்கப்படுவர். இந்த வகை இரட்டையர் ஒருவரை ஒருவர் ஒத்திருப்பதில்லை. நடத்தை, விருப்பு வெறுப்பு எல்லாம் வெவ்வேறாக இருக்கும். ஒரே முட்டையிலிருந்து தோன்றிய இரட்டையர்கள் சர்வசம இரட்டையர் என்று அழைக்கப்படுவர். இவர்கள் தோற்றத்தில் மட்டுமன்றி விருப்பு, வெறுப்பு பழக்க வழக்கம் போன்றவற்றிலும் ஒத்த தன்மையுடன் காணப்படுவர். படத்தில் இருப்பவர்கள் 'சர்வசம இரட்டையர்.

## பல்லிருக்கப் பயமேன்



வீட்டில் இருக்கும் மேசையை ஒருபுறமாய் தள்ளிவைக்கவே நமக்கு இன்னொருவர் கை கொடுக்க வேண்டும். படத்தில் இருக்கிறார் பாருங்கள் மிஸ்டர் ஜக்கி டெல் றியோ அவருக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. அவருக்கு வாயும் பற்களும்தான் உதவி. வாய் இருந்தால் வங்காளமும் போகலாம் என்பது முதுமொழி. வாயும் வலுவான பற்களும் இருந்தால் வீட்டுத் தளபாடங்களுடனும் போகலாம் என்பது ஜக்கி டெல் றியோவுக்கு பொருத்தமான புதுமொழி.

அமெரிக்காவில் சிக்காக்கோவைச் சேர்ந்தவர் ஜக்கி டெல் றியோ. அவரது பற்களின் பலம் இரும்புப்பலம். 2 மேசைகள் மீது ஆறு கதிரைகளை அடுக்கிவைத்து பற்களால் கவ்வித் தூக்கிவைத்திருக்கிறார். சலபமான காரியமல்ல. கொஞ்சம் பிசகினால் கழுத்து முறிந்து கதை காலி. அப்பீலே கிடையாது மரணம்தான். ஒரு மேசையைக் கூட நம்மால் பற்களால் தூக்க முடியாது. அண்ணர் படு படு சூரர் தான். தயவுசெய்து யாரும் முயற்சித்து பார்த்துவிடாதீர்கள். ஏற்கெனவே சனத்தொகை நம்ம பக்கத்தில் குறைந்து வருகிறது.

## இந்த மீனைப் பாருங்கள் பெரிசு

உலகில் மிக எடை கூடியமீன் இதுதான். எவ்வளவு எடை தெரியுமா? 707.61 கிலோ. (1560 இறாத்தல்) ஆட்களால் தூக்கமுடியாது. அதுதான் கடற்கரையில் கொண்டுவந்து 'கிரேன்' ஒன்றில் தொங்க விட்டுள்ளனர். இதில் மீனின் எடையைவிட இந்த மீனைக் கடலில் இருந்து பிடித்து வந்தவரின் துணிச்சலின் எடை ரொம்பப் பெரிசு!

இந்த மீனைப் பிடித்து வந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்திருப்பவர் அல்ஃபிரட் சி.கிளசெல். 'பெரு' நாட்டில் உள்ள காபோ பிளான்கோ என்ற நகரைச் சேர்ந்தவர்.

இந்த மீனின் பெயர் சற்றுக் கவர்ச்சியானது. 'கறுப்பு மர்லின்' என்பதுதான் பெயர். (மர்லின் மன்றோ நினைவுக்கு வருகிறார் அல்லவா)

இந்த மீன் பிடிக்கப்பட்டது 1953 ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி. இதுவரை இந்த எடையுள்ள வேறு மீன் எதனையும் யாரும் பிடிக்கவில்லை. 43 வருடமாக முறியடிக்கப்படாத சாதனை. ஓடுமீன் ஓடி இந்த உறுமீன் வருமளவும் வாடியிருந்துதான் பிடித்தாரோ அல்ஃபிரட்?!




## தகவல் வெட்டி

சண்டையிருந்தால்தான் சமரசம் தேவை. சந்தேகங்கள் இருந்தால்தான் நடுவில் ஒரு மத்தியஸ்தமும் தேவை. மனம் உண்டானால் இடமுண்டு. அன்புண்டானால் அணைப்பும் உண்டு. உன்னைப் போல உன் அயலாரையும் நேசி என்றார் யேசு. அப்படி நேசித்தால் வேறு ஒருவர் வந்து போதிக்கும்

## மத்தியஸ்தம் தேவையில்லை

அவசியம் இருக்காது. இதெல்லாம் ஏன் சொல்ல வேண்டி இருக்கிறதென்றால் மனிதர்களுக்கு இல்லாத நல்ல குணமெல்லாம் நாய்கள், பூனைகள் மற்றும் விலங்குகளிடம் நிரம்பிவழியத் தொடங்கிவிட்டன.

துரத்தும் நாயாரும், பாய்ந்தோடும் பூனையாரும் பரிவோடு நெருங்கி அணைத்துக் கொள்கின்றன. திருக்கோணமலையில் தெட்சனாமூர்த்தி என்பவரது வீட்டில் இக் காட்சி 'கிளிக்' செய்யப்பட்டது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் மலர்ந்த சமரசம் இது.





படிப்பகம்

www.padippakam.com

# கனவுத் தொழிற்சாலையில் கண்ணீர் விடும் நடிகைகள்

திரையுலகம் ஒரு கனவுத் தொழிற்சாலை. நடிகைகளைப் பொறுத்தவரை அவர்கள் கனவுத் தொழிற்சாலையின் அலங்காரப் பொம்மைகள். ஒரு சில நடிகைகள் மட்டும்தான் தனித்துவமான முத்திரையோடு இருக்க முடிகிறது. ஏனைய நடிகைகள் அவர்களது உடலில் கவர்ச்சி உள்ளவரைதான் பயன்படுத்தப்படுவார்கள். கவர்ச்சி தீர்ந்துவிட்டால் கனவுத் தொழிற்சாலையில் இருந்து அந்தப் பொம்மைகளைத் தூக்கி எறிந்துவிடுவார்கள்.

அதன்பின்னர் முன்னாள் நடிகை என்ற பெயரை வைத்து பல்வேறு வழிகளில் பிழைப்பு நடத்தவேண்டியதுதான்.

சினிமா ஆசையில் வீட்டைவிட்டு ஓடிவந்து சான்ஸ் தேடும் பெண்களின் தொகை சென்னையில் அதிகம். சான்ஸ் தருவதாகக் கூறி அவர்களை ஏமாற்றுவதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள்.

அவமானங்களை சந்தித்து, பலரது ஆசைகளுக்கு இரையாகி தப்பிப் பிழைத்து நடிகையாகிவிட்டாலும் தொல்லைகள் தொடரும். பிரபல நடிகைகளை தேடி வலைவீசும் பிரமுகர்களை சமாளிக்க வேண்டும். எதிர்த்து நின்றால் திரையுலகில் நிலைக்க முடியாது.

சில்க் சுமிதாவின் வாழ்க்கையிலும் பல பிரபல பிரமுகர்கள் குறுக்கிட்டனர். அது பற்றிய விபரங்களை தனது டயறியில் குறித்து வைத்திருந்தார் சில்க் சுமிதா.

அவரது மரணத்தின் பின்னர் அந்த டயறி பொலிசாரின் கைகளுக்குப் போனது. டயறிக் குறிப்புக்கள் வெளியே தெரிந்தால் பிரபல அரசியல்வாதிகள் முதல் பிரபல தொழிலதிபர்கள் வரை சம்பந்தப்பட்ட குட்டுக்கள் உடைந்திருக்கும். அந்த டயறியை அப்படியே அமுக்கிவிட்டது பொலிஸ்.

சில்க் சுமிதாவுக்கு மட்டுமல்ல இன்று பிரபலமாக உள்ள பல நடிகைகளுக்கும் தொல்லைகள் தொடரவே செய்கின்றன. சில நடிகைகள் தமது பாதுகாப்புக்காக பிரபலங்களின் உறவுகளை பயன்படுத்திக் கொள்கின்றனர். வேறு சில நடிகைகளோ வெளியே சொல்லவும் முடியாமல், வேறு வழியும் இல்லாமல் இரகசியமாக கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நடிகைகள் சிலர் தமக்கென்று மனேஜர்களை வைத்துக்கொள்வார்கள். அவர்கள் நடிக்கும் படங்களுக்கான சம்பள விவகாரங்கள், கணக்கு விவகாரங்கள் என்பவற்றை கவனித்துக் கொள்வது அந்த மனேஜர்களின் வேலை. சில மனேஜர்கள் நடிகைகளின் அந்தரங்கங்களை அறிந்துகொண்டு அந்த நடிகைகளையே மிரட்ட ஆரம்பித்துவிடுவார்கள். பின்னர் குறிப்பிட்ட மனேஜர் நடிகையின் எஜமானாகிவிடுவார். நடிகை சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை அவர் எடுத்துக் கொள்வார். மனேஜரின் பிடியில் இருந்து மீள முடியாமல் கண்ணீர்விடும் நடிகைகளும் இருக்கிறார்கள்.

சில நடிகைகளுக்கு அவர்களது தந்தையால் தொல்லை. மகளை மூலதனமாக வைத்து பணம் தேடும் ஜென்மங்களும் இருக்கிறார்கள். தனது தந்தையின் குடிப்பழக்கத்தால் தனக்கு நேர்ந்த கொடுமைகளை, தான் பட்ட அவஸ்தைகளை குஷ்பு ஒருமுறை கூறியிருந்தார். சினிமா நடிகைகள் சிலரது கேடு கெட்ட தந்தைமாருக்கு உதாரணம் குஷ்புவின் தந்தை.

நடிகைகள் சிலரது தாய்க்குலங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இப்போது குலுக்கல் நடனம் ஆடும் ஜோதி மீனாவின் அம்மா ஜோதிலட்சுமி. மகளுக்கு சினிமா வாய்ப்புத் தேடும் தந்திரங்களை பக்குவமாகச் சொல்லிக்கொடுப்பவரே அவர்தான்.

சினிமா உலகம் என்னும் கனவுத் தொழிற்சாலையை வெளியே இருந்து பார்த்தால் அழகாகத் தெரியும். ஆனால் உண்மை நிலை என்ன தெரியுமா? 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்' என்ற கதைதான்.

பாதிக்கப்படுபவர்கள் நடிகைகள்தான். ஷோபா முதல் சில்க் சுமிதாவரை பலரின் மரணங்கள் மர்மமாகவே உள்ளன. கனவுத் தொழிற்சாலையில் நடிகைகளின் மர்ம மரணங்களும் தொடர்கதைதான்.

---

* கமல்-மீனா நடிக்கும் 'அவ்வை சண்முகி' படத்தில் முக்கிய ... ஹீரா. இப்படத்தில் ரமேஷ் அரவிந்தும் நடிக்கவிருக்கிறார். ர... கமலுடன் 'சதிலீலாவதி' படத்தில் நடித்துள்ளனர்.

* பார்த்திபன் நடித்த 'உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்' பட... இயக்கிய சசிகுமார், அண்மையில் 'செங்கோட்டை' படத்தை இயக்... இப்போது இவர் அரவிந்தசாமி நடிக்கும் படமொன்றை இயக்க...

* தமிழ்-தெலுங்குப் படங்களில் பிஸியாக இசையமைத்து ... முறையாக கன்னடப்படம் ஒன்றுக்கு இசையமைக்கவுள்ளார். இசையமைக்கும் படத்தின் பெயர்- 'மங்கல சூத்ரா'.

* 'புதையல்' படத்தில் அறிமுகமான சாக்ஷி, 'மாப்பிள்... கவுண்டர்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இ... அடுத்து சித்ரா லட்சுமணன் இயக்கத்தில் கார்த்திக்கிற்கு ஜோடி... நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* இ.வி.வி.சத்யநாராயணா இயக்கிய 'ஆயினிக்கு இத்ரு' என்ற ... பெற்றது. இது தற்போது தமிழில் ராம்கி-குஷ்பு-சங்கீதா நடிக்க ... பொண்ணு' என்ற பெயரில் தயாராகி வருகிறது.

* சூப்பர் குட் ஃபிலிம்ஸிற்காக திரைக்கதை எழுதி லிவிங்ஸ்... படத்தை அடுத்து சூப்பர் குட் ஃபிலிம்ஸிற்காக லிவிங்ஸ்டன் இயக்கி... ஜோடியாக தேவயானி நடிக்கிறார்.

* விஜயகாந்த் நடிக்கும் 'அலெக்ஸாண்டர்' படத்தை இயக்... பிரசாந்த் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இவற்றை மு... படம் ஒன்றைத் தயாரித்து இயக்கவிருக்கிறார்.

* ரகுவரன்-கௌதமி இணைந்து நடித்த 'விட்னஸ்' படத்திற்கு ... 'தடயம்'. இப்போது விஜயசாந்தி-ராம்கி நடிக்க 'அதர்மம்' ரமேஷ்கி... 'தடயம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

* இயக்குநர் ஷோபா சந்திரசேகரனின் சகோதரி ஷீலா 'மனச... வருகிறார். இப்படத்திற்காக ஷீலா ஒரு பாடலையும் பாடியுள்ள...

* 'வான்மதி', 'காதல் கோட்டை' ஆகிய வெற்றிப் படங்களை... மேக்கர்ஸ் நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படம் 'காலமெல்ல... கதாநாயக...



சரத்குமார்-லிசாரே
படம்-நேதாஜி



பாலகிருஷ்ணா-ஆம்னி
படம்-நான் உங்க வீட்டுப்பிள்ளை

## லிசாரேயின் கலக்கல்

'நேதாஜி' படத்தில் சரத்குமாரின் ஜோடியாக நடித்துவருகிறார் லிசாரே. இந்தியாவின் நம்பர்வன் மொடல் அழகிகளில் ஒருவர். எந்தமாதிரியான 'போஸ்' கொடுக்கவும் தயங்காதவர்.

'நேதாஜி' படத்தில் நடிக்கவந்த லிசாரேக்கு தமிழ்பட உலகம் பிடித்துப் போய்விட்டதாம். சரத்குமார் முன்னர் ஆணழகன் போட்டியில் அசத்தியவர் என்பதை அறிந்து அசந்துபோனாராம் லிசாரே. "சரத்குமார் ஒரு அற்புதமான நடிகர். அவருடன் இணைந்து நடிப்பது பெருமை" என்று ஐஸ் வைக்கிறார் லிசாரே.

'நேதாஜி' படத்தில் லிசாரே கலக்கிக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து பல தயாரிப்பாளர்கள் பணப்பெட்டியுடன் தேடிப்போனார்களாம். "முதலில் 'நேதாஜி' முடியட்டும். மீதியை பார்த்துக்கொள்ளலாம்." என்று சொல்லிவிட்டாராம் லிசாரே. இயக்குநரும் லிசாரேயின் ஒத்துழைப்பை 'நேதாஜி' பட... பாராட்டுகிறார்.

சரத்குமார் நடித்துவரும் படங்களில் விரைவில் முடிவடையப் போகும் படங்கள் இரண்டு. ஒன்று 'அரவிந்தன்'. இரண்டாவது 'நேதாஜி'. அநேகமாக முதலில் வெளிவரும் படம் நேதாஜி. லிசாரேயின் கலைச் சேவையைக் காண சற்றுக் காத்திருங்கள்.

## பறக்கப் போகிறார் யுவராணி

நடிகை யுவராணிக்கும், படத் தயாரிப்பாளர் குஞ்சுமோனுக்கும் இடையே லவ்வுன்னா லவ்வு இருந்தது தெரிந்ததே. காதல் பரிசாக குஞ்சுமோன் ஏகப்பட்ட செலவு செய்தது தெரிந்ததே.

குஞ்சுமோனின் மனைவி விஷயமறிந்து யுவராணியை தேடிப்போய் ஒரு பிடிபிடித்திருந்தார். வீட்டிலும் ஒரே ரகளை. பார்த்தார் குஞ்சுமோன் யுவராணிக்கு வெளிநாட்டில் ஒரு வேலை பெற்றுக் கொடுத்துவிட்டார். கணிசமான தொகையையும் கொடுத்து யுவராணியை சிலகாலத்திற்கு அமெரிக்கா அனுப்பி வைக்கத் திட்டமிட்டுவிட்டார் குஞ்சுமோன். "அங்கே போய் வேலையைப் பாரு. இங்கே என் வீட்டில் பூகம்பம் அடங்கியபிறகு திரும்பிவா" என்று சொல்லிவிட்டாராம் மீசைக்கார குஞ்சுமோன்.

குஞ்சுமோன் தயாரிப்பில் வினீத் ஜோடியாக யுவராணி நடித்துக்கொண்டிருக்கும் 'சக்தி' படம்தான் யுவராணியின் கடைசிப்படமாக இருக்கலாம். மிஸ்டர் குஞ்சுமோன், யுவராணி எங்காவது தொங்கிவிடாமல் பார்த்துக்கொள்ளட்டும்.

## பாரதிராஜா–சரத் கூட்டணி

சத்யராஜின் மனேஜர் இராமநாதன் தயாரித்த படம் தமிழ் செல்வன். அதை இயக்கியவர் பாரதிராஜா. இப்போது சத்யராஜ் ரசிகர் மன்றத் தலைவர் கே.பாலு தயாரிக்கும் படம் ஒன்றை இயக்குகிறார் பாரதிராஜா. படத்தின் பெயர்; 'வாக்கப்பட்ட பூமி'. கதாநாயகன் சரத்குமார். கதாநாயகியாக புதுமுகம் ஒருவரை நடிக்கவைக்கப்போகிறார்கள். முக்கிய வேடத்தில் மணிவண்ணன் நடிக்கிறார்.

'முதல் மரியாதை', 'கிழக்கு சீமையிலே' போன்ற பாரதிராஜாவின் முன்னைய படங்களின் பாணியில் இப்படமும் இருக்குமாம். இசை; சிற்பி. பாடல்கள்; வைரமுத்து.

பாரதிராஜாவும் சரத்குமாரும் இணையும் முதல் படமும் இதுதான்.



லிசாரே
படம்-நேதாஜி

## இரு ஹீரோக்கள்

சத்யராஜ், பிரபு நடித்த 'சிவசக்தி' படம் நன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதனால் இரண்டு ஹீரோக்கள் உள்ள படத்தில் நடிக்க விரும்புகிறார் சத்யராஜ்.

'தேவராகம்' படத்தை தயாரித்த நிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் படமொன்றில் சத்யராஜ், அஜித்குமார் இருவரும் நடிக்க உள்ளனர்.

---

சேஎ... மற்... சிட்... பறக்...

## உடன் ...

நடிகை கஸ்து... தொழிலதிபரையு... பாரக முடிகிறத... பிடித்து தமிழக பி... வெளியிட்டு விட்... செய்தி வெளி... ஆடிப்போய்விட்... ஏதோ திட்டத்தே... வைத்திருக்கிறார்... விட்டாராம் தெ... உறவுக்கு தொழி... விட்டார்.

"நு மானம் ப... தில் பிரபல ச... வென்று மறுப்பெ... கஸ்தூரியின் அ...

## மூன்...

தமிழ்நாட்டில் ... கல்லூரி மாணவிக... கள் மூன்றுபேர். ... ஹீரோக்கள். மூன்... தும் 'அ'. யார் அ... கிறதா? அரவிந்... அப்பாஸ்.


படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## மினி சினி

...திில் நடித்து வருகிறார்
அரவிந்தும், ஹீராவும்

...ஸ்ரீதேவ் என்ற பெயரில்
...ர். இரண்டுமே தோல்வி.
...ார்.

...ம் வித்யாசாகர், முதன்

...ங்குப் படம் பெருவெற்றி
...னப்பொண்ணு பெரிய

... நடித்த 'சுந்தரருஷன்'
...க்கும் படத்தில் இவருக்கு

...வரும் கேயார் அடுத்து
...துவிட்டுச் சொந்தமாகப்

...பில் வைக்கப்பட்ட பெயர்
...னன் இயக்கும் படத்திற்கு

...ற படத்தைத் தயாரித்து

...யாரித்த சிவசக்தி மூவி
... காதல் வாழ்க! இதில்
...க முரளி நடிக்கிறார்.

### ...டகோடி

...த்னம் இயக்கும் 'ஆனந்தம்'
...தின் விற்பனை எட்டே
...ல் கோடியைத்தாண்டி
...விட்டது. (இந்திய பண
...மதிப்பில்)
பெரும்பாலான காட்சிகள் எடுத்து முடிந்து
விட்டன. ஆனால் மேலும் சில பாத்திரங்
...களுக்கு ஆள் தேடிக்கொண்டிருக்
...கிறார் மணிரத்னம்.



...கன்று ஒட்டிக்கொண்ட
...கட்டி வந்ததென்ன?
...ய பாவையே!
...ன்று பார்க்கும்போது
...ப்போல நின்றதென்ன?
...ப! பூவையே!

...டை
...கொண்டால்
... உருவம்.
...டை
...க்கொண்டால்'
...து பருவம்.
...வயதுக்கு
...கத்தெரியும்.
...ன்ற கண்களுக்கு
...று புரியும்!

...க்கு வேலைதர
... மேனி
...போல் கட்டுவிட்டு
...ற தேன் ❞

### ...ரு மறுப்பு

...யையும், ஒரு பெரும்
...அடிக்கடி ஒன்றாகப்
... அதனை மோப்பம்
...ல சஞ்சிகை ஒன்று

...னதும் தொழிலதிபர்
...ர். கஸ்தூரிதான்
... விஷயத்தை கசிய
...என்று நினைத்து
...லதிபர். கஸ்தூரி
...பர் கத்தரி போட்டு

...க்கப்பட்ட கோபத்
...சிகைக்கு விறுவிறு
...தி போட்டுள்ளார்
...ர்.

### ...~'அ'

...இன்றைய தேதியில்
...க்கு பிடித்த நடிகர்
...ன்றுபேரும் இளம்
...பேரின் முதல் எழுத்
...ர்கள் என்று தெரி
...ாமி, அஜித்குமார்.

## வித்தியாச சாமி

நடிகர் அரவிந்தசாமி வித்தியாச ரகம். பெண் ரசிகைகளைக் கண்டால் பேசவே கூச்சப்படுவாராம். நடிகைகள் விஷயத்திலும் சற்று விலகியே இருப்பார்.

மோகன்லால்-மீனா நடிக்கும் 'மகான்' படப்பிடிப்பின் போது மோகன்லாலை பார்க்கப் போனார் அரவிந்தசாமி. மோகன்லாலுடன் பேசிவிட்டு திரும்பும்போது மீனா ஓடிப் போய் வணக்கம் சொன்னாராம். அரவிந்தசாமி ஒரு 'ஹலோ' சொல்லிவிட்டு சட்டென்று போய் விட மீனாவின் முகம் சுருங்கிப் போய்விட்டதாம். அப்படியும் விடாமல், "அரவிந்தசாமியுடன் ஒரு படத்தில் நடிக்க ஆசையாக இருக்கிறது." என்று சொல்லியிருக்கிறார் மீனா.

அரவிந்தசாமியிடம் குழைந்த மற்றொரு நடிகை தபு. ஒரு நிகழ்ச்சியில் அரவிந்தசாமியை சந்தித்த தபு, "நான் உங்களுடைய தீவிர விசிறி. உங்கள் தோற்றம் என்னைக் கவர்கிறது." என்று பேசிக்கொண்டே போனாராம். ஒரு புன்னகையை மட்டும் சிந்திவிட்டு உடனே இடத்தைக் காலிபண்ணிவிட்டாராம் அரவிந்தசாமி.

## நக்மா மறுப்பு

'பெரியதம்பி' படத்தில் பிரபு-நக்மா ஜோடி. படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. இடைநடுவில் ஒரு சிக்கல். பிரபுவுக்கு நக்மாவை முத்தம் கொடுக்கச் சொன்னாராம் இயக்குநர். நக்மா நாசூக்காக மறுத்துவிட்டாராம்.

பிரபு மனம் கோணாமல் இருப்பதற்காக நக்மா அவரிடம் தனிமையில் தன் நிலையை விளக்கினாராம். "உங்களுக்கு முத்தம் தந்தால் கண்ட கண்ட நடிகர்களின் படங்களிலும் முத்தக் காட்சியில் நடிக்க வேண்டியிருக்கும். அதுதான் மறுத்தேன்." என்றாராம்.

நக்மா பற்றிய மற்றொரு செய்தி. மேட்டுக்குடி படத்தில் கார்த்திக்குடன் நடித்தபோது இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டிருந்தது. அதனால் நக்மாவின் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி விட்டார் கார்த்திக். நக்மாவின் தங்கையான ராத்திகாவை தனது புதிய படமொன்றுக்கு கதாநாயகியாக நடிக்க சிபாரிசு செய்துள்ளார் கார்த்திக்.

## முகப்பில்

லிவிங்ஸ்டன்
படம்:-சுந்தரபுருஷன்

வனிதா விஜயகுமார்

## மறுபடி சேரும் அதே ஜோடி

அர்ஜுன்-ரவீனா ராண்டன் இருவரும் ஜோடியாக தமிழில் நடித்த படம் 'சாது'. அந்தப் படத்தில் நடித்தபோது ரவீனாவுக்கும் அர்ஜுனுக்கும் இடையே நெருக்கம் அதிகமாகியதும், அர்ஜுனின் மனைவி விஷயமறிந்து பொங்கியெழுந்ததும் பழைய செய்திகள்.

'சாது' படத்தின் பின்னர் மீண்டும் ஹிந்திப் படவுலகுக்கு திரும்பினார் ரவீனா. அங்கு அக்ஷய் குமாருடன் சீரியசாக காதல் செய்து கொண்டு படங்களிலும் தன் திறமையைக் காட்டிக்கொண்டிருந்தார்.

தமிழ்ப் பட தயாரிப்பாளர்கள் சிலர் ரவீனாவை நடிக்கவைக்க விரும்பியபோதும் ஹிந்தியில் பிஸி என்று டாட்டா காட்டிக் கொண்டிருந்தார்.

சமீபத்தில் ஒரு தமிழ்ப்பட நிறுவனத்தினர் ரவீனாவை அணுகினார்கள். "யார் ஹீரோ?" என்று கேட்டாராம் ரவீனா. 'அர்ஜுன்' என்று சொன்னதும் ரவீனா மறுபேச்சே இல்லாமல் சம்மதித்து விட்டார்.

அர்ஜுனும்-ரவீனாவும் மீண்டும் ஜோடி சேரும் படத்தின் பெயர் 'தென்னாலிராஜா'

அர்ஜுன் நடித்து வெற்றி பெற்ற படமான 'கர்ணா' படத்தை இயக்கியவர் செல்வா. 'தென்னாலிராஜா' படத்தையும் செல்வா இயக்குகிறார்.

நகைச்சுவை கலந்த படம் என்பதால் கிரேஸிமோகன் வசனம் எழுதுகிறார். இசை: பாலபாரதி. சண்டைப் பயிற்சி: கனல் கண்ணன்.

நிவேதிதா, மணிவண்ணன், கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் நடிக்கின்றனர்.



அருண்கோவில்-பானுப்பிரியா
படம்:-ஏழுமலையான் மகிமை

## சேரன்-சோழன்-பாண்டியன்

சேரன்-சோழன்-பாண்டியன் என்ற பெயரில் ஒரு படம் தயாராகிறது. படத்தின் பெயருக்கு ஏற்ப மூன்று ஹீரோக்கள். ரஞ்சித், ஆனந்த்பாபு, வடிவேலு. இவர்களோடு முக்கிய வேடத்தில் நடிக்கிறார் மன்சூர் அலிகான்.

ரஞ்சித் முன்னர் நடித்த படம் 'சிந்துநதிப்பூ' அப்படத்தை இயக்கிய செந்தமிழன் சேரன், தோழன், பாண்டியன் படத்தையும் இயக்குகிறார்.

பாண்டியன், மோகினி, விஜயசந்திரிகா, ஜோதிமீனா, பூர்ணம் விசுவநாதன் ஆகியோரும் நடிக்கின்றனர்.



பாண்டியராஜன்-ஜெயராகினி
படம்:-நல்ல மனக்காரன்

## நண்பரின் நாலு படங்கள்

'சுந்தரபுருசன்' படத்தின் அமோக வெற்றியால் லிவிங்ஸ்டன் கதாநாயக அந்தஸ்தை பெற்றுவிட்டார்.

விஜயகாந்தின் நண்பரான இப்ராகிம் ராவுத்தர் தயாரிக்கும் புதிய படம் ஒன்றில் லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிப்பதுடன் கதையையும் அவரே எழுதுகிறார். படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை. இயக்கம்: பார்த்தசாரதி. இசை: சிற்பி.

இப்ராகிம் ராவுத்தர் தயாரிக்கும் மற்றொரு படத்தின் பெயர்; ஆசைத்தம்பி. இதில் அருண்பாண்டியனும், 'காதல் தேசம்' புகழ் அப்பாசும் கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.

'ஆசைத்தம்பி' படத்தை இயக்குபவர் செந்தில்நாதன். வசனம்: லியாகத் அலிகான். இசை: ஆதித்யன்.

விஜயகாந்த் நடிக்கும் 'உளவுத்துறை' ராம்கி-சங்கவி நடிக்கும் 'தினமும் என்னைக் கவனி' ஆகிய படங்களும் இப்ராகிம் ராவுத்தர் தயாரிப்பில் உருவாகி வருகின்றன.

## முதலிடத்தில் ஜெயராம்

கேரளாவில் பிரபலமான பண்டிகை ஓணம் பண்டிகை. அந்த பண்டிகையை முன்னிட்டு ஐந்து மலையாளப் படங்கள் திரைக்கு வந்தன. ஐந்து படங்களிலும் ஜெயராம் நடித்த படங்கள்தான் முன்னணியில் உள்ளன.

ஜெயராம் நடித்த 'துவள் கொட்டாரம்' முதலிடத்தில் உள்ளது. 'தில்வாலா ராஜ்குமார்' என்னும் படம் இரண்டாவது இடத்தில் உள்ளது. அதுவும் ஜெயராம் நடித்த படம்தான்.

மோகன்லால் நடித்த 'பிரின்ஸ்' மூன்றாவது இடத்தில் இருக்கிறது. மம்முட்டி நடித்த 'இந்திர பிரஸ்தம்' என்னும் படம் நாலாவது இடத்தில் வந்திருக்கிறது.

## தூக்கத்தில் குஷ்பு புராணம்
## மனைவியிடம் மாட்டினார் நடிகர்

கோபாலா, கோபாலா படத்தில் பாண்டியராஜனும் குஷ்புவும் ஜோடியாக நடிக்கிறார்கள். பாண்டியராஜனே இயக்கும் படம் அது.

பாண்டியராஜன் முதலில் இயக்கி நடித்த படம் 'ஆண்பாவம்'. அதேபோலவே 'கோபாலா, கோபாலா' படமும் சூப்பர் ஹிட்டாக வேண்டும் என்று சுறு சுறுப்பாக சுழன்றுகொண்டிருக்கிறார் மனிதர்.

அதனால் ஒரு வம்பிலும் மாட்டிக்கொண்டாராம். அது என்ன? அவரே சொல்லியிருக்கிறார்.

"ஒரு நாள் இரவு மனைவியின் அருகில் படுத்துக்கிடந்தேன். அப்படியே தூக்கத்தில் உளறியிருக்கேன். "குஷ்பு.. இப்படி கிட்ட வாங்க. ம்.ம்.. இன்னும் நெருங்கி வாங்க. உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா"ன்று உளறியிருக்கேன். மனைவிதான் என் மூஞ்சியில தண்ணியடிச்சு எழுப்பிவிட்டாரு.

"எத்தனை நாளா இது நடக்குது?" என்று சத்தம் போட்டுச்சு. அப்புறம் நான் மனைவிகிட்ட விஷயத்தை சொன்னதும்தான் தூங்கவேவிட்டாங்க" என்று தான் பட்ட அவஸ்தையை விளக்கியிருக்கிறார்.

24 மணி நேரமும் படப்பிடிப்பு நினைவில் இருந்ததால் மறுநாள் படப்பிடிப்புக் காட்சியைத்தான் உளறினாராம். தப்பாக ஒன்றும் இல்லையாம்.

## அம்மா கோபமா?

"என் மனதில் எதுசரியென்று படுகிறதோ அதைச் சொல்லிவிடுவதில் நான் எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை. ஒரு நடிகையிடம் உன் உள்பிரா தெரிகிறமாதிரி டிரஸ் போடு என்று சொன்னபோது நடிகை வருத்தப்படவில்லை. நடிகையின் அம்மா வருத்தப்பட்டார். என்னைப் பார்த்தால் இப்போதும் முகத்தைத் திருப்பிக்கொள்வார். என்ன செய்வது? படத்திற்கு 'செக்ஸ்' தேவைப்படுகிறது என்பதை நடிகையின் அம்மாவிடம் படம்போட்டா விளக்க முடியும்?" இப்படி தமிழக சஞ்சிகை ஒன்றிடம் சொல்லியுள்ளார் சத்யராஜ்.

சத்யராஜ் குறிப்பிடும் நடிகை மீனா. முகத்தை திருப்பியவர் மீனாவின் தாய்க்குலம்.



ரேஷ்மா
படம்:-பூமணி

## புரூனேயில் மும்பாய் நடிகைகள்

புரூனேயில் சுல்தானின் பிறந்தநாள் விழாவுக்கு சென்றவர்களில் மும்பாய் நடிகைகள் இருவர் மகிழ்ச்சியுடன் திரும்பியிருக்கிறார்கள்.

'பம்பாய்' படத்தில் 'ஹம்மா ஹம்மா' பாடலுக்கு ஆடிய சோனாலி பாந்ரேயும், பூஜாபட்டும்தான் பைநிறையப் பணத்துடன் திரும்பியிருக்கிறார்கள்.

பூஜாபட்மீது புரூனே சுல்தானுக்கு தனிப்பிரியமாம். அதனால் சோனாலி பாந்ரேயைவிட பூஜாபட்டுக்கு விசேஷ கவனிப்பாம்.

மும்பாய் நடிகைகள் சிலர் பொறாமையில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். சோனாலி பாந்ரேக்கு படவாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும் இப்படியான வாய்ப்புக்களால் தளதளவென்று மகிழ்ச்சியோடு காணப்படுகிறார்.


படிப்பகம்

www.padippakam.com

# கருப்பையின் உள்ளே?

நாம் இந்த உலகத்திற்கு வந்து சேருவதற்கு முன்னால் ஒரு இடத்திலே கொஞ்சநாள் தங்கி இருந்தோமே..... அந்த இடம் ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு? அதுதான் கருப்பை.

பத்துமாசம் அங்கே இருந்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யாருக்காவது நினைவு இருக்கிறதா? நிச்சயமா இருக்காது.

இதுநாள் வரைக்கும் கருப்பைக்குள்ளே நடைபெறும் சங்கதி பற்றி யூகமாத்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்ப கேளா ஒலி வரைவுகள் மூலமாக அங்கே நடக்கிறதையெல்லாம் விவரமாகப் புரிந்து கொள்ள முடியும்.



கருப்பைக்குள் சிசு ஒரு திரவத்திற்குள்ளே மிதந்துகொண்டிருக்கிறது. கண் விழித்ததும் அது கொட்டாவி விட்டுக் கொண்டே கைகால்களை உதைத்துக் கொள்கிறது. கைகளை நீட்டித் தொப்புள் கொடியைப் பிடிக்கிறது. அதோடு கொஞ்ச நேரம் விளையாடுகிறது.

அதன் பிறகு கட்டை விரலை வாயிலே வைக்கிறது. தாயின் இதயத்துடிப்பு, சமிபாட்டுப் பாதையிலே ஏற்படும் சப்தங்கள், இதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கிறபோது, தாயின் குரல் கேட்கிறதை உணர்ந்து அதைக் கவனிக்கிறது. தாய் எழுந்து நடக்கிறபோது, கருப்பை நீரின் லேசான குலுக்கலில் மெய்மறந்து மறுபடியும் தூங்கிப் போகிறது.

கருப்பைக்குள்ளே அமைதியாக இருக்குமென்று நினைக்கவேண்டாம். ஒரு மைக் மூலமாக அங்கே உள்ள சத்தத்தையெல்லாம் பதிவு பண்ணியிருக்கிறார்கள்.

தாயின் இதயத் துடிப்பு அங்கே டம்-டம்மென்று கேட்டுக்கொண்டே இருக்கும். தாய் மூச்சு விடுவது புஸ்புஸ்ஸென்று கேட்டுக்கொண்டே இருக்கும்.

வயிற்றிலேயிருந்தும் குடலிலேயிருந்தும் வருகிற பலவிதமான சப்தங்கள், இதைத் தவிர வெளி உலகத்திலே உள்ள சப்தமும் உள்ளே கேட்கிறதாம்.

அதனால்தான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கிற அறையிலே ரேடியோவும், டி.வி.யும் அலறும் அளவுக்குச் சத்தம் வைக்கக்கூடாது என்று சொல்வது. சத்தம் போட்டுப் பேசுவதும் தப்பு, சண்டை போடுவதும் தப்பு. சத்தமான இடங்களில் தாய்மார்கள் இருக்கக்கூடாது.

கருப்பைக்குள்ளே இருக்கிற சிசு மூச்சு விடுவதில்லை. இருந்தாலும் அதன் உதர விதானம் மூச்சு விடுவதுமாதிரி அசைந்து கொண்டே இருக்கும். அங்கே, அது எதையும் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் கருப்பையிலே உள்ள திரவத்தை அது குடிக்கிறது. அப்படிக் குடிக்கிறவேளை சில சமயம் அதுக்கு விக்கல்கூட ஏற்படும். அந்தச் சமயம் தாயாருக்கு வயிற்றுக்குள்ளே ஒரு தவளை குதிக்கிறது மாதிரி இருக்கும்.

உள்ளே இருக்கிற குழந்தைக்குப் பசியோ தாகமோ ஏற்படாது. ஆனாலும் தாயார் சாப்பிடுகின்ற உணவில் சத்துப்பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துப்பற்றாக்குறை ஏற்படும்.

ஒரு சிசு கருப்பையிலே இருக்கிறபோது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தால் அது அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி கை, கால்களை ஒரு குறிப்பிட்ட வகையிலே ஆட்டக் கற்றுக் கொள்ளுமாம். குழந்தை பிறந்த பிறகு அதே பாட்டைப்பாடி அழுகிற குழந்தையை அமைதிப்படுத்தி விடமுடியுமாம். ●

# பவுடர் பூசும் பக்குவம்

பெண்கள் முகத்திற்குப் பவுடர் பூசும் போது சில முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். முகத்திற்குப் பூசும் பவுடர் நல்ல தரமானதாக- தோலுக்குத் தீங்கு விளைவிக்காததாக இருக்க வேண்டும். சில பவுடர்கள் தோலில் அரிப்பையும், அலர்ஜியையும் ஏற்படுத்துவதோடு, முகத்தில் பருக்களையும் உருவாக்கி நீங்காத வடுக்களையும் ஏற்படுத்தி முகத்தைக் கோரப்படுத்தி விடும்.



பவுடரின் மணம் இதமாகவும் குளிர்ச்சியூட்டுவதாகவும், அதிக நெடியற்றதாகவும் இருக்க வேண்டும். உதட்டுச் சாயம் (லிப்ஸ்டிக்) பூசுதல், கண்ணுக்கு மை தீட்டுதல், புருவத்தை ஒழுங்கு படுத்துதல், கிறீம் தடவுதல் போன்ற பிற ஒப்பனைகள் முடிந்த பிறகுதான் கடைசியாகப்பவுடர் பூசும் ஒப்பனையை வைத்துக்கொள்ள வேண்டும்.

பவுடர் பூச மிருதுவான, மெல்லிய மடித்த துணியைப் பயன்படுத்தலாம். அல்லது பருத்தி மற்றும் வுல்லனில் தயாரித்த பஃவைப் பயன்படுத்தலாம். அது சுத்தமாக இருக்க வேண்டும். அதைப் பவுடரில் லேசாகத் தோய்த்து முகத்தில் அழுத்தித் தேய்க்காமல் சிறிதாக ஒற்றி, சீராகப் பூசவேண்டும். முகத்தில் எல்லா இடத்திலும் பூச வேண்டும். கூடிய வரை கண்ணிலும் உதட்டிலும் பவுடர் படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

பவுடர் பூசிய பிறகு கடைசியாக மெல்லிய துணியாலோ அல்லது இதற்கென உள்ள பிரஷ்களினாலோ முகத்தில் அதிகமாகத் திட்டுத் திட்டாகப் படிந்திருக்கும் பவுடரைத் துடைத்துச் சீர் செய்ய வேண்டும். கழுத்து, மூக்கின் பக்கவாட்டு ஓரங்கள், காதுகளின் ஓரங்கள் ஆகியவற்றை முக்கியமாகக் கவனித்து, பவுடர் அதிகமாகத் தெரிந்தால் அவற்றை லேசாகத் துடைத்து எடுத்து விட வேண்டும். ●

# ஆணுக்குக் காவல்

அழகும் உயரமுமாய் படத்தில் காணப்படுவது சிலை என்று நீங்கள் நினைத்தால் ஏமாந்து போவீர்கள்.

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமைச் சேர்ந்த டாக்டர் மார்க் வேன் தன் மெய்க்காப்பாளராக நியமித்துள்ள பெண்ணின் படம்தான் இது.

இரவு நேரங்களில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கச் செல்லும்போது சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள டாக்டர் இப்பெண்ணை நியமித்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த 6 அடி 2 அங்குலம் உயரம் கொண்ட இரா எமிலியோ நோவா என்ற உலக சாம்போ மல்யுத்த வீராங்கனை. ரஷ்யாவில் இவர் பல பிரமுகர்களுக்கு மெய்க் காப்பாளராக இருந்தவர்.



கணவருடன் பேர்மிங்ஹாமுக்குச் சுற்றுப் பயணம் வந்த இராவுக்கு டாக்டருடன் நட்பு ஏற்பட்டது. அந்தச் சமயம் டாக்டர் பல சமூக விரோதக் கும்பல்களிடமிருந்து மிரட்டல்களுக்கு ஆளாகியிருந்தார். டாக்டர் கேட்டுக் கொண்டதற்கிணங்க உடனே பொறுப்பேற்றார்.

தற்போது ஒரு 'ஜேம்ஸ் பொண்ட்' படத்தில் நடிக்கவும் இந்தப் பெண்ணுக்கு வாய்ப்பு வந்துள்ளது. விரைவில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலக மல்யுத்தப் போட்டியிலும் கலந்து கொள்கிறார். அதற்கான பயிற்சிகளுக்காகத் தாயகம் திரும்பவிருக்கிறார். போட்டியில் தூள் கிளப்ப வாழ்த்துக்கள்!

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது- சுகந்தினி)

## பயறு முறுக்கு

**தேவையானவை:**

| | |
|---|---|
| பாசிப்பருப்பு | - 1 கப் |
| அரிசி மாவு | - 4 கப் |
| மாஜரீன | - 1 கரண்டி |
| சீரகம் | - 1 கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - தேவையான அளவு |

**செய்முறை:**

பாசிப்பருப்பை நீர் விட்டு அடுப்பில் வைத்து வேகவிடவும் வெந்ததும் நன்கு ஆறவிடவும். இல்லையென்றால் முறுக்கு சிவந்து விடும்.

அரிசிமாவைச் சற்று வறுத்து எடுத்துக் கொள்ளவும். வேகவைத்த பாசிப்பருப்பு, அரிசிமாவு, மாஜரீன், சீரகம், உப்பு ஆகியவற்றை ஒன்றாகப் போட்டுப் பிசையவும். பிறகு வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கொதித்ததும், முறுக்குப் பிழியும் அச்சில் மாவைப் போட்டு முறுக்குப் பிழியவும்.

# வாரம் ஒரு இயற்கை மருத்துவம்

உடற்பருமன் அளவுக்கு அதிகமாகி விட்டாலும் நடக்க, ஓட, வேலை செய்ய மிகவும் சிரமமாக இருக்கிறது. இவ்விதம் தமது அன்றாட அலுவல்களைச் செய்ய இடையூறாக இருக்கும் அளவுக்கு அதிகமான உடற்பருமனைக் குறைத்து, அளவான உடற்பருமன் உள்ளவராக ஆக்க வல்லதும் இயற்கை உணவே ஆகும். அதற்கான நடைமுறைகளைக் கவனிப்போம்.

**காலை 5 மணி:**

மூன்று முதல் ஆறு டம்ளர் தண்ணீர் அருந்தலாம்.

**காலை 6 மணி:**

வாழைத்தண்டுச் சாறு அருந்தலாம். இச்சாறு உடற்பருமனைக் குறைக்க வல்லது. எலுமிச்சம்பழச்சாறு அருந்தலாம்.

**காலை 9 மணி:**

தோடம்பழம், அத்திப்பழம், பப்பாளிப் பழம், திராட்சைப்பழம் போன்ற சாறுள்ள பழங்கள் உண்ணலாம். தோடம்பழம், அத்திப் பழம் ஆகிய பழங்களுக்கு உடற்பருமனைக் குறைக்கும் ஆற்றல் உள்ளது.

**மதியம் 1 மணி:**

பசுங்காய்கறிக் கலவையும், பழங்களும் உண்ணலாம்.

**மாலை 4 மணி:**

தோடம்பழச்சாற்றுடன் அல்லது எலுமிச்சம்பழச்சாற்றுடன் தேன் கலந்து அருந்தலாம்.

**இரவு 7 மணி:**

தேங்காயும், பழங்களும் உண்ணலாம்.

**பொது:**

நோய் குணமாகும் வரை நாள்தோறும் எனிமா, சூரியஒளிக் குளியல் எடுத்தல் நல்லது, இளநீர், தோடம்பழச்சாறு, எலுமிச்சப்பழச்சாறு ஆகிய திரவ உணவில் மட்டும் இடையிடையே உண்ணாநோன்பு கொள்வது, விரைவில் உடற்பருமன் குறைய உதவும். நாள்தோறும் யோகாசனங்கள் செய்யலாம். பால், பாற்பொருட்களைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். சுமார் ஒரு மாதத்தில் குணம் பெறலாம். ■

# வீட்டுக்கு ஏற்ற வர்ணம்

வீட்டின் எல்லா வெளிச்சுவர்களுக்கும் வெள்ளைச் சுண்ணாம்பையே பூச வேண்டும். நாகரிகம் பெருத்துவிட்ட இந்தக் காலத்தில் சில வீடுகளுக்கு வெளியே பச்சை வர்ணம், மஞ்சள் வர்ணம் என்று பூசி வருகிறார்கள். வெள்ளைச் சுண்ணாம்பைத் தவிர வேறு வர்ணம் பூசி இருப்பவர்கள் இனிமேல் வெள்ளைச் சுண்ணாம்பையே பூச வேண்டும்.

வெள்ளை வர்ணத்திற்குச் சூரியனுடைய உஷ்ணத்தைத் தாங்கிக் கொண்டு, பிறகு அதைத் திருப்பி விட்டுவிடும் சக்தி இருக்கிறது. வேறு எந்த வர்ணத்திற்கும் இந்தச் சக்தி கிடையாது. வெள்ளை வர்ணம் பூசிய வீடுகளின் உள்பக்கம் எப்போதும் கொஞ்சம் குளிர்ச்சியாக இருக்கும். சூரியனின் வெப்பக் கதிர்களைத் தாங்கும் சக்தி படைத்த இந்த வெள்ளை நிறத்தால் வீடு எப்போதும் ஒரே மாதிரியான சீதோஷ்ண நிலையில் இருக்கும். வெள்ளை நிறத்துக்காகப் பூசப்படும் சுண்ணாம்பினால் சுவரில் இருக்கும் கிருமிகள் சாகின்றன.

எனவே, இனிமேல் வர்ணம் பூசுவதை விட்டுவிட்டுச் சுண்ணாம்பை நம் வீடுகளுக்கு நாம் பூச வேண்டும். நம் வீட்டை நாம் அழகாக வைத்துக்கொள்ள வேண்டியதுதான் அதற்காக நம் ஆரோக்கியத்தை நாம் கெடுத்துக் கொள்ளலாமா? ■

# 'பெப்சி'யின் தராதரப்பட்டியல்

## முதலிடத்தில் அரவிந்த டி சில்வா



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 1996-97 தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்களின் வரிசைப் பட்டியலை 'பெப்சி' நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் இலங்கையில் நடந்த சிங்கர் கோப்பைப் போட்டிகளில் ஒரு முறை கூட ஆட்டமிழக்காமல், நான்கு போட்டிகளில் 334 ஓட்டங்களைக் குவித்த அரவிந்த டி சில்வா பேட்டிங்கில் முதலிடத்தில் இருக்கிறார்.

சிறந்த பந்து வீச்சாளர்கள் வரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் அடம் ஹோலியாக் முதலிடத்தில் இருக்கிறார்.

பெப்சி நிறுவனம் வெளியிட்டுள்ள வரிசைப் பட்டியல் வருமாறு:

**பேட்டிங்**

| | | |
|---|---|---|
| 1. | அரவிந்த டி சில்வா (இலங்கை) | 9879 புள்ளிகள். |
| 2. | நிக் நைட் (இங்கிலாந்து) | 9704 புள்ளிகள் |
| 3. | சனத் ஜயசூரிய (இலங்கை) | 7767 புள்ளிகள் |
| 4. | முகமட் அசாருதீன் (இந்தியா) | 7473 புள்ளிகள் |
| 5. | ஸ்டீவ் வோவ் (அவுஸ்திரேலியா) | 6185 புள்ளிகள் |
| 6. | எவான்ஸ் (ஸிம்பாப்வே) | 5918 புள்ளிகள் |
| 7. | ராகுல் ட்ராவிட் (இந்தியா) | 5675 புள்ளிகள் |
| 8. | சைமிட் அன்வர் (பாகிஸ்தான்) | 5636 புள்ளிகள் |
| 9. | பிரவுண் (இங்கிலாந்து) | 5268 புள்ளிகள் |
| 10. | அலெக் ஸ்ரீவட் (இங்கிலாந்து) | 5252 புள்ளிகள் |
| 11. | இஜாஸ் அகமட் (பாகிஸ்தான்) | 4869 புள்ளிகள் |
| 12. | கிரஹாம் தோர்ப் (இங்கிலாந்து) | 4578 புள்ளிகள் |
| 13. | சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 4467 புள்ளிகள் |
| 14. | சவ்ரவ் கங்குலி (இந்தியா) | 4283 புள்ளிகள் |
| 15. | அஜய் ஜடேஜா (இந்தியா) | 4255 புள்ளிகள். |

**பந்து வீச்சு**

| | | |
|---|---|---|
| 1. | அடம் ஹோலியாக் (இங்கிலாந்து) | 9474 புள்ளிகள் |
| 2. | கிளென் மக்கிராத் (அவுஸ்திரேலியா) | 6925 புள்ளிகள் |
| 3. | அனில் கும்ப்ளே (இந்தியா) | 6429 புள்ளிகள் |
| 4. | உப்புல் சந்தன (இலங்கை) | 5604 புள்ளிகள் |
| 5. | டொமினிக் கோர்க் (இங்கிலாந்து) | 5466 புள்ளிகள் |
| 6. | சக்லைன் முஷ்டாக் (பாகிஸ்தான்) | 5391 புள்ளிகள் |
| 7. | முஷ்டாக் அகமட் (பாகிஸ்தான்) | 5320 புள்ளிகள் |
| 8. | றொபேட் குறொவ்ட் (இங்கிலாந்து) | 5184 புள்ளிகள் |
| 9. | டேமியன் பிளேமிங் (அவுஸ்திரேலியா) | 4919 புள்ளிகள் |
| 10. | வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்) | 4786 புள்ளிகள் |
| 11. | பீட்டர் மார்ட்டின் (இங்கிலாந்து) | 4564 புள்ளிகள் |
| 12. | வெங்கடேஷ் பிரசாத் (இந்தியா) | 4357 புள்ளிகள் |
| 13. | கிறிஸ் லூயிஸ் (இங்கிலாந்து) | 4083 புள்ளிகள் |
| 14. | ஜவகல் ஸ்ரீநாத் (இந்தியா) | 3589 புள்ளிகள் |
| 15. | குமார தர்மசேன (இலங்கை) | 3365 புள்ளிகள். |

# மழைக்கால டிப்ஸ்

மழைக்காலத்தில் பெண்கள் சமையல் அறையில் உள்ள பொருட்களைப் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டும். சீனி ஈரம் பட்டுக்கரையும். கோப்பித்தூளில் ஈரம் பட்டால் அது கெட்டுப்போய் விடும். பால் மா, ஹோர்லிக்ஸ், வீவா போன்றவை ஈரம் பட்டதும் இறுகி விடும். ஆகையால் இவைகளைப் பெரிய டப்பாக்களில் இறுக மூடி வைத்துவிட்டு, சிறிய டப்பாக்களில் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வைத்துக் கொண்டு பயன் படுத்த வேண்டும். மூடிகளை அடிக்கடி திறந்து மூடக் கூடாது. ஈரமான கரண்டிகளைப் பயன்படுத்தக் கூடாது.

மழைக்காலத்தில் உப்புக் கசிய ஆரம்பிக்கும். உப்பு வைத்திருக்கும் போத்தலிலோ அல்லது ஜாடிக்குள்ளோ இரண்டு பச்சை மிளகாய்களைப் போட்டு வையுங்கள். உப்புக் கசியாது.

முறுக்கு, காராபூந்தி, பிஸ்கட் போன்றவைகள் மழைக்காலத்தில் இளகிப்போய் விடும். இவைகளை வைக்கும் டின்களில் சிறிதளவு உப்பை ஒரு துணியில் முடிந்து அந்த டின்களில் போட்டு வையுங்கள். அந்தத் தின்பண்டங்கள் நமுத்துப் போகாமல் மொறுமொறுவென்று இருக்கும். ■

# மறக்கக்கூடாத ஏழு

1. சத்துள்ள உணவைச் சத்தோடு சமைத்துச் சரியான நேரத்தில் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. குறைந்தது ஆறு மணித்தியாலங்களாவது இடை வெளி இல்லாமல், ஆழ்ந்து தூங்க வேண்டும்.
3. தினமும் 10 கப் தண்ணீராவது குடிக்க வேண்டும்.
4. உணவில் காரம், புளிப்பை முடிந்த அளவு குறைக்க வேண்டும்.
5. மனநெருக்கடிகளில் இருந்து விடுபடுங்கள். அது ஆயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்றது.
6. இனிப்பு உணவுகளைக் குறையுங்கள்.
7. தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AL

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-10-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? எல்கடுவ வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**திருமதி ஜெயசித்ரா மனோகரன்**
உன்னஸ்கிரிய, புதுக்காடு, எல்கடுவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பரிசு பெற்றவர்



எம். சாரதாதேவி
பென்ரித் எஸ்டேட், அவிஸாவலை
பட்டுச்சேலைப் பரிசுப்போட்டிப் பரிசை வென்ற அதிர்ஷ்டசாலிகளுள் ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com

## இதுதான் காதலா....?

உன் தரிசனம்
கிடைத்ததில் இருந்து
நீ
பேசிய அந்த
நிமிடங்களை
நினைக்கும்
போதெல்லாம்
இனிக்கின்றதே...!
இது தான் காதலா....?
•••
தனிமையில்
நான் இருந்து
மனதுக்குள்–உன்
வதனம்
பார்த்து
மெல்ல
சிரிக்கிறேனே....!
இது தான் காதலா...?
•••
நாளைய
சந்திப்புக்காய்
ஒத்திகை
பார்த்திங்கு
வார்த்தைகளை
திருடுகிறேனே....!
இதுதான் காதலா....?
•••
தனிமையை
தினம் ரசித்து
சிறகில்லாமல்
பறக்கிறேனே....!
இது தான் காதலா...?
•••
தூக்கமும்
வருவதில்லை;
உணவிலும்
நாட்டமில்லை;
புரியாத–இப்
புது உணர்வால்
சந்தோஷப் படுகிறேனே...!
இது தான் காதலா...?
•••
இனிய உன்
பெயர்– அதை
'இராம ஜெயம்' போல
இங்கு எழுதுகிறேனே...!
இது தான் காதலா...?
•••
ஒலிக்கும்
பாடலில்
உன்னை நினைத்து–இங்கு
உனக்காக–நான்
இசைப்பதாக
உணருகிறேனே....!
இதுதான் காதலா.....?
•••
நேரிலே
சிரித்து பேசுகிறாய்;
கனவிலே
வந்து போகிறாய்;
அதனால்
இதமான,
புது உணர்வுகளால்
இருப்பதாக
உணருகிறேனே...!
இதுதான் காதலா.....?
•••

உன்னவன்–
வட்டவளை.

## தேன் கிண்ணம்

## தரிசனம் வேண்டும்!

அம்பெனும் விழிகளால் பேசியே என்றனை
அருகிலே அழைத்திடும் பெண்ணே!– நான்
கம்பனாய் மாறியே கவிபல செய்திடக்
கருணைநீ காட்டிட வேண்டும்!
*
பித்தனாய் ஆக்கிய பேதையுன் காதலைப்
பெற்றவன் நானொரு ஏழை!–நீ
நித்தமும் பக்கலில் வந்துமே சாகசம்
நிகழ்த்திட வேண்டுமே மானே!
*
அந்தியில் சேடிகள் கூடவே நீவரும்
அழகினைப் பாடலில் தீட்ட– நான்
சந்ததம் முயல்கிறேன் சல்லாப ராணிநீ,
சந்திக்க விரைந்துவா ஓடி!
*
மாந்தளிர் மேனியில் பொங்கிடும் உணர்வினை
மாந்திட வேண்டுமே நானும்–உன்
பூந்தனம் பற்றியே மெத்தையில் நித்தமும்
புரண்டிட வேண்டுமே நாளும்!
*
மாறிடா அன்பைநீ மகிழ்வுடன் நல்கினால்
மன்மதன் ரதியென நாங்கள்;–இப்
பூதலம் மீதிலே வாழ்ந்திட இயலுமே,
பூவையுன் "தரிசனம் வேண்டும்!"

அ.கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு.

## வா தோழி

வா தோழி...!
கனவுலகம் போய்
கற்பனைகளை சமக்கும்முன்
யுத்தங்களை நிறுத்துவோம்!
**
நிஜங்கள் எல்லாம்
அசிங்கமாய் போனது
ஏன் தோழி?
**
சமாதான கோட்டைகளை
அழகாக கட்டி
ஏன் தோழி
குண்டுவைத்தோம்?
**
உலகெல்லாம்
சனத்தொகை அதிகரிப்பு
எமக்கு–ஏன் தோழி
அவ்வாறு இல்லை?
**
எந்த இறைவனின்
பொழுது போக்கு
படைப்புகள் நாம்
தெரியுமா தோழி?
**
வா தோழி
இனியாவது நாம்
காதலிப்போம்;
கனவு சமப்போம்;
கற்பனையில் மிதப்போம்;
அழிவதற்கு முன்...!!!

சுபா வரன்– கண்டி.

## நாங்கள் அக்கினிகளே!

எங்கள் பசிவயிறு
சூரியனையும் சுட்டெரிக்கும்!

மூச்சுகள்
பங்குனிக் காற்றையும்
வியர்க்க வைக்கும்!

அக்கினியோடேயே
குடும்பம் நடாத்துகிறோம்,
அல்லும் பகலும்!

துயர்ப்பொதி சுமந்து
காய்த்துப்போன மனங்களோடும்
விழுப்புண்களோடும்
மனைவியை மருவி
மகிழ்ச்சியும் குளிக்கிறோம்!

அக்கினியின் சங்கமத்தில்
அரும்பி மலருகிற
பூக்களின் மூச்சுக்களும் அக்கினிதான்!
பொசுக்குகிற அக்கினிதான்!!

அக்கினியைச் சுவைத்து,
அக்கினியைச் சகிப்பதனால்
அக்கினியே எங்களது இயலாச்சு!

உணர்வும் அக்கினி,
எங்களை உருக்குவதும் அக்கினியே!

நாங்கள்,
அக்கினிகளாகவே
எரிந்து கொண்டிருக்கிறோம்!

ஓட்டமும், நடையும்
சில்லறைப் பாய்ச்சலும்
எந்நாளும்.....
எம் வாழ்வில்!

எங்கள் அக்கினி மூச்சே
ஒருபெரியமலையை உருட்டும்!
எதையும் உருக்கும்–
உருவாக்கும்.

துவளாத தோள்களும்,
தொடரான உழைப்பும்,
சொர்க்கத்தின் திறவுகோலே!

புரிந்து கொண்டால் போதும்!

நீலாபாலன்

## நெஞ்சுக்குள் ஒரு யுத்தம்

என் விழியோரத்து விளிம்புகளில்
நீ வந்து உட்காரு,
சிரி–
அழு...!
•••
இமையைக் கிளப்பி
அங்கு அட்டையாய் ஒட்டியிருக்கும்
உன் உருவத்தை தடவிப்பார்!
•••
அழகாய்த்தானே இருக்கிறாய்,
என் கண்களுக்குள்–
நீ....?
•••
போதும்;
இறங்கிப் போ–
கண்ணுக்குள்ள அரிக்குது!
•••
விரலை ஓட்டிக் கெண்டினாலும்
கண்மணி கரையப்பார்க்கும்;
உன் உருவம் மட்டும்
ஏன் உருக்குலைவதில்லை....?
•••
வெட்டாந்து கிடக்கும்
என் வாழ்க்கையை விட்டும்
தூரப் போய்விட்டாய் நீ;
ஆனாலும் பாரிக்கிறாய்,
என் மனசுக்குள்ளிருந்து கொண்டு!
•••
காக்கைக் கூட்டுக்குள்
முட்டையிடும் குயிலாய்–
உன் நினைவை விட்டுச் சென்றாயே...
என் இதயத்துக்குள்....!
•••
என் வாழ்க்கை என்ன
நெய்தல் நிலமா....,
உன் நினைவலைகளால் அரிக்கப்பட...?
•••
சதாவும் சுரண்டிக் கொண்டிருக்கிறாயே
என் மனசை;
நிறுத்தி விட்டு–
நினைவு அரத்தால்
'உன் நெஞ்சை' சுரண்டிப்பார்....!
•••
தூக்கத்திலும் உசும்புகிறாய் நீ
மனசுக்குள்;
நான் பாயோடு
அமளிப்படுகிறேன்...!
•••

சிந்தனைப்பித்தன்.

## சில கடுகுகள்

அழைப்பிதழ் இல்லாமலே
வீட்டுக்கு வரும்
விருந்தாளி....
–வண்டு–
**
இரவுப்பாடகன்
இராப்பிச்சைக்காக
அலைகின்றான்...
–நுளம்பு–
**

கடிதம்
திறந்து கிடக்கிறது
யாரும்
வாசிக்கலாம்....
–மலர்–
**
விழிகள் அணியும்
வெளிச்ச பர்தா...
–மூக்குக் கண்ணாடி–
**

தலைக்குள்
எரிமலை
உரசினால் வெடிக்கும்....
–தீக்குச்சி–
**
பூமிக்குத்திருமணம்
வானம்
பூச் சொரிகிறது.....
–மழை–
**

அசையாத படகு
உயிர்கள் பயணம்....
–தீவு–
**
இரும்புப் பாதையில்
செல்லும்
இந்தப் பாம்பில்
ஆயிரம்(ஆ)சனங்கள்...
–புகையிரதம்–
**

கரும்புதின்னக்
கூலி....
–சீதனம்–
**
காவற்காரன்
இறந்து போனான்
கறுப்புக் கொடி
பறக்கிறது.....
–அமாவாசை–
**

முத்திரைப் பறவை
முகவரி
இரை தேடும்....
–கடிதம்–
**
முன் தோன்றியவுடன்
தூரிகை இல்லாமலே
ஓவியம்....
–கண்ணாடி–
**

வகுப்பறைக்கறுப்பில்
தேய்ந்து
விளக்கும் தியாகி...
–வெண்கட்டி–
**

நிந்ததாசன்

'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்தில் சிவகுமாருடன், 'படாபட்' ஜெயலட்சுமி, கமலஹாசன்.






தனது தாயார் சகோதரருடன் சிறுவனாக இடது புறமிருப்பவர் யார்தெரிகிறதா? அட... சிவகுமார்





சிவகுமார்

## அந்த நாள் ஞாபகம்

அப்பா முத்துராமன்,
அண்ணன்,
அக்காக்களுடன்
அம்மாவின் மடியில் குறு
குறுப்போடு இருப்பவர்
யார் தெரிகிறதா?
அடடே... நம்ம கார்த்திக்!

## இந்த வாரம் உங்கள் பலன்

(13.10.96 தொடக்கம் 19.10.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | – சூரியன், புதன், இராகு. |
| தனு | – வியாழன். |
| மீனம் | – சனி, கேது. |
| கர்க்கடகம் | – செவ்வாய். |
| சிம்மம் | – வெள்ளி. |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

சந்திரன்– துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– செலவு மிகுதி, கடன்படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்– பணக் கஷ்டம், மனத் துயரம். | பகல் 12 மணி |
| செவ்வாய்– அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்– தொழில் நன்மை, பண வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்– வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி– தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி– துயர் நீங்கும் முயற்சி பலிதம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்– வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |
| திங்கள்– மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்– அந்நியர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்– துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்– வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி– இனசன விரோதம், மனப்பயம். | பி.ப. 2 மணி |
| சனி– காரியானுகூலம், உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– பணக் கஷ்டம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| திங்கள்– காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்– இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| புதன்– தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| வியாழன்– வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி– பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| சனி– காரியத் தடை, மனப் பயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| திங்கள்– மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்– பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்– தொழில் விருத்தி, மனக்கிலேசம். | பகல் 11 மணி |
| வியாழன்– உயர்ந்த நிலை, கௌரவ மேன்மை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி– முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| சனி– உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்– வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பகல் 12 மணி |
| செவ்வாய்– இனசன நன்மை, துயர் நீங்கும். | பி.ப. 3 மணி |
| புதன்– புதிய முயற்சி, அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி– பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| சனி– தொழில் கேடு, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– வெளிவிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்– இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்– காரிய சித்தி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்– முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்– மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி– பயனுள்ள செயல், பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |
| சனி– பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்– செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– மன மகிழ்ச்சி காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| திங்கள்– வெளியிடப் பயணம், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்– காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| புதன் – பிரயாண கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்– வீண்குறை கேட்டல், மனக்கிலேசம். | பகல் 11 மணி |
| வெள்ளி– மறைமுக எதிர்ப்பு, பயணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி– உயர்ந்த வாழ்க்கை, பண வரவு குன்றல். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| திங்கள்– உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| செவ்வாய்– அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்– வீண் முயற்சி, மனக் கிலேசம். | பகல் 11 மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி– உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| சனி– பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– தொழில் கேடு, கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்– அந்நியர் உதவி, மனப் பயம். | பகல் 12 மணி |
| செவ்வாய்– வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| புதன்– துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்– வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி– இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி– பயனுள்ள செயல்,,கௌரவம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. 3 மணி |
| திங்கள்– வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | பகல் 11 மணி |
| செவ்வாய்– துயர் நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| புதன்– உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி– வீண் முயற்சி, தொழில் மந்தம். | மு.ப. 9 மணி |
| சனி– வெளியிட பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்– மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| செவ்வாய்– உறவினர் உதவி, பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்– வீண் மனஸ்தாபம், செலவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்– துயர் அதிகம், கடன் படல். | பகல் 11 மணி |
| வெள்ளி– காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி– புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு– தொழில் நஷ்டம், வெளியிடப் பயணம். | பி.ப. 3 மணி |
| திங்கள்– காரிய சித்தி, பொருள்வரவு குன்றல். | பகல் 12 மணி |
| செவ்வாய்– பிரயாண மிகுதி, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| புதன்– மனக்குறை நீங்கும், பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி– இனசன நன்மை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி– காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்

www.padippakam.com





## எங்கள் ஊர்

எங்கள் வீட்டுப் பக்கம்
எமது பாடசாலை!
பாடசாலைப் பக்கம்
பந்தடிக்கும் மேடை!

மேடைப் பக்கம் தெற்கில்
மக்கள் கூடும் சந்தை!
சந்தை கூடும் இடத்தில்
சந்தி பிரியும் சாலை!

சாலை ஓரம் நெடுகில்
சாமான் விற்கும் கடைகள்!
கடைத் தெருவின் ஓரம்
கந்த சுவாமி கோவில்!

கோவில் முன்னாற் பெரிய
கோட்டை வாயிற் கதவு!
கதவைத் தாண்டி வந்தால்
காண்பீர் எங்கள் ஊரை!

சிந்து-பதுளை.

ஒற்றைக் குடும்பந் தனிலே-பொருள்
ஒங்க வளர்ப்பவன் தந்தை:
மற்றைக் கருமங்கள் செய்தே-மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# சொர்க்கமும் நரகமும்



புவனகிரி நாட்டின் மன்னன் புவனேந்திரனுக்கு, சொர்க்கமும், நரகமும் உண்மையில் இருக்கிறதா என்று ஒரு சந்தேகம் திடீரென்று வந்தது.

அதைத் தெளிவு படுத்திக்கொள்ள மகான் ஒருவரிடம் சென்றான். அவன் சென்றபொழுது ஒரு மரத்தடியில் மகான் அமர்ந்து இறை நாமங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

புவனேந்திரன், மகானின் அருகில் சென்று அவரை வணங்கி,

"தவசிரேஷ்டரே! எனக்கு ஒரு ஐயம். அதைத் தாங்கள் தான் தெளிவுபடுத்த வேண்டும்," என்று கேட்டுக் கொண்டான்.

"என்ன ஐயம் குழந்தாய்?" என்று கேட்டார் மகான்.

"சொர்க்கம், நரகம் என்று சொல்லுகிறார்களே, உண்மையில் அவை இருக்கின்றனவா?" என்று தனது ஐயத்தை வெளிப்படுத்தினான் புவனேந்திரன்.

மகான் அவனை ஒரு முறை மேலும், கீழும் பார்த்துவிட்டு,

"நீ யார்?" என்று கேட்டான்.

"நான் இந்நாட்டின் மன்னன். புவனேந்திரன் என் பெயர்," என்றான் அவன்.

"நீ இந்நாட்டின் மன்னனா? உனக்குச் சரியாக ஆட்சி செய்யத் தெரியுமா? உன்னை மன்னனாக மக்கள் எப்படி ஏற்றுக்கொண்டார்கள்? உண்மையில் இந்த நாட்டு மக்கள் முட்டாள்களாகத்தான் இருக்க வேண்டும்!" என்றார் மகான்.

இதைக்கேட்டதும் புவனேந்திரனுக்குக் கோபம் வந்தது. கண்கள் சிவந்தன. அதை அவனால் அடக்க முடியவில்லை.

"என்ன சொன்னாய்? எனக்குச் சரிவர ஆட்சி செய்யத் தெரியாதா? என் நாட்டு மக்கள் என்ன முட்டாள்களா? உனக்கு என்ன தைரியம்?" என்று கத்திக் கொண்டே, உடைவாளை, 'விசுக்'கென்று உருவினான் புவனேந்திரன்.

"அட.... வாள் வேறு வைத்திருக்கிறாயா? கூர் மழுங்கிப் போன இந்த வாள் ஒரு வாழைப் பழத்தைக் கூட வெட்டாது. இது என் தலையையா வெட்டப் போகிறது?" என்று சொல்லிக் 'கடகட'வென்று சிரித்தார் மகான்.

அவ்வளவுதான். புவனேந்திரனுக்குக் கோபம் தலைக்கேறியது. மகானின் கழுத்தை வெட்டுவதற்காக வாளை ஓங்கினான்.

"புவனேந்திரா! இப்போது நீ நரகத்தின் வாசலில் நிற்கிறாய்," என்றார் மகான்.

புவனேந்திரனின் ஓங்கிய வாள் அப்படியே நின்று, பிறகு மெல்லக் கீழே இறங்கியது. அந்த வார்த்தை புவனேந்திரனின் புத்தியில் அடித்திருந்தது. அவன் கோபம் உடனே மறைந்தது. ஓங்கிய வாளை மறுபடி, உறைக்குள் போட்டான்.

"மன்னா! இப்போது நீ சொர்க்கத்தின் வாசலில் இருக்கிறாய்,"என்றார் மகான்.

"அடிகளே! என்னை மன்னித்து விடுங்கள்," என்று மகானின் கால்களில் விழுந்தான் புவனேந்திரன்.

"மன்னா! உண்மையான நரகம் எது தெரியுமா? புத்தியை மறைக்கும் கோபம்தான். அந்தக் கோபத்தை வென்று சரியான மன நிலையில் இருப்பது தான் சொர்க்கம்." என்று மகான் கூறினார்.

"இப்போது புரிந்தது துறவியே. நான் சென்று வருகிறேன்." என்று கூறி அவரை வணங்கிவிட்டுச் சென்றான் மன்னன் புவனேந்திரன்.

## வாரம் ஒரு நாடு

### கட்டார்



தலைநகர்- டோஹா
பரப்பு - 11,437 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை- 5.13 இலட்சம்
மொழி - அரபி, ஆங்கிலம்.
எழுத்தறிவு- 75%
சமயம் - இஸ்லாம்
நாணயம்- றியால்
தனிநபர் வருமானம்- 16,240 டொலர்.

**அமைவிடம்:**

கட்டார், பேர்சியன்(அரேபியன்) வளைகுடாவில் நீண்ட நாக்குப் போன்று 160 கிலோமீட்டர் தூரத்துக்குப் புடைத்திருக்கும் நாடு. இது மூன்று பக்கங்களாலும் பேர்சியன் வளைகுடா வினால் சூழப்பட்டுள்ளது. சவுதி அரேபியா இதன் தெற்கில் அமைந்திருக்கிறது.


**வரலாறு:**

பிரிட்டனிடமிருந்து 1971ல் சுதந்திரம் பெற்றது. மன்னராட்சி நடைபெறுகிறது. 30 உறுப்பினர்களைக் கொண்ட நியமனக் கவுன்சில் உண்டு.

**பொருளாதாரம்:**

10% மக்கள் விவசாயம் சார்ந்து உள்ளனர். எண்ணெய் முக்கிய வருமான மூலம்.

## கடல் குதிரை



கடலில் ஆயிரக் கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் கடல் குதிரையும் ஒன்று. இது நிமிர்ந்து நின்று நீந்தும். இவைதான் கடல் உயிரினங்களில் மிக மெதுவாக நீந்துபவை. இது பார்ப்பதற்கு ஒரு மீனைப்போல இராது. இதன் முகம் குதிரையின் முகம் போல இருக்கும். இதனால் தான் இம்மீன் கடல் குதிரை என்று அழைக்கப்படுகிறது.

கடல் குதிரையின் உடல் முழுவதும் தடிப்பான செதில்கள் மூடியிருக்கும். இதன் முதுகின் மேல் சிறிய தோல் துடுப்பு வளர்ந்திருக்கும். இதைக் கொண்டு தான் இம்மீன் நீந்துகிறது. இதன் வால் நீண்டு சுருண்டிருக்கும். வாலினால் நீர்த்தாவரங்களைப் பற்றிக் கொண்டு நிற்கும். கடல் குதிரை பிறந்து வளர்வதே ஒரு விந்தையாகும். ஆண் கடல் குதிரையின் உடலில் ஒரு சிறிய தோல்பை வளர்ந்திருக்கும். ஒரு பெண் கடல்குதிரை அந்தப் பைக்குள் முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும், பைக்குள்ளேயே வளரும். பிறகு இரைதேட வெளியே வரும்.

கடல் குதிரைகளில் 50 வகை உண்டு. சிலவகைகள் 30 சென்ரி மீட்டர் நீளம் வளரும். சிறு புழுக்கள், பூச்சிகள், மீன் முட்டைகள் ஆகியவை இவற்றின் உணவு. வெப்பமண்டலக் கடல்களில் இவை காணப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.10.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 162
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 160

**பரிசுக்குரியவர்:**
எம். யூனூத்.
அல்-ஹிறா மகா வித்தியாலயம், இகல கொட்டாறமுல்ல.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஷ.்.பியா பேகம், முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | செல்வன் இப்திகார் இஸ்மாயில், மடவளை பஸார், மடவளை. |
| எல். உல்வியா, யோனகபுர, திக்குவல்லை. | செல்வி கே. தனுஷியா, புனித மத்தியாஸ் கல்லூரி, தெனியாய. |
| செல்வி சாந்தப்பிரியா கோபாலசிங்கம். விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-10. | செல்வன் எம். சிவகணேஷ், அந்-நூர் முஸ்லிம் மகா வித்தியாலயம், பாணகமுவ. |
| எஸ். செந்தூரன், ஊவாஹைலன்ட் த.ம.வி., பண்டாரவளை. | எஸ். கஜேந்திரன், மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| வி. லாவண்ஜா, குருமன்காடு, வவுனியா. | கே. உமேஷ், றோயல் கல்லூரி, கொழும்பு-7. |

## ஈஃபில் கோபுரம்



ஐரோப்பாவில் உள்ள மிக உயரமான கோபுரம் ஈஃபில் கோபுரமாகும்.

இதன் உயரம் 300 மீட்டர் (984அடி) ஆகும். இதனுடைய அடிப்பரப்பு 31 சதுர மீட்டர் (330 சதுர அடி) ஆகும்.

ஈஃபில் கோபுரம் ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் உள்ளது. 1889ல் பாரிசில் உலகக் கண்காட்சி ஒன்று நடந்தது. இந்தக் கண்காட்சியில் அலெக்ஸாண்டர் கஸ்டோவ் ஈஃபில் என்ற ஃபிரெஞ்சு பொறியியலாளர் இந்தக் கோபுரத்தைக் கட்டினார்.

நகரின் எந்தப் பகுதியில் இருந்து பார்த்தாலும் இந்த அழகிய கோபுரத்தைப் பார்க்கலாம். இக் கோபுரம் முழுக்க முழுக்க தேனிரும்பால் ஆனது. இதைக் கட்டுவதற்கு 7,300 தொன் இரும்பு செலவாயிற்று.

இக்கோபுரத்தின் மேல் மூன்று மாடிகள் உள்ளன. அவற்றில் வானிலை ஆராய்ச்சிக் கூடமும், உணவு விடுதிகளும் இருக்கின்றன. மேலே ஏறுவதற்குப் படிகளும், உயர்த்திகளும் (லிஃப்ட்) உண்டு.

## எர்த்வர்க்

படத்தில் உள்ள விலங்கைப் பாருங்கள். இதன்பெயர் எர்த்வர்க். பன்றிபோல் இருக்கிறதல்லவா? எர்த்வர்க் என்றால் நிலப்பன்றி என்று பொருள்.

உடல் பருத்துக் கனமாக இருக்கும் இதன் தலை சிறியது. நீளமான காதுகளைக் கொண்டிருக்கும். முகம் ஒரு குழாய் போல் நீண்டிருக்கும். கால்கள் உறுதியானவை. இதன் நீளமான நாக்கு பசைத்தன்மையுள்ளது.

இந்த நிலப்பன்றி, நிலத்தில் குழி தோண்டி அக்குழியில் வாழும். பகல் முழுவதும் தூங்கி இரவில்தான் வெளியே வரும். கரையான், எறும்பு தான் இதன் உணவு.



தன் வலிமையான கால்களால் கறையான் புற்றைச் சிதைக்கும். பின் நாக்கை நீட்டிக் கறையான்களைப் பிடித்துத் தின்னும். இது ஆபிரிக்கா கண்டத்தில் மட்டும்தான் காணப்படுகிறது.

## ஃபுளோரைட்



* ஃபுளோரைட் நீர் என்றால் என்ன?
ஃபுளோரைட் என்ற இரசாயனப்பொருள் பற்களுக்கு மிகவும் அவசியம் என்று கூறப்படுகிறது. சில நாடுகளில் குடிநீரில் மிகச் சிறிய அளவில் ஃபுளோரைட் சேர்க்கப்படுகிறது. இது ஃபுளோரைட் நீர் ஆகும்.

* ஃபுளோரைட்டால் உடலுக்குத் தீங்கு ஏற்படுமா?
ஆமாம். சிறிதளவு ஃபுளோரைட் சேர்த்தால் பற்களுக்கு நன்மை ஏற்படும். அளவு அதிகமானால் தீமை ஏற்படும்.

* இலங்கையில், நீரில் ஃபுளோரைட் உள்ளதா?
இலங்கையில் இயற்கையிலேயே நீரில் ஃபுளோரைட் அதிகம் உள்ளது.

* ஃபுளோரைட் அதிகம் உள்ள நீரைக் குடித்தால் என்னவாகும்?
பற்கள் கறுப்பாகும். எலும்புகள் வளையும் நோய் ஏற்படும். இந்த நோய்க்கு 'ஸ்கெலிடல் ஃபுளோரசிஸ்' என்று பெயர்.

* இந்த நோயைக் குணப்படுத்த முடியுமா?
முடியாது.

## விடுகதைகளும் விடைகளும்

1. எருமைக் கன்று இறப்பதேன்?
எருக்கம் இலை பழுப்பதேன்?
2. அர்த்த ஜாமப் பயணம் ஏன்?
ஆலிலை உதிர்வதேன்?
3. பொன்னாசாரி தட்டுவதேன்?
பூவையின் பற்கள் தெரிவதேன்?
4. குடிக்கத் தேன் கிடைப்பதும்
கூந்தல் மணப்பதும் எதனால்?
5. பாம்போடுவது ஏன்?
பாழ் கிணறு இடிவதேன்?
6. வெள்ளை அரிவாள் வீதியில் கிடக்குது.
அது என்ன?
7. நாடியைத் தாங்குவார் நாணயம் வாங்குவார்.
அவர் யார்?
8. வாய்தான் சிறிது ஆனால் வாலோ பெரிது?
அது என்ன?

**விடைகள்**

1. பால் இல்லாமல்
2. பறிப்பார் இல்லாததால்
3. நகைக்காக 4. பூவால்
5. அடிப்பாரற்று.
6. பிறைச் சந்திரன் 7.மருத்துவர்
8. வாாழைப்பூ 9. அகப்பை

தொகுப்பு: எஸ். வசந்தினி, வத்தளை.



படிப்பகம்

www.padippakam.com

# மறுபடி தா!

அசத்தல் 75

தமிழக கிரைம் கதை மன்னன்

பட்டுக்கோட்டை பிரபாகர்



"யெஸ், யுவர் ஆர்டர் ப்ளீஸ்."

"எனக்கு மாக்ட்வெல் விஸ்கி ஒரு லார்ஜ். உனக்கென்னப்பா ரவி?"

"எனக்கு கூல் ட்ரிங்ஸ் போதும் சார்."

"மதன், உனக்கு என்ன வேணும்?"

"எனக்கு எதுவும் வேணாம் சார்."

"என்னய்யா நீ, அதான் உன்னை வெளியே கொண்டார்ந்துட்டேனே, இன்னும் ஏன் உம்முன்னு உக்காந்திருக்கே, விஸ்கி சாப்பிடுவியா?"

"சாப்பிடுவான் சார், நான் தான் சாப்பிடமாட்டேன்."

**இதுவரை** மதன்-கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரிய கீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக்கிடக்கிறாள். கொலைப்பழி மதன் மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற்கரையில் காதலி கீதாவை அழைத்து கொலை செய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத் தரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மூலமாக மதன் விடுதலையாகிறான். **இனி**

"ரைட். அப்போ, இரண்டு லார்ஜ். ஒரு கூல் ட்ரிங் கொண்டாப்பா."

"மதன், ஃப்ரீயா இருடா. தண்டனையிலேர்ந்து நீ தப்பியாச்சு."

"தப்பணும்னு நான் விரும்பலையே. அப்படி விரும்பியிருந்தா சரண்டர் ஆகியிருக்க மாட்டேனே....."

"அட, என்னப்பா நீ குழந்தையாட்டம் பேசறே. அவனவன் ஒரு குடும்பத்தையே நெருப்பு வச்சிக் கொளுத்திட்டு என்கிட்டே வந்திருக்கான். அவனுக்கெல்லாம் விடுதலை வாங்கித் தந்திருக்கேன். நீ செஞ்சது உணர்ச்சிப் பூர்வமான கொலை. அதுவும் ஒரு மகானையா கொன்னே? ஒரு சுயநலக்காரியை தானே?"

"சுயநலம் ஒரு குறைபாடு சார். ஆனா அவ என் காதலி சார். கத்தியால குத்தற கடைசி வினாடி வரைக்கும் கூட என்னைக் காதலிச்சா சார். இப்படிக் குத்துவேன்னு எதிர்பார்த்திருப்பாளா? காதல் என்மேல இல்லைன்னா அவ வர வேண்டிய அவசியம் இல்லையே....?"

"என்னப்பா இது- இவ்வளவு ஃபீல் பண்றே...? இவ்வளவு பேசற நீ கொஞ்சம் செயலுக்கு முன்னாடி யோசிச்சிருக்கக் கூடாது?"

"சுயநலம் அவ குறைபாடுன்னா...... ஆத்திரம் என் குறைபாடு சார். விவேகம் எல்லாம் அடியிலே போய்டுச்சி. ஆத்திரம் மட்டும் தான் அந்த நிமிஷம்....."

"சரி, விடு, ஆனது ஆய்டுச்சி."

"மனசு குத்துது சார். எனக்கு மரண தண்டனை நியாயம் சார். அதனாலதான் கோர்ட்ல உண்மையையே சொன்னேன்."

"நல்லவேளை, 'ரவி என்னை சந்திச்சி என் பெயரை வாக்குமூலத்திலே சொல்லிடாதேன்னு சொன்னான்'னு அந்த உண்மையையும் சொல்லாம இருந்தியே......"

"உண்மையா சொல்றேன், இப்ப கூட எனக்கு உறுத்துது. நான் விடுதலையானது அநியாயம் சார். எனக்கு தண்டனை தேவை சார்."

"இரு புலம்பாதே! இந்தா இந்த விஸ்கியை குடி. கொஞ்சம் கொதிப்பு அடங்கும். பயங்கரமான நியாயஸ்த்தனா இருக்கியேப்பா. உன்னை வெளியே கொண்டார்றதுக்கு நாங்க எவ்வளவு பொய் கதைதிரிக்க வேண்டியதாய்போச்சு, இல்லை ரவி?"

"ரொம்ப அற்புதமா வாதாடினிங்க சார். ஜட்ஜுக்குக்கே இப்படிப்பட்ட வழக்கை எடுக்காதிங்கன்னு சொன்னதும் அசந்துட்டேன் சார். வராந்தால எல்லாரும் உங்களை சரியான திமிர் பிடிச்ச வக்கில்னு பேசினாங்க."

"பேசிட்டுப் போகட்டும். இந்த கேஸிலே நான் ஜெயிச்சதுக்கு என் வாதம் மட்டும் காரணம் இல்லை. பிராசிகியூஷன் படுவீக்கு. கத்தில கைரேகை இருக்கு. வாலண்டியரா சரண்டர் ஆகி ஸ்டேட்மெண்ட் கொடுத்துட்டான். இது போதும்னு இருந்துட்டாங்க. டீப்பா வொர்க் பண்ணலை. அந்த சட்டை விவகாரத்தில நான் குழப்பம் செஞ்சப்போ, அந்த குழப்பத்தையே அட்வான்டேஜா எடுத்துக்கிட்டு ஆழமா இறங்கியிருக்கணும். நான் பப்ளிக் பிராசிகியுட்டரா இருந்தா அப்படியே பிளேட்டைத் திருப்பியிருப்பேன். நேரடியா கொலையைப் பார்த்ததா அசைக்க முடியாம ரெண்டு சாட்சியை நிக்க வச்சிருப்பேன். நல்லசிவத்துக்கு சர்வீஸ் பத்தாது. ரவி, உங்க ஃபிரெண்டை உங்க கிட்டே பத்திரமா ஒப்படைச்சிட்டேன். மதன் இன்னும் நெர்வஸா இருக்கார். அவர் மனசை மாத்துங்க."

"என்ன சார் எந்திரிச்சிட்டிங்க?"

"ஒரே பெக்தான். அதுக்கு மேலேன்னா கார் டிரைவ் பண்ண சிரமப்படுவேன். நான் புறப்படறேன். நீங்க கொடுத்தது போக இன்னும் ஒரு ஆயிரம் கொடுங்க. காலைல ஆபீசுக்கு வாங்க. வர்றேன். மதன், பீ சியர்ஃபுல், நிறைய இருக்குப்பா உலகத்திலே சாதிக்கிறதுக்கு, மறந்துடு எல்லாத்தையும், மனசை பாய் மாதிரி விரிச்சி வையி. சந்தோஷமா இரு. ஸீயு."

"மதன் கொஞ்சமாச்சும் சிரியேண்டா."

"மனசுக்குள்ளே வெந்துக்கிட்டு எப்படிடா சிரிக்கிறது? ச்சே! உயிருக்குயிரா காதலிச்ச கீதாவை நான் கொன்னுட்டேனே! எவ்வளவு பெரிய பாவி நான்! இவ்வளவு செலவு பண்ணி என்னை ஏண்டா காப்பாத்தினே?"

"என்னடா அதையே சொல்லிக்கிட்டிருக்கே......சரியான தலைவலியாப் போச்சிடா. எல்லா பிரச்சனைக்கும் மூல காரணம் மரியகீதாவை கொலை செஞ்ச அந்த முகம் தெரியாத கொலைகாரன்தான். அந்த கொலை இல்லைன்னா இந்த கொலை இல்லை."

"வெயிட் ரவி. இன்னொரு தடவை சொல்லு. இந்தக் கொலைக்குக் காரணம் அந்தக் கொலையா?"

"இல்லையா பின்னே?"

"கரெக்ட்! என் கண்மணியை நானே பொசுக்கறதுக்கு அந்த பாஸ்டர்ட்தான் காரணம். சொல்லு ரவி, யாரு அது?"

"என்னைக் கேட்டா? எனக்கென்னடா தெரியும்?"

"தாங்க்ஸ்டா ரவி."

"எதுக்கு திடீர்னு?"

"நான் எதுக்காக இப்படி வெளில வந்தேன்னு நினைச்சேன். ரொம்ப நல்லதாய்ப் போச்சு. நான் செய்றதுக்கு ஒருகாரியம் இருக்குடா. தேங்க்ஸ் ரவி. ரொம்ப தேங்க்ஸ்."

"நாப்பது ரூபாதான் இருக்கு. ஒரு பெக்கோட நிறுத்திக்க என்ன? பேரர், பில் ப்ளீஸ்....போவோமா மதன்? எங்கேடா பார்க்கிறே? உத்தரத்திலே என்ன தெரியுது?"

"அந்த கொலைகாரனோட மூஞ்சி!"

**டீ** ஆறிப் போச்சிங்க மிஸ்டர் மதன். சாப்பிட்டுடுங்க."

"வாழ்க்கையே ஆறிப் போச்சு சார்."

"இங்கே பாருங்க. கேன்சர் பேஷண்ட் மாதிரி நடுவில நடுவில வசனம் பேசறது எனக்குப் பிடிக்கலைங்க. குழப்பிக் குழப்பி நீங்க சொன்னதிலேர்ந்து நான் என்ன புரிஞ்சிக்கிட்டேன்னு சொல்றேன். உங்களை சம்மந்தப்படுத்தி கேஸ் போட்டாங்க. லாயர் கோபாலகிருஷ்ணன் திறமையா வாதாடி உங்களை வெளில கொண்டாந்துட்டார். சரிதானா?"

"சரி சார். அடுத்து ரெண்டாம் பாகம் சார்."

"வாழ்க்கையா, இல்லை சரித்திர நாவலா, பாகம் பாகமா சொல்றிங்களே....."

"கேளுங்க மிஸ்டர் பரத், கீதா எனக்கு ஆதரவா சாட்சி சொல்ல வரலைன்னு சொன்னேனில்லையா....."

"சொன்னிங்களா?"

"சொல்லலையோ....கீதா எனக்கு ஆதரவா சாட்சி சொல்ல வரலை. அந்த ஆத்திரத்திலே நான் கீதாவை கொலை செஞ்சுட்டேன்."

"என்னது?"

"நிஜமாங்க போலிஸ்ல சரண்டர் ஆகி வாக்கு மூலமும் கொடுத்துட்டேன். அதே வக்கீல்ல பிடிச்சி என் ஃபிரெண்டு எனக்கு விடுதலை வாங்கிக் கொடுத்துட்டான்."

"என்னங்க இது சுத்த அயோக்கியத்தனமா இருக்கு."

"நான் மனப்பூர்வமா கோர்ட்ல ஒத்துக்கிட்டேன். ஆனா நீதிபதி குற்றம் ருதுவாகலைன்னு சொல்லி...."

"இருங்க. இருங்க ருது இல்லைங்க, அது பொம்பளைங்க விஷயம், ருசு!"

"ஆமாம். ருசுவாகலைன்னு சொல்லி விடுதலை செஞ்சுட்டார். சார், என் குற்றத்துக்காக நான் வெக்கப் படறேன்; வருத்தப் படறேன்."

"வேதனை?"

"அதுவும் படறேன். என் கொலைக்கு காரணம் மரியகீதாவோட கொலை. அந்த குற்றவாளியை நீங்க கண்டுபிடிக்கணும்."

"கண்டு பிடிச்சி.....பழி வாங்கணுமா நீங்க?"

"இல்லை; சட்டப்படி அவனுக்கு தண்டனை வாங்கிக் கொடுங்க போதும்."

"வழக்கமா எல்லாரும் பழி வாங்கணும்னுதான் சொல்லுவாங்க. நீங்க வித்தியாசமா சொல்லியிருக்கிங்க. ஒரு புத்திமதி சொன்னா கேட்டுக்குவிங்களான்னு தெரியலை."

"சொல்லுங்க சார்."

"டைம் கேட்டா பொய் சொல்லாம பதில் சொல்ற மாதிரி... எல்லார்கிட்டேயும் நிஜமா நான் கொலை செஞ்சேன். ஆனாலும் கோர்ட்ல என்னை விட்டுட்டாங்கன்னு சொல்லாதிங்க. நல்லதுக்கில்லை."

"வக்கீல்கிட்டே பொய் சொல்லக்கூடாதேன்னு தான்....."

"என்கிட்டே சொன்னது பரவாயில்லை. எனக்கு ஃபீஸ் தர்றதுக்கு பணம் இருக்கா? இன்னும் வேலையே அமையலைன்னு சொன்னிங்க?"

"இக்கட்டான சமயத்திலே பயன்படுத்தலாம்னு எங்கம்மாவோட மூணுபவுன் சங்கிலியை வச்சிருக்கேன். அதை வித்து உங்க ஃபீசை கொடுத்துடறேன்."

"போலிஸ் கண்டு பிடிக்கட்டுமே....அந்த குற்றவாளியை கண்டு பிடிச்சே ஆகணும்னு உங்களுக்கு என்ன அப்படி இக்கட்டு?"

"உடம்புதான் ஜெயிலை விட்டு வந்துடுச்சே ஒழிய.....மனசு இன்னமும் ஜெயிலுக்குள்ளேதான் சார் இருக்கு. அதுக்கு விடுதலை வேணும். அதுக்காக செலவு பண்ண தயாரா இருக்கேன்."

"மனசு ஜெயிலுக்குள்ளே இருக்கா? வேலை எதுவும் அமையலைன்றிங்க, ஏன் நீங்க தமிழ் சினிமாவுக்கு வசனம் எழுதப் போகக் கூடாது? ரொம்ப சுலபங்க. என்னோட மனப் பறவைக்கு சிறகொடிஞ்சி போச்சி, நான் போக வேண்டிய பாதை பொசுக்குன்னு முடிஞ்சு போச்சு.....இப்படில்லாம் எழுதிட்டாப் போதும்."

"பரத், என் கதை உங்களுக்கு கேலியா இருக்கா?"

"உங்களுக்கு ஹியூமர் சென்சே இல்லைன்னு தெரியாது. விட்டுடுங்க. வாழ்க்கையே ஆறிப் போச்சு. அதனாலே ஆறிப் போயிருந்தாலும் உங்களுக்கு டீ குடிக்கிறதிலே மறுப்பு இருக்காதுன்னு நினைக்கிறேன். நாளைக்கு இதே நேரம் வாங்க. நான் கொஞ்சம் விவரம் சேகரிச்சு வைக்கிறேன். இந்த காகிதத்திலே அட்ரஸ் எழுதுங்க."

"ஹாய் பரத்! சார் யாரு, புது கேஸா?"

"ஆய்......செருப்பைக் கழட்டிப் போட்டுட்டு உள்ளே வா, சார்பேரு மதன்."

"கிளாட் டு மீட் யு சார். முன்னாடி 'மன்' சேர்த்துகுங்க சார்."

"எதுக்கு?"

"மன்மதனாகறதுக்கு. உங்க முகத்துக்கு தாடி சூட் ஆகலையே....."

"நான் வர்றேங்க."

"என்ன பரத், ஆள் படு சீரியஸ் டைப்பா?"

"காதலி செத்துப் போனா, பேஸ்ட் விளம்பர போஸ் கொடுக்கவா முடியும்?"

"அடப் பாவமே? என்னவாம்? விபத்தா?"

"கொலை விபத்து."

"யாரு?"

"இவனேதான். கொன்னுட்டு, கோர்ட்ல ருதுவாகாமே.... ச்சே... ருசுவாகாமே தப்பிச்சிட்டு. இப்போ கண்ணீர் விட்டு, இவன் கொலை செஞ்சதுக்குக் காரணமா இருந்த இன்னொரு கொலையை செஞ்ச கொலைகாரனை சட்டத்துக்குப் பிடிச்சி கொடுக்க சபதமெடுத்து, அது நிறைவேற நம்மகிட்டே வந்திருக்கார் சார்."

"கொலைகாரனுக்கெல்லாம் உதவப் போறிங்களா?"

"அதான் உணர்றானே....கோர்ட் வேற இல்லைன்னு சொல்லிடுச்சி. அப்படியும் இவன் உண்மையை ஒத்துக்க றான்னா எவ்வளவு அப்பாவி!"

"அப்பாவின்னதும் ஞாபகம் வருது. எங்க ஆஃபிஸ்ல கோகிலான்னு புதுசா ஒருத்தி சேர்ந்துருக்கா. அப்பாவின்னா படு அப்பாவி."

"படுன்னா படுக்கிற அப்பாவியா?"

"ச்சீ கேளுங்க. நீங்க வாங்கிட்டு வரச் சொன்னிங்கன்னு எண்பத்தஞ்சி டேன்டெக்ஸ் ப்ரீஃப் உங்களுக்காக வாங்கி வச்சிருந்தேனா, அவ ஜென்ட்ஸ் ப்ரீஃப் பார்த்ததே இல்லையாம். பார்த்துட்டு ரொம்ப அப்பாவியா இது எதுக்குடின்னு கேட்டா பாருங்க. ஆஃபீஸ் பூரா சிரிச்சோம்."

"வரவர நாட்ல யோக்கியமான பொண்ணுங்க குறைஞ்சிட்டே வர்றாங்கப்பா."

"பரத், பசிக்குது என்ன வச்சிருக்கிங்க?"

"நத்திங். டிரிங்க்ஸ்தான் இருக்கு. வா, வெளில சாப்பிட்டுட்டு கமிஷனர் ஆஃபிஸ் வரைக்கும் போய்ட்டு வந்துடலாம்."

"ஒரு நிமிஷம். டிரெஸ் மாத்திட்டு வந்துடறேன்."

"ஏன், இந்த பாஜி நல்லாத்தானே இருக்கு."

"இது ஆஃபிஸ் டிரெஸ். ஜீன்ஸ் அண்ட் பனியன்தான் காஷுவல் டிரெஸ். அலமாரில பத்திரமா வச்சிருக்கிங்களா, இல்லை எலி கடிக்க விட்டுட்டிங்களா?"

"சலவைக்காரன் கேட்டான். சுசி, மார்ல என்னமோ எழுதிருக்கே, என்னாங்க சாமி அர்த்தம்னான். என்னடான்னு பார்த்தா 'கண்ட்ரோல் டவர்ஸ்' ன்னு எழுதிருந்திச்சி. எப்படிச் சொல்றது அவனுக்கு?"

"அந்த பனியன் இங்கேயா இருக்கு? நான் ஹாஸ்ட்டல்ல தேடு தேடுன்னு தேடினேன். அதைதான் போட்டுக்கப் போறேன் பரத்."

"சுசி போறது கமிஷனர் ஆஃபிஸ். இப்படி பிரைவேட்டா இன்ஸ்டால் பண்ண பர்மிஷன் வாங்கினிங்களான்னு கேப்பாங்க. என்ன இது, ஒரு சாக்ஸ் இருக்கு, ஒரு சாக்ஸ் காணோம்."

"நான் ரெடி, போகலாமா? சாக்ஸ் இல்லாம போட்டுக்கங்களேன்."

"அது சரி, பிராலெஸ் மாதிரியா? அதை ரசிக்கலாம். இதை வினோதமா பாப்பாங்க. அப்புறம் தேடிக்கிறேன். செருப்பு போதும் வா."

"பரத், பைக் நான் ஓட்றேன்."

"ஹோட்டல் பில் செட்டில் பண்ணறதா இருந்தா ஓட்டு."

"இது கூட செய்ய மாட்டேனா நான். வாங்க."

"முதல்ல கமிஷனர் ஆஃபிஸ், அப்புறம் ஹோட்டல்."

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம். சாலி.
வயது: 27
முகவரி: P.O.BOX- 16256, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். ரெஜினோல்ட்.
வயது: 24
முகவரி: சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: முகமட் சிராஸ்.
வயது: 19
முகவரி: 61 சி, காலி வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: நாவல் படித்தல்.

பெயர்: எஸ். யசோதரன்.
வயது: 23
முகவரி: 21, HOLLAND ROAD, EAST HAM, LONDON E6-2EW, U.K.
பொழுது போக்கு: சினிமா, நாவல்.

பெயர்: மதிவதனி. எம்,
வயது: 15
முகவரி: பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பேனாநட்பு.

பெயர்: எம். உவைஸ்.
வயது: 20
முகவரி: 44, பிரதான வீதி, ஹொறவப்பொத்தானை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். முபாரக்.
வயது: 21
முகவரி: P.O.BOX-10123, JEDDAH-21433, K.S.A.
பொழுது போக்கு : வழமையானவை.

பெயர்: ஜ. நஸார்.
வயது: 19
முகவரி: 9ம் வட்டாரம், மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி.

பெயர்: கே. சுந்தரராஜ்.
வயது: 22
முகவரி: 245/12, ஹில் ஹவுஸ் காடன்ஸ், தெஹிவளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். தெய்வராஜ்.
வயது: 22
முகவரி: கல்லுள்ள எஸ்டேட், மடுல்சீமை.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: பி. சுஜீவன்.
வயது: 22
முகவரி: CHAMP-DU-PLANE-8,2532 MAGGLINGEN,SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: எம். அப்துல்.
வயது: 28
முகவரி: 386, ஹீன்கன்டு வீதி, ராகம.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## 97

## மக்சீம் கார்க்கி

"அது பிரச்சனையில்லை" என்று முகத்தைச் சுழித்துக் கொண்டு அதையே திரும்பக் கூறினாள் லூத்மீலா.

"எதுதான் பிரச்சனை?" என்று கேட்டுக் கொண்டே அவன் பக்கமாகச் சென்றாள் தாய். "காரியம் வெற்றியோடு முடிய வேண்டும். அவ்வளவு தானே....?"

லூத்மீலா அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே நெற்றியைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

"இந்தக் காரியத்தை மேற்கொள்ளுவது ஆபத்தானது."

"ஏன்?" என்று அழுத்தத்தோடு கேட்டாள் தாய்.

"அதனால் தான்" என்று படபட வென்று பேசத் தொடங்கினான் அந்த டாக்டர். "நிகலாய் கைதாவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் நீங்கள் வீட்டை விட்டுக் கிளம்பியிருக்கிறீர்கள். தொழிற்சாலைக்கும் போய் வந்திருக்கிறீர்கள். எனவே அந்த ஆசிரியையின் அத்தை என்று எல்லோரும் உங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சிறிது நேரத்தில் அந்தச் சட்ட விரோதமான பிரசுரங்கள் தொழிற்சாலையில் தலைகாட்டி விட்டன. இதையெல்லாம் வைத்து ஜோடித்தால், உங்கள் கழுத்தில் சரியான சுருக்கு வந்து விழுந்துவிடும்."

"என்னை அங்கு எவரும் கண்டு கொள்ள முடியாது!" என்று மீண்டும் அழுத்தமாகக் கூறினாள் தாய். "நான் திரும்பி வரும்போது அவர்கள் ஒரு வேளை என்னைக் கைது செய்து 'எங்கு போய்விட்டு வருகிறாய்' என்று கேட்டாலும்....."

அவள் ஒரு கணம் தயங்கினாள். பிறகு சத்தமிட்டுச் சொன்னாள்:

"என்ன சொல்வேன் என்பது எனக்குத் தெரியும். அங்கிருந்து நேராக நான் தொழிலாளர் குடியிருப்புக்குச் செல்வேன். அங்கு எனக்கு ஒரு சிநேகிதன் இருக்கிறான்-சிஸோவ். விசாரணை முடிந்ததும் நேராக அவன் வீட்டுக்கு மன ஆறுதல் பெறுவதற்காகச் சென்று விட்டு வருவதாகக் கூறுவேன். அவனுக்கு ஆறுதல் தேவைதான். அவனது மருமகனும் தண்டனை பெற்றிருக்கிறான். அவனும் நான் சொல்வதை ஆமோதிப்பான்."

அவர்கள் நிச்சயம் தனது ஆசைக்கு இணங்குவார்கள் என்று அவள் உணர்ந்தாள்; எனவே அவர்களைச் சீக்கிரம் இணங்க வைக்க வேண்டும் என்பதற்காக அவள் ஆத்திரத்தோடும் அழுத்தத்தோடும் பேசிக் கொண்டே போனாள். கடைசியில் ஒரு வழியாக அவர்களும் சம்மதித்து விட்டார்கள்.

"சரி. துணிந்து போங்கள்" என்று விருப்பமின்றிச் சொன்னான் அந்த டாக்டர்.

லூத்மீலா எதுவும் சொல்லவில்லை. சிந்தனையில் ஈடுபட்டவாறே முன்னும் பின்னும் நடந்து கொண்டுதானிருந்தாள். அவளது முகம் குழம்பி வாடிப் போயிருந்தது: அவளது கழுத்துத் தசைநார்கள் அவளது தலையைக் கீழே சாய்க்காதபடி இறுக்கமாய்த் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. தாய் இதைக் கவனித்துவிட்டாள்.

"நீங்கள் எல்லோரும் என்னைப் பற்றியே கவலைப்படுகிறீர்களே?" என்று புன்னகையோடு கூறினாள் தாய்; "நீங்கள் உங்களைப் பற்றித் தான் கவலையே படக்காணோம்!"

"நீங்கள் சொல்வது உண்மையல்ல" என்றான் அந்த டாக்டர்; "நாங்கள் எங்களைப் பற்றியும் கவலைப்படுகிறோம். அது எங்கள் கடமை. ஆனால் ஒன்றுமற்ற காரியத்துக்காக, தங்கள் சக்தியை விரயம் செய்பவர்களிடம் தான் நாங்கள் கடுமையாக நடந்து கொள்கிறோம். சரி போகட்டும். பேச்சின் நகல் பிரதிகள் நீங்கள் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அங்கு வந்து சேரும்..."

அவன் அவளுக்கு அந்தக் காரியத்தை எப்படியெப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் விளக்கிக் கூறினான், பிறகு அவளது முகத்தையே கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னான்:

"சரி, உங்களுக்கு அதிருஷ்டம் உண்டாகட்டும்!"

ஆனால் அவன் வெளியே செல்லும் போது அவன் முகத்தில் ஒரு மகிழ்ச்சியின்மை பிரதிபலித்தது. லூத்மீலா தாயை நோக்கினாள்:

"உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியும்" என்று அமைதி நிறைந்த சிரிப்போடு சொன்னாள் அவள்.

பிறகு அவள் தாயின் கரத்தை எடுத்துப் பிடித்தாள்; மீண்டும் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தாள்.

"எனக்கும் ஒரு மகன் இருக்கிறான். அவனுக்கு இப்போது பதின்மூன்று வயசாகி விட்டது. ஆனால், அவன் தன் தந்தையோடு வாழ்கிறான். என் கணவர் ஓர் அரசாங்க வக்கீலின் நண்பர். அந்தப் பையன் அவரோடு இருக்கிறான். அவன் எப்படி மாறப் போகிறானோ? அதைப் பற்றி நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு..."

அவளது குரல் அடைபட்டு நின்றது. ஒரு நிமிஷம் கழித்து அவள் மீண்டும் அமைதியாக, சிந்தனையோடு பேசத் தொடங்கினாள்.

"நான் எந்த ஜனங்களை நேசிக்கிறேனோ, இந்த உலகத்தில் எந்த ஜனங்களை அருமையான மக்கள் என்று மதிக்கிறேனோ அந்த ஜனங்களுக்குப் பரம எதிரியானவரிடம் தான் அவன் வளர்ந்து வருகிறான். என் மகனே எனக்கு எதிரியாக வளர்ந்து வரக் கூடும்; அவனால் என்னுடன் வாழ முடியாது. நான் இங்கு மாறு பெயரில் வாழ்ந்து வருகிறேன். அவனை நான் பார்த்தே எட்டு வருஷங்கள் ஆகின்றன. எட்டு வருஷங்கள்! எவ்வளவு காலம்!"

அவள் ஜன்னலருகே நின்றாள்; நிர்மலமாக வெளுத்துக்கிடந்த வானத்தைப் பார்த்தாள்.

"அவன் மட்டும் என்னோடு வாழ்ந்திருந்தால், நான் இன்னும் பலம் பெற்றிருப்பேன். எனது இதயத்தில் இந்த வேதனை இன்னும் உறுத்திக் கொண்டிருக்காது.... அவன் இறந்து போயிருந்தால்கூட, எனக்குச் சிரமமில்லாது போயிருக்கும்...."

"அடி என் கண்ணே!" என்று பாசத்தால் புண்பட்ட இதயத்தோடு பெருமூச்செறிந்தாள் தாய்.

"நீங்கள் அதிருஷ்டக்காரர்!" என்று ஒரு கசந்த புன்னகையோடு சொன்னாள் லூத்மீலா; "அதிசயமான ஒற்றுமை தாயும் மகனும் ஒரே அணியில்- ஒருவர் பக்கம் ஒருவர்- அபூர்வமான நிகழ்ச்சி!"

"ஆமாம். அதிசயமானதுதான்" என்று தன்னைத் தானே வியந்து கூறிக்கொண்டாள் பெலகேயா. பிறகு தன் குரலைத் தாழ்த்தி ஏதோ ஓர் அந்தரங்க இரகசியத்தைக் கூறுவது போல அவள் பேசினாள்: "நீங்கள் எல்லோரும்-நிகலாய் இவானவிச்சும், சத்தியத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவரும்- நீங்கள் எல்லோருமே ஒருவர் பக்கம் ஒருவராகத்தான் நிற்கிறீர்கள். திடீரென்று மக்கள் அனைவரும் நமக்கு உறவினர்களாகி விடுகிறார்கள். உங்கள் அனைவரையும் நான் புரிந்து கொள்கிறேன். எனக்கு வார்த்தைகள்தான் புரியாது போகலாம்; ஆனால் அதைத் தவிரப் பிறவற்றையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடியும்."

"ஆமாம். அப்படித்தான்" என்று முனகினாள் லூத்மீலா: "அப்படித்தான்...."

தாய் தன் கையை லூத்மீலாவின் மார்பின் மீது வைத்துக் கொண்டே இரகசிய குரலில் மேலும் பேசினாள்; ஒவ்வொரு வார்த்தையையும் நினைத்து நினைத்துப் பேசுவது போலிருந்தது அவள் பேச்சு.

"நமது பிள்ளைகள் உலகில் அணி வகுத்துச் செல்கிறார்கள். அதைத்தான் நான் புரிந்து கொள்கிறேன்-நமது பிள்ளைகள் உலகில் அணி வகுத்துச் செல்கிறார்கள்; உலகெங்கும், சகல மூலைமுடுக்குத் திசைகளிலிருந்தும் ஒரே ஒரு இலட்சியத்தை நோக்கி அணிவகுத்து முன்னேறுகிறார்கள். பரிசுத்தமான உள்ளத்தோடும், அருமையான மனத்தோடும், தீமையை எதிர்த்து தமது பலத்த காலடியால் பொய்மையை மிதித்து நசுக்கிக் கொண்டே, கொஞ்சங்கூடத் தயக்கமின்றி முன்னேறிச் செல்கிறார்கள். அவர்கள் இளைஞர்கள், ஆரோக்கியசாலிகள்; அவர்களது சகல சக்தியையும் ஒரே ஒரு விஷயத்தை நோக்கி-நியாயத்தை எதிர் நோக்கிப் பிரயோகித்துச் செல்கிறார்கள். மனிதகுலத்தின் துயரத்தை வெல்வதற்காக அவர்கள் முன்னேறுகிறார்கள். சகல துரதிருஷ்டங்களையும் துடைத்துத் தூர்ப்பதற்காக சகல அசுத்தங்களையும் கழுவிப் போக்குவதற்காக அவர்கள் அணியணியாக முன்னேறிச் செல்கிறார்கள். அவற்றை அவர்கள் போக்கித்தான் தீருவார்கள். அவர்கள் ஒரு புதிய சூரியனை உலகுக்குக் கொண்டு வருவார்கள் என்று அவர்களில் ஒருவன் சொன்னான்; நிச்சயம் அந்தச் சூரியனை அவர்கள் கொண்டு வந்தே தீருவார்கள்! மனமுடைந்து போன சகல இதயங்களையும் ஒன்றுபடுத்துவார்கள்; ஒன்றுபடுத்தியே தீருவார்கள்!"

அவள் தான் மறந்துவிட்ட பிரார்த்தனை வாசகங்களை எண்ணிப் பார்த்தாள். அந்த வார்த்தைகளால் அவளது மனத்திலே புதியதொரு நம்பிக்கை பிறந்தது; அந்த வாசகங்கள் அவளது இதயத்திலிருந்து தீப்பொறிகளைப் போல் சுடர்விட்டுத் தெறித்துப் பிறந்தன:

"நமது பிள்ளைகள் சத்தியமும் அறிவும் சமைத்த பாதையிலே செல்கிறார்கள்: மனித இதயங்களுக்கு அன்பைக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள்; இவ்வுலகத்திலே புதியதொரு சொர்க்க பூமியை உண்டாக்குகிறார்கள். இவ்வுலகத்தைப் புதியதொரு ஒளி வெள்ளத்தால், ஆத்ம ஆவேசத்தின் அணையாத தீபத்தால், ஒளிரச் செய்கிறார்கள். அந்த ஒளிப் பிழம்பின் தீ நாக்குகளிலிருந்து புதிய வாழ்க்கை பிறப்பெடுத்துப் பொங்குகிறது. மனித சமுதாயத்தின் மீது நமது பிள்ளைகள் கொண்டுள்ள அன்பிலிருந்து அந்த வாழ்க்கை பிறப்பெடுக்கிறது. அந்த அன்பை எவரால் அணைக்க முடியும்? இதை எந்த சக்திதான் அழிக்க முடியும்? எந்த சக்திதான் இதை எதிர்க்க முடியும்? பூமியிலிருந்து இது ஊற்றெடுத்துப் பொங்கி வருகிறது; வாழ்க்கை முற்றும் இதன் வெற்றிக்காகப் பாடுபடுகிறது. ஆம், வாழ்க்கை முற்றும்தான்!"

அவளது உணர்ச்சியாவேசத்தால் அவள் சோர்ந்து போய் லூத்மீலாவை விட்டுப் பிரிந்து இரைக்க மூச்சுவாங்கிக் கொண்டே கீழே உட்கார்ந்தாள். லூத்மீலாவும் சத்தம் செய்யாமல் ஜாக்கிரதையோடு நடந்து சென்றாள்; எதையோ கலைத்து விடக்கூடாது என்ற பயத்தோடு நடந்தாள். அவள் தனது ஒளியற்ற கண்களை முன்னால் பதித்துப் பார்த்தவாறு அந்த அறைக்குள்ளே மிகுந்த நாசூக்கோடு நடந்தாள். அவள் முன்னைவிட உயரமானவளாக, நிமிர்ந்தவளாக, மெலிந்து விட்டதாகத் தோன்றினாள். அவளது மெலிந்த கடுமை நிறைந்த முகத்தில் ஓர் ஆழ்ந்த கவனம் தோன்றியது; அவளது உதடுகள் துடிதுடித்து இறுகி மூடியிருந்தன. அந்த அறையிலே நிலவிய அமைதி தாயின் மனத்தைச் சாந்தி செய்தது. லூத்மீலாவின் நிலைமையைக் கண்டறிந்த தாய் தான் ஏதோ தவறாகச் சொல்லிவிட்டது போல் கேட்டாள்:

"நான் ஏதும் சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டேனோ?"

லூத்மீலா அவள் பக்கம் திரும்பி, பயந்து போனவள் மாதிரி அவளைப் பார்த்தாள். பிறகு எதையோ நிறுத்தப் போவது மாதிரி தாயை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு அவசர கதியில் பேசினாள்:

"இல்லையில்லை. இப்படித்தான் இருக்கிறது. இப்படித்தான். ஆனால் இதைப்பற்றி நாம் இனிமேல் பேசவே கூடாது. நீங்கள் சொன்னதோடு இருக்கட்டும்." அவளது குரல் மிகுந்த அமைதியோடிருந்தது. அவள் மேலும் சொன்னாள்: "சரி சீக்கிரம் புறப்பட வேண்டும். நீங்கள் போக வேண்டிய தூரமோ அதிகம்."

"சீக்கிரமே கிளம்புகிறேன். நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் என்பதை மட்டும் நீங்கள் அறிந்தால்! என்னுடைய மகனின், என்னுடைய சதையும் இரத்தமும் கொண்ட என் மகனுடைய வாசகங்களை நான் பிறரிடம் கொண்டு செல்லும் போது எவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன். எனது இதயத்தையே வழங்குவது போல் இருக்கிறது எனக்கு!"

(தொடர்ந்து வரும்)



> **தீமையை எதிர்த்து தமது பலத்த காலடியால் பொய்மையை மிதித்து நசுக்கிக் கொண்டே, கொஞ்சங்கூடத் தயக்கமின்றி முன்னேறிச் செல்கிறார்கள் நமது பிள்ளைகள். நியாயத்தை எதிர் நோக்கிச் செல்கிறார்கள். மனிதகுலத்தின் துயரத்தை வெல்வதற்காக அவர்கள் முன்னேறுகிறார்கள். -தாய்-**

# கலையாத நினைவுகள்

எம்.எச்.எம். தௌபீக்
புதிய காத்தான்குடி

> **பெருநாள் சாப்பாடுகளையும், பொங்கல் பலகாரங்களையும் மாறி மாறி பரிமாறிக் கொண்டவர்கள் அல்லாவையும், முருகனையும் ஒரே இடத்தில் இருந்து அழைத்தவர்கள்.....**

நவாஸ்ரேடர்ஸ் சென்று தினமுரசு வாங்கிவரும் எண்ணத்தோடு சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்த நான் குட்வின் சந்திக்கு வந்து கடைகள் எல்லாம் பூட்டப் பட்டிருப்பதைத் கண்ணுற்ற போதுதான், இன்று வெள்ளிக்கிழமை; கடைகள் திறந்திருக்காது என்பதை உணர்ந்தேன். "சுப்பிரமணியத்தின்ர கடையிலயும் முரசு எடுக்கலாம்" என்று றம்ஸான் சொன்னது நினைவில் வர ஆரயம்பதி பக்கமாக சைக்கிளைத் திருப்பி மிதிக்க ஆரம்பித்தேன். எல்லை வீதியில் இருந்தபோது நாள் குறையாமல் சுப்ரமணியத்தின் கடைக்கு செல்லும் நான் 'எண்பத்தி நான்குக்கு' பிறகு இன்றுதான் முதல் முறையாக செ[illegible]கிறேன்.

நாவற்குட[illegible]வில் ஒரு மகனைப் பறி கொடுத்ததால் இருபக்கத்திற்கும் செல்ல உம்மாவிடம் இருந்து தடை உத்தரவு. தாய்சொல்லைத் தட்டாதே என்பார்களே! அதனால் தாயிட்ட அன்புக் கட்டளையைத் தட்ட முடியவில்லை.

முரசை வாங்கிக் கொண்டு எல்லை வீதிவரை வந்த எனக்கு நான் பிறந்து முதலாம் எட்டுவரை துள்ளித்திரிந்த எனது பழையவீட்டைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஊற்றெடுக்க சைக்கிளை எல்லை வீதிப் பக்கமாக திருப்பினேன்.

ஒரு பக்கம் தமிழர்கள் வீடுகளும் மறுபக்கம் முஸ்லிம் வீடுகளும்- முகத்தை முகத்தைப் பார்த்து கொண்டிருந்ததினால் எழுபத்தாறின் காலப்பகுதியில் ஒருவரை ஒருவர் பிரிக்க முடியாது ஒன்றிப் போய் இனிய உறவுனால் இணைந்திருந்த இரு இனங்களின் வீடுகளும் அலங் கோலமாய்க் காட்சிதர வீதியில் எந்த ஆரவாரமுமின்றி, சென்றி பொயிண்டுகள் ஆக்கிரமித் திருந்தன.

'பெருநாள் சாப்பாடுகளையும், பொங்கல் பலகாரங்களையும் மாறிமாறி பரிமாறிக் கொண்டவர்கள்; சூறாவளி சுழற்றியடித்த போது அல்லாவையும் முருகனையும் ஒரே இடத்தில் இருந்து அழைத்து குரலெழுப்பியவர்கள் வாழ்ந்த இடம் இன்று ஒருவருக்கு ஒருவர் பயந்து புலம்பெயர்ந்து சென்றதினால் ஆரவாரமற்று அலங்கோலமாய்க் கிடக்கிறதே!' என எண்ணி என் உள்ளத்தை வேதனை அம்புகள் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தன. ஒருவாறு என்னை தேற்றிக் கொண்டு ,எனது பழைய வீடு வரை சென்ற நான் சற்று நிதானித்து நின்று வீட்டுக்கு முன்னால் இருந்த முத்துக்குட்டி அக்கா வீட்டை நோட்டமிடுகிறேன். கேற்றை தழுவிக் கொண்டிருந்த பூட்டு வீட்டில் எவரும் இல்லை என்பதை உத்தரவாதப் படுத்தியது.



முத்துக்குட்டி அக்கா! விளிமாங்கா, இளநீர் என்று என்னவெல்லாம் தருவா இப்போ இருப்பாவோ, இறந்துவிட்டாவோ? என்று என் மன அலைகள் கண்ணீரின் கரையை தொட்டுக்கொண்டிருக்க ஒருவாறு என்னைச் சுதாரித்துக் கொண்டு பேச்சி அம்மன் கோயில் முன்னால் இருந்த வெட்ட வெளி இடத்தை நோட்டமிடுகிறேன்.

அந்த இடத்தில்தானே நான் அப்துல்ஹை, ராஜா, சாதிக்கின், குட்டி, பைஸர், றபாய், யோகன், அமீர், சமீன், சின்னவன், உமா, தேவி, சபீனா, மிஸ்றியா எல்லோரும் முதலாம் எட்டில் ஆடாத விளையாட்டெல்லாம் ஆடித்திரிந்தோம். சித்திரை புத்தாண்டு வந்தால் ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டுவார்கள். எல்லோரும் சேர்ந்தே ஆடுவோம். ஊஞ்சல் அவிழ்க்கப்பட்டால் பிறகு ஆலமர விழுதுகள்தான் எங்களுக்கு ஊஞ்சல். சூறாவளிக்குக்கூட தலைசாயாத அந்த ஆலமரம் தற்போது இருந்த இடமும் இல்லை.

பெருநாள் காலங்களில் பேதமின்றி எல்லோரும் மருதாணி கைகளில் போட்டுக்கண்விழித்தது; பொங்கல் வந்தால் நெசவு வேலைக்குவரும் பூமணி அக்கா, தவமணி அக்கா, வாவா அக்கா, மாலா, வசந்தி, எல்லோரும் கொண்டு வந்து தரும் பொங்கல் புக்கையை பங்கு போட்டு சாப்பிட்டது. எல்லாமே பசுமரத்தாணி போல இன்னும் நினைக்க நினைக்க இனிக்கிறது. கலையாத இந்த இனிய நினைவுகள் போல இனி என்று வரும்? என்று ஏங்கிய என் உள்ளம் வேதனையின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருக்க; இனிவரும் காலங்களில் இரு இனங்களின் சந்ததிகளும், இனிய உறவுகளால் கைகுலுக்கிக் கொள்ளும் அந்த நல்ல நாளை சீக்கிரம் (எங்களைப்போல) கொடு இறைவா? என்று வேண்டி கொள்ள வேதனையோடு வீட்டை நோக்கி சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

"எட குறுக்காலை போவானே...! இஞ்சாலை வாடா" கடைக்குட்டி ராசனை ஏசினாள் ராணி. "உவன்ரை குறுகுறுப்பை ஆராலை அடக்கேலும்?" சலித்துக் கொண்டாள். இரண்டு மாதம் ஆகிவிட்டது. கிளிநொச்சி அடிக்குப் பயந்து பிள்ளை குட்டிகளோடு காட்டுப் பக்கமாக ஓடி வெளிக்கிட்டு வந்து மரத்துக்குக் கீழால் தடிகளைப் போட்டு குடில் மாதிரி அமைத்துக் கொண்டு. கிடுகுக்குப் பதிலாக பொலித்தீன் பேப்பர்களால் வேய்ந்து கொண்டு... எத்தனை காலங்களுக்குத்தான் இந்த நாடோடி வாழ்க்கையை வாழ முடியும்?

கிளிநொச்சி டிப்போவுக்குப் பக்கத்தில் ஒரு நல்ல கல்வீட்டில் வசதியாக வாழ்ந்தவள்தான் ராணியும். கணவன் கந்தசாமி பஸ் ட்றைவர். தகப்பன் வேலாயுதம் நல்ல கமக்காரர்.

வயல்க்காணி ஆறேக்கர், வெள்ளாண்மை காலங்களில் நன்றாகப் பிரயாசைப்பட்டு உழுது விதைத்து... நல்லா விளையும் 'எக்ஸ் ஃபோர்.' பார்க்க அழகு.. கொள்ளை அழகு.

கந்தசாமிக்கு ட்றைவர் வேலையை விட்டால் வேறை ஒண்டும் தெரியாது. வேலாயுதம் தான் வயல் வேலை எல்லாம் செய்து, மனங் கோணாமல் மகள் குடும்பம் என்று வாழப் பழகிக் கொண்டார்.

காடு காடுதான். சிறுவன் குரங்குகளின் ஒருகூட்டம் எங்கிருந்தோ வந்தது. மால் இறக்கியிருந்த அரச மரத்திற்கு மேலால் தாவி குதியன் போட்டது. 'கொப்புகள் முறிஞ்சிடுமோ?' ராணி பயப்பட்டாள். "ச்சே.. என்ன சனியன் உதுகள்.... ஆ... ஆ.." விரட்டினாள். தடியை எடுத்து ஓங்கினாள். குரங்குக் கூட்டம் அவளுக்கு ஏய்ப்புக் காட்டியது.

ராணிக்கு கோபம் வந்துவிட்டது. கிழக்குப் பக்கமாக இருந்த கொப்புக்கு நேரே இரண்டு குரங்குகள் இருந்தன. அடுப்படிக்குப் போய் பெரிய நெருப்புக் கொள்ளி ஒன்றைக் கொண்டு வந்து வீசி எறிந்தாள். சரியாய் சிறுவன் குரங்கொன்றின் கையில் போய்ப்பட்டது. நெருப்புச் சுட்டு விட்டது. குரங்கு ஒருமுறை ராணியை முறைத்தது 'எக்கணம் கடிச்சுப் போடுமோ?' நினைவு மாறவில்லை. சிறுவன் குரங்குக் கூட்டம் ராணிக்கு மேல் பாய்ந்தது. முகத்தை விறாண்டி, கையில் கடித்து, முதுகில் குதறி..

> கிளிநொச்சி டிப்போவுக்குப் பக்கத்தில் நல்ல கல்வீட்டில் வாழ்ந்தவள்தான் ராணி. கணவன் கந்தசாமி பஸ் ட்றைவர். தந்தை கமக்காரர். இப்போது... இப்போது......



மானுடபுத்திரன்

குய்யோ முறையோ என்று கத்துவதற்கு முன் ராணியை ரணப்படுத்திய குரங்குகள் கண்காணாமல் மறைந்து விட்டன. இரத்தம் வழிய வழிய விழுந்து கிடந்தாள் ராணி. ஓடிவந்த ஊர்ச்சனம் கொட்டில் மூலையில் கிடத்தியது.

மரத்தாலை விழுந்தவனை மாடேறி மிதித்த வாழ்க்கை. "குரங்கு விஷம் கொஞ்ச நஞ்சமில்லை." ஆரோ சொன்னார்கள். "இப்ப என்ன செய்யுறது? கொஞ்சம் பொறு புருஷன் வரட்டும்." ஒருவர் சொன்னார். "புருஷன் வரும் வரைக்கும் பொடிச்சியை சாக விடுறதே?" சொல்லியபடி செல்லையாண்ணை ஓடிப்போய் வேப்பங் கொழுந்து பிடுங்கி கல்லில் தட்டி தண்ணீர் விட்டுக் குழைத்து கடிபட்ட இடங்களில் பத்துப் போட்டார்.

"கமலம்! போ புள்ளை போய் கொஞ்சம் சுடுதண்ணி வைச்சுக் கொண்டு வா. குடிக்கக் குடுப்பம்." செல்லையாண்ணரின் மகள் கமலம் அடுத்த கொட்டிலுக்குப் போனாள். அதுதான் அவர்களின் கொட்டில். கரிபிடித்த முட்டி ஒன்று மூலையில் கிடந்தது.

எப்பிடி இருந்த வாழ்க்கை? ஆர் சிதைச்சது? எத்தனை சீவன்களை இழந்தாச்சு? கமலம் தண்ணிப் பட்டையைப் பார்த்தாள். தண்ணி இல்லை. அவதிப்பட்டு ஓடி வரும் போது ஒரு பனை ஓலைப் பட்டையையும் செல்லையாண்ணர் எடுத்து வந்தது இப்ப எவ்வளவு வசதியாப் போச்சு. கண்ணீரைத் தனது பழைய முந்தானையால் துடைத்தாள். நாலு வருஷத்திற்கு முதல் வாங்கின நைலோன் சாறியில் ஒட்டுப் போட்டிருந்தாள்.

"ஐயா. பட்டையிலை தண்ணியில்லை.... ஒருக்கால் வாங்கோவன்..."

"ஏன் புள்ளை வடிச்சுக் கொண்டு வந்தது முடிஞ்சு போச்சுதே..?"

துணுக்காய் காட்டுக்குள்ளே மனிசர்; இப்ப துணுக்காய் காடை ஆரும் காடெண்டு சொல்ல மாட்டினம். ஒரு குடி மனையைப் போலத்தான் கிடக்கு, சனம் நிறைஞ்சு போச்சுது. குய்யோ முறையோ எண்டு குஞ்சு குருமன்கள் எல்லாம் கத்துதுகள்.

செல்லையாண்ணை பட்டையையும், சீவி வைத்திருந்த சிரட்டைப்பாதியையும் எடுத்துக் கொண்டு குழி தோண்டின இடத்துக்குப் போனார். இப்போது இங்குள்ளவர்களுக்கு குடி தண்ணி கொடுப்பது இப்படியான தோண்டி வைத்த சின்னச் சின்னக் குழிகள் தான்.

குழியில் இருந்து சேறும் சகதியுமான தண்ணியை எடுத்து வெள்ளைத்துணியிலை வடிகட்டிப்போட்டு சுட வைச்சுக் குடிக்க வேணும். ஆர் செய்த அநியாயம் இது "அப்பனே!" என்று கொண்டு குழிக்குப் பக்கத்தில் குந்தி இருந்து முட்டியின் வாயில் துணியை வைத்துக் கோலிவிட்டு சிரட்டையால் தண்ணீரை அள்ளி ஊத்தினார் செல்லையாண்ணர்.

★★★

"ஐயனாரே!" தலையில் அடிச்சுக் கொண்டு ஓடி வந்தாள் மலர். "என்ன புள்ளை.. என்ன...?" தண்ணியெடுக்கப் போன செல்லையாண்ணை ஓடிவந்தார். "ஐயோ செல்லையாண்ணை அம்மாவை புடையன் கொத்திப் போட்டுது." மேலெல்லாம் நடுங்க மலர் சத்தம் போட்டு அழுது கொண்டிருந்தாள்.

"ஐயோ என்ரை அம்மாவைப் போய் பாருங்கோவன். செல்லையாண்ணை என்ரை அம்மாவைக் காப்பாத்துங்கோ. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்." செல்லையாண்ணை கையில் இருந்த தண்ணிப் பட்டையை கமலத்திடம் கொடுத்து விட்டு தெய்வானைக் கிழவியின் குடில் பக்கம் ஓடினார். மலரும் தலை விரி கோலமாக செல்லையாண்ணருக்கு பின்னால் அழுதழுது கொண்டு ஓடினாள்.

சனம் சேர்ந்துவிட்டது. 'ம்ஹூம்' இனியெண்டால் சரிவராது போலத்தான் கிடக்கு?' செல்லையாண்ணர் மனதுக்குள் நினைத்துக் கொண்டார். புடையனை அடிச்சுக் கொண்டு வந்தார்கள். நல்லா முத்தின முத்திரைப் புடையன். நல்ல வாக்கா கொத்திப் போட்டுது. தெய்வானைக் கிழவியின் சிவந்த உடம்பில் நீலக் கோடுகள் படர்ந்தன. "முந்தியெண்டால் கடிச்ச பாம்பையும் ஆளையும் கொண்டு போனால் அதுக்கேத்த மாதிரி விஷ முறிவு ஊசி போட்டு சுகமாக்குவினம். இப்ப எங்கை கொண்டு போறது? ஊசியும் இல்லை. அது கொண்டு வாறதுக்கும் தடை. இனியென்ன தமிழ்ச் சனங்களை சாக விடுறதுதான் கடன்." செல்லையாண்ணர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த குமாரனைப் பார்த்துச் சொன்னார்.

"ஓம் செல்லையாண்ணை இப்ப அப்பிடித்தானே நடக்குது. ஷெல்லடிக்குப் பயந்து இஞ்சை ஓடி வந்தால் உப்பிடியான கோதாரியளுக்குள்ளை ஆப்பிட வேண்டிய தாய்க் கிடக்கு. கண் மண் தெரியாமல் அடிக்கிறதிலை- அங்கையெண்டால், அங்கை வீடு வாசல்கள் எல்லாம் நாசம். உப்பிடி எத்தனை நாளைக்குத்தான் உபத்திரவப் படுறது?"

"தம்பி குமார் இனி மாரிகாலம். இப்பவே மழை ஆரம்பிச்சிட்டுது. என்னபொடி செய்யுறது காடு தாங்குமே?"

"செல்லையாண்ணை எங்கடைய ஆரிட்டச் சொல்லி அழுறது. ஏதோ நாங்கள் நாங்கள் தான் அனுபவிச்சுப் போட்டு சாகிற நேரம் சாவம்!"

"அதுதான் எனக்கும் யோசினை. உந்தக் காடு வழியை எத்தனை நாளைக் கெண்டு அலையுறது? ஒரு பக்கத்தாலை மஞ்சள் காமாலை வருகுது. இன்னொரு பக்கத்தாலை அம்மாள் வருத்தம். பிறகு வயித்தாலை அடி... ஒண்டா ரெண்டா? போதாக்குறைக்கு மிருக சாதியளின்ரை ஆய்க்கினை. எங்கடா பொடி சனம் மிஞ்சுறது?"

"குடிதண்ணிப் பிரச்சனை பெரிய பிரச்சனையாகக் கிடக்கு செல்லையாண்ணை!"

"எத்தனை நாளைக்கென்று அலைக் கழிவது?"

"குமார்! மருந்தில்லை, தண்ணியில்லை, சாப்பாடில்லை... காட்டுக்குள்ளை மனிசர் வாழ வசதியில்லை. ஆண்டவனைத் தவிர எங்களுக்கு ஆர் இருக்கினம் சொல்லுறதுக்கு? இப்ப எல்லாம் எங்கடை சனத்துக்கு காட்டு சீவியமாய்ப் போச்சு."

பொம்பிளையளின் ஒப்பாரி... ஓலம் காதைக் கனக்க வைக்கிறது.

தெய்வானைக் கிழவி செத்துப்போனாள்.

---

வார்த்தைகள்- உதட்டசைவில் பிறக்கும் இந்த வார்த்தைகளுக்குள்தான் எத்தனை பலம்!- சக்தி! மனதினை மயிலிறகு போல் தடவிக் கொடுக்கும் சில. மனதினைத் துளைத்து நெருப்புத் துண்டங்களாய் சுட்டு விடும் பல.

சிலருக்கு இனிமையாகப் பேச வருகிறதோ இல்லையோ, மற்றவரைச் சுட்டுப் பொசுக்கும் பொல்லாத குணம் சிலருக்கு. அதில் இவர்களும் அடக்கம். எத்தனை முறை ஊசி போன்ற வார்த்தைகளால் துளைத்திருக்கிறார்கள். வாயைத் திறந்தாலே ஏதும் கொடும் வார்த்தையே புறப்படும்- வரும். காதைத் துளைத்து இதயத்தைச் சுடும்.

ஏன் இது? என் விதி ஏனிப்படியானது? விதியைச் சாடுவதா? இல்லை வாழ்க்கையை சிதைத்து சிதிலமாக்கிய யுத்தத்தைச் சாடுவதா?



ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி

அம்மா, அப்பா, சகோதரங்கள் என சந்தோசம் கொப்பளித்த இனிய வாழ்க்கை. அது ஒரு கார்காலம். பாசங்கள் என்றும் நேசங்கள் கொண்டும் உறவு வானிலே சிறிய பறவையாய் சிறகடித்திருந்த என்னை..... இரவோடிரவாக இருளோடு இருளாக வந்த யுத்தம். அந்த ஆயுதம் தாங்கிய அவல மானிடர்களின் யுத்தம் இன்று யாருமற்ற ஒரு அனாதையாக்கி விட்டு.....இன்னும் தன் கோரப் பற்களைக் காட்டி இளித்துக் கொண்டிருக்கிறது. சாதனா யோசித்துக் கொண்டிருந்தாள்.

'அனாதைப் பட்டம். அதைச் சுமந்து கொண்டு தப்பிப் பிழைத்த ஒரே சகோதரனுடன் கொழும்பிலிருந்த உறவுகள்- தாய் வழி பந்தம்- ஆதரவு தரும் என விழியோரக் கனவுடன் வந்து இரண்டு மாதங்கள். இரண்டே மாதங்களுக்குள் புரிந்து விட்டது- எல்லாமே- உறவுகள் என உதட்டளவில் சொல்லிக் கொள்ளும் மாய மனிதர்களின் குணம்.

'பெற்றோருடன் இருந்த காலங்களில் என்ன மாதிரிக் கொண்டாடினார்கள்? இன்று அண்ணாவையும் என்னையும் வேலைக்காரர்களை விடவும் கீழான நிலையில் வைத்து- அதுகூட பரவாயில்லை- சுமையாக இருக்கிறோம் தான். ஆனால் எடுத்ததுக்கெல்லாம் வார்த்தை அம்புகளைப் பிரயோகித்து துளைப்பது....கொடுமை.'

"அண்ணா....." சோர்ந்திருந்த கண்களால் ஏனென்று வினவினான். அப்போதுதான் அறைக்குள் வந்தவன் முகத்தில் ஏராள சோகம். அவளுக்குப் புரிந்தது. எப்படியிருந்தவன் இவன்? எடுத்ததெற்கெல்லாம் 'ஜோக்' சொல்லி சிரிப்பவன், நண்பர்களுடன் வீட்டையே புரட்டி கலகலப்பவன்- இன்று அடங்கிப் போய் அடையாள அட்டை மாத்திரமே ஒரேயொரு சொத்தாய்க் கொண்டு மாமாவின் கடையில் உழைத்து உழன்று கொண்டிருக்கிறான். அவனது படிப்பு, தகுதி......பாவம்..... சாதனாவுக்குள் வேதனையின் சுடர்கள். கண்களில் நீர்த் துளிகள்.

"ச்சு....எதுக்கு அழணும்? பொறுத்துக் கொள் சாதனா. எல்லா வேதனைகளுக்கும் நல்லதொரு முடிவு வரும். இறைவன் மேல் பாரத்தை போட்டுட்டு பேசாம பொறுத்திருப்போம். இல்லையா?" அவன் ஆதரவாய்க் கேட்டபடி அருகிலமர்ந்து அவளைப் பார்த்தான்.

அவன் மனது எரிந்தது. எத்தனை அழகாய், இலட்சணமாய் இருந்த அருமைத் தங்கை. இப்போது? ஆண்டவனே ஏனிந்த சோதனை? ஒரு வேலைக்காரி போல பழந்துணியும், எண்ணெயிடப்படாத கூந்தலும் மூளியான கழுத்தும் காதும்.... அவன் கண்கள் தானாகக் கசிந்தன.

"ம்.....இராஜகுமாரனும் இளவரசியும் எந்தக் கோட்டையைப்பிடிக்க திட்டம் போடறீங்க.....? அங்க குசினியில பாத்திரங்கள் எல்லாம் அப்படியே இருக்கு. கழுவ யாரு வர்றது? உங்கம்மாவா?" மாமியின் நாவில் விஷமாய் வார்த்தைகள் சிந்தின. மௌனமாய் எழுந்தாள் சாதனா.

★★

உருண்டோடியது காலம்; படு வேகமாக. காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே! துன்பமும் என்றும் வாழ்வில் நிலைத்திருப்பதில்லை; இன்பமும் தான். சுருக்கமாகச் சொன்னால் எதுவுமே இங்கு நிரந்தரமில்லை. சாதனாவின் அண்ணா அன்பு மிகு நண்பனொருவன் தயவில் கனடா போய் விட்டான். சாதனாவுக்குள் சந்தோசப் பூக்கள். அண்ணனின் நண்பனே அவளை திருமணம் முடித்து கனடாவுக்கு அழைப்பிக்கவும் ஏற்பாடு வேறு.

இங்கு மாமாவின் வீட்டில் திடீர் கவனிப்புகளும் கரிசனங்களும் அமோகமாகதான் பறந்தன. எத்தகைய மாற்றமிது?

சாதனா மௌனமாக சிரித்துக் கொள்வாள். "ஏன் கண்ணு, நாளைக்கு நீ கனடான்னு அங்கு போனப்புறம் எங்களையெல்லாம் மறந்திட மாட்டியே?" கேட்டபடியே மாமி ஆவிபறக்கும் தேனீருடன் பலகார பட்சணங்கள் வேறு பக்குவமாய் செய்து கொடுத்தாள்.

"ஆ.... அவ எப்படி மறப்பா? என் அக்காவோட மகளாச்சே..... ஒரே இரத்தம் தான் பாயுது. தூரம் போனாலென்ன உறவு விட்டுப் போயிடுமா? நம்மையெல்லாம் நல்லா கவனிச்சுக்குவா! மறக்கமாட்டா இல்லையா சாதனா?" இது மாமா.

'மறப்பதா?'

சாதனா மெலிதாய்ப் புன்னகைத்துக் கொண்டாள் 'மறப்பதா? உங்களை, உங்கள் வார்த்தைகளை? கொடும் சொற்களை?' "மாட்டேன். மறக்கவே மாட்டேன்." மெதுவாய், உறுதியாய்ச் சொல்லி உதடு மூடினாள். அர்த்தம் புரியாது சிரித்து மகிழ்ந்தார்கள் அவர்கள்.

---

அந்தப் பயங்கர இரவை எப்போது நினைத்தாலும் இதயம் அறுந்துவிழும் போலிருக்கும்.

அவனின் மனைவி

இரண்டு பிள்ளைகள்

'ஷெல்' அவர்களை விழுங்கிய நரக இரவு அவனின் அறைக்குள்தான் சுபாசினி (அவனின் கடைக்குட்டி) படுத்திருந்தாள். அதனால் இருவரும் பிழைத்துக் கொண்டார்கள்.

●●□□

"அப்...பா..! அம்மா....?"

அவளின் கேள்விக்குப் பதில் கூறமுடியவில்லை.

".........."

".........."

"அப்பா! அண்ணா. அக்கா.... எங்கேயப்பா..?"

".........."

".........."

அழுதான் உடலில் நீர் இருக்கும் வரை.

"நா.... என்ன பாவஞ்செஞ்சன்... எனக்கு ஏ.... இந்த நில... கட...வுளே.."

வாய்விட்டுக் காற்றில் எழுதவேண்டும் போலிருந்தது.

"ஏ... அப்...பா... அழுறீங்க....?"

".........."

".........."

குழந்தை மலரைப் போல மென்மையானது.

அதற்குத் துவேசம் தெரியாது. அது பாலைப் போல புனிதமானது. அதற்கு இனவெறி இல்லை. மதம் பற்றி அறியாதது. போர்பற்றிப் புரியாதது. துன்பம் வந்தால் அழும். சந்தோசம் வந்தால் துள்ளிக் குதிக்கும். தொடங்கிய அழுகையைத் தொடராமல் நிறுத்தினான்- சுபாசினியும் அழுதுவிடுவாள் என்ற பயத்தை மனதில் இருத்தியதால்.

"இந்த நாட்டுல பொறந்ததுக்கு இதுவும் வேணும்.... இன்னமும் வேணும்...."

அவனின் இதயம் இரைந்தது. ஆறுதல் அவனுக்குள் எழுந்து நின்றது.

'வேரையே தொலைத்துவிட்ட இந்தக் கிளை அழுது என்ன இலாபம்...?'

அவனுக்குள் அவன் பேசினான்.

"அம்...மாவும்... அண்ணனும்... அக்காவும் எங்க.... போனாங்..கப்...பா... ஏ சொல்ல...மாட்டீங்..க..?"

சின்னவயது

அவளின் கேள்விதான் பெரிது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவன் உண்மை சொல்ல நினைத்தான்.

".........."

".........." மௌனம்... அதே மௌனம்..

"சொல்லுங்கப்பா..! அப்பதான் சோறு திம்பன்..." சொன்னான்....

"செத்துப் போயிட்டாங்க... மகள்..." இன்னும் குழந்தையை ஏமாற்ற அவன் விரும்பவில்லை. குழந்தையை ஏமாற்றுதல் தெய்வத்தை ஏமாற்றுதலுக்குச் சமம் என்பது அவனுக்குத் தெரியும்.

"எப்...படி.... செத்..செத்..தாங்..க..?" அவளுக்கு விளங்குமோ இல்லையோ, அதைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை.

நடந்தவைகளை அவளின் காதில் ஊதினான். மனதில் எழுதினான்.

துப்பாக்கிச்சத்தம்... புகை... விமானச் சத்தம்.. நெருப்பு... கிடங்கு... ஓடுதல்.. ஒளித்தல்.. படுத்தல்... மீண்டும் வெளியே வருதல்...

சுபாசினியின் கண்முன் வந்திருக்க வேண்டும்.

"அ...ம்...மா...ம்..மா... அக்...கா.. அம்..மா.. அண்..ணா..." சுபாசினி அழுதாள். அன்று முழுவதும் அழுதாள். அவளுக்கு விளங்கிவிட்டது என்று நினைத்தான் அவன்.

"ச்..சே.. புள்ளயின்ர மனசக் கெடுத்திட்டனே... அவசரப்பட்டுட்டன்..."

தன்னைத்தான் வார்த்தைகளால் தண்டித்தான்.

கரீமா ராஹில்

> "துப்பாக்கிச் சத்தம், புகை, விமானச் சத்தம், நெருப்புக் கிடங்கு, ஓடுதல், ஒளித்தல், மீண்டும் ஓடுதல் சுபாசினியின் கண்முன் வந்திருக்க வேண்டும்..."



"இனி.. வாழ்ந்தென்ன...? இறந்தென்ன...?... மனிசர் பொய்.. வாழ்க்க பொய்.. எல்லாமே.. பொய்.... பொய்... இந்த உலகமே.... பொய்... ய்...ய்..."

மூச்சு நின்று போகும் வரை உரத்துக் கத்தவேண்டும் போலிருந்தது.

விரக்தி திரண்டு மேகமானது. அது சோகமாகி மழையாகி விழியால் பெய்தது.

"இனி... என்ர குழந்த... அதா..ன்... அதான்... என்ர வாழ்க்க..."

இப்படி அவனுக்குள் இன்னுமொரு மனம் கூவும். பின் சோகத்துக்குள் தாவும்.

★★★

வறுமை ஒருபுறம்.

போர்க் கொடுமை மறுபுறம்.

இதன் நடுவில் நின்று எப்படி நீந்துவது?

வழி தெரியாமல் திண்டாடினான்.

ஒளி தெரியாமல் மன்றாடினான்.

"சு...பா... சுபா...!...."

மகளின் நினைவு. அழைத்தான். அவள் இல்லை.

'குழந்த விளையாடப் போயிருக்கும்... வரட்..டுமே...'

தனக்குள் பேசிக் கொண்டான்.

மனம் சோர்வாக இருந்தது. அதனால் உடல் சோம்பலாகக் கிடந்தது. பாயை விரித்துப் போட்டு கொஞ்ச நேரம் உறங்க முயற்சித்தான் அவன். உறக்கம் வருமா...? இந்த நாட்டிலா...? அப்படி வந்தால் உலக சாதனைதான்... மனதுக்குள் பேசிக் கொண்டான்.

அப்போது வெளியில் சத்தம்கேட்டது. அது சுபாசினியைத் தூக்கிக் கொண்டு வந்தவர்களின் சத்தம். இரத்த வெள்ளத்தில் சுபாசினி.

"மிதி வெடியில... ஒரு.. கால்..."

அவனுக்கு உலகம் நின்றது போல், சுவாசம் நின்றது போல்.. மயங்கி விழுந்தான். மனதால் அவன் இறந்தான்.


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## உண்டால் சுடும்

தருவது — ரசிகன்



**வா**டியிருந்தாள் வண்ணப்பூங்கொடி.
பாடிக்கொண்டோடி வந்தாள் தோழி.

"நிலா நிலா ஓடிவா!-இவள்
முகத்தில் ஒரு பால்நிலா,
நெஞ்சிலிரண்டு தேன்பலா!"

பாடல் கேட்டதும் பூங்கொடி மலர்ந்தாள்.
'ஆடலும் பாடலும் இன்றென்னடி அதிசயம்?
ஊடலும், கூடலும் கொண்ட காதல்-உன்
நாடலும் அதுவாய் போனதோ சொல்லடி?"

வெட்கப்பட்டாள் தோழி-பொருள்
விளங்கிக் கொண்டாள் பூங்கொடி.

"யாரடி உன் மன்மதன்?
கூறடி கதையை!"

"என் கதை புதுக்கதை-நீ
உன் கதை உரைத்திடு! அவன்
தேன் அளந்து எடுத்தானோ-இல்லை
நீதான் அளந்து கொடுத்தாயோ?"

தோழி வினாவை அவள் புறமே
திருப்பிவிட்டாள்-பாவம்
பூங்கொடி வெட்கிப்போனாள்.
குனிந்து கால் நகம் பார்த்தாள்.

"தேன் அளந்த கதை கேட்டால்
கால் அளந்து பார்க்கின்றாய்;
வான் நிலவை முகில் மூடும்-அடியே!
உன் முகத்தை வெட்கத் துயில் மூடும்!
நான் கதையறிய என் செய்வேன்?"

"எப்படிச் சொல்வேனடி தோழி
எப்படிச் சொல்வேனடி?"

"கொடுத்தது கொஞ்சமோ? நீ
எடுத்தது கொஞ்சமோ?"

"கடையோ விரித்தோம்
அளந்து பகிர?
குறுக்கே திரையாய்
வெட்கம் நின்றது-அவர்
பக்கம் வந்ததும் அச்சம்
எழுந்து எதிரே நின்றது!"

"அப்படியா சங்கதி?
பிறகெப்படி ஈருடல் இணைந்தது?"

"கையும் கையும் கலந்து கொள்ள-என்
கண்கள் கதவை மூடிக்கொண்டன!"

"விழித்துப் பார்த்தால் வெட்கம் என்று
மூடிக்கொண்டாயோ?-உன் வேல்
விழிகள் அவனை விரட்டுமென்று
இமைக்குள் ஒளித்துக் கொண்டாயோ?"

"கதையறிய விரும்பிவிட்டு,-நீயே
கதையளந்து கொண்டிருந்தால்
இதழ் கதவறைந்து மூடிடுவேன்!"

"இடக்காகப் பேசவில்லை இனிமேல்
மடக்காமல் விரித்துவிடு கதையை!
துடுக்கான உன்னை இனி ஆள
மிடுக்கான ஒருவனுண்டு போதும்!"

"மயக்கமா? என்றவர் கேட்டார்-முன்பின்
பழக்கமா? என்று நான் கேட்டேன்.
கலக்கமாய் நின்றாரடி பாவம்!"

"உருவிய வாளை
உறையில் போட்ட கதைதான்!
எட்டிய கனியை
தட்டிப் பறித்த நிலைதான்!"
தோழி எறிந்தாள் பெருமூச்சு!

"பழக்கமில்லை வழக்கம் தெரியும்.
பழம் உண்ணப் பயிற்சி தேவையோ?
பால் அருந்தப் பழக்கம் வேண்டுமோ?
பள்ளியறைப் பாடத்துக்கு பயிற்சி தேவையோ?
முயற்சி போதும் முழுத்தேர்ச்சி பெறலாம்!
அழகே! திருவே! அருகே வா!
பழகிப்பார்ப்போம்; வெற்றி பெறலாம் வா!
என்றார், வந்தார், என்னை அணைத்தார்!"

"ஒன்றே செய்தார்
நன்றே செய்தார் என்று சொல்!"

"இன்று வேண்டாம் என்று மறுத்தேன்.
என்றும் வேண்டும் என்றே உரைத்தார்.
நன்றோ இது யாரும் கண்டால்?
என்றே நானும் கேட்டு வைத்தேனடி.
கருத்தொருமித்த காதலர் இருவர்
உருவொருமிக்கும் நிலைதான் நன்று
பெரும் கருத்திதுவே புரிந்துகொள் என்றார்."

"அச்சம் எனக்கு;
ஆசை உமக்கு!- உற்றார் அறிந்தால்
இது பெரும் வழக்கு" என்றுரைத்தேனடி.

"சுற்றம் சொல்லும் குற்றமெல்லாம்
நம்மை ஏன் சேரவேண்டும்?
நம்மை படைத்தவன் மேல் சேருமடி!"

"படைத்தவன் என்ன பாவம் செய்தான்?
உடைத்தவன் நீர் என் மனதை!"

"பெண்ணைப் படைத்திருக்க வேண்டும்-அன்றேல்
கண்ணைப் படைத்திருக்க வேண்டும்.
இரண்டையும் ஒன்றாய் ஏன் படைத்தான்?
பெண்ணைக் கண்பார்த்ததும்-நெஞ்சில்
தேன் பாய்கிறதே! அது யார் குற்றம்?

கனி படைத்தான் பசி படைத்தான்
கண் படைத்தான் பெண் படைத்தான்
மலர் படைத்தான் மதுவண்டும் படைத்தான்
உண்ணவும், உண்ணப்படவும்-என்றே
அவனும் விதி படைத்தானடி!"

"போதும் உங்கள் வாதம்-இங்கு
போகுது பொன்னான நேரம்!"

"பரிவோடு சொன்னாய் ஒரு வார்த்தை
புரிவோடு அள்ளிப்போடு விருந்தை!
கனியோடு தேன் உண்ணவேண்டும்.
பாலோடு மது உண்ணவேண்டும்.
மேலாடை மறைக்கின்ற மலைகள்
மேலாட மறுக்காதே மானே!"

"வேறு என்ன வேண்டும்?
நிறுபூத்த ஆசையெல்லாம் சொல்லும்?"

"என்றும் உனை மறவாத
இனிய நினைவு வேண்டும்.
நன்று இதுவென்று நாளும் நினைக்கின்ற
நம் காதல் கனிந்து பழமாக வேண்டும்!
சென்று வரவா? என்று நீ கேட்காத
என்றும் நீ எனக்கான நிலை வேண்டும்!"

"அவ்வளவுதானா? அவ்வளவுதானா?
அளவற்ற ஆசையோ என்று பயந்தேன்!"

"இறைக்க இறைக்க நீர் ஊறும்
நனைய நனைய குளிர் ஊறும்
நினைக்க நினைக்க ஆசை வரும்!"

"உங்களுக்கென்ன ஆசை வரும்
எங்களுக்கன்றோ அச்சம் வரும்!"

"எறும்பு ஊர கல்தேயும்!
விரும்படி என்னை பயம் தேயும்!
அரும்பிய காதல் கரும்படியோ
திரும்படி என் முகம் காணடியோ!"
என்றாரடி! என்னை வென்றாரடி!

"தொட்டால் சுடும் நெருப்பன்றோ;
தொடாமல் சுடுவது விருப்பன்றோ!
தொட்டதும் தீ விலகியதே-கரம்
பட்டதும் தேகம் குளிர்ந்ததுவே!"

"ஆமடி பூங்கொடி அப்படித்தான்
தேனடி காதல் தித்திக்கும்தான்!

"வாளடி காதல் வதைக்குதடி
கேளடி தோழி
எரிதழல் போல் மேனி கொதிக்குதடி!
பாரடி தோழி
பட்ட கொடியாய் போனது தேகமடி!"

"சந்தித்திருந்தால் தித்திக்கும்-தனியே
சிந்தித்திருந்தால் தீய்த்துவிடும்.
பிரிவின் வேதனை அதுதானடி-இந்தா
உனக்குப் பலகாரம்; உண்டால் உந்தன்
உடல் தேறும்!"

தொட்டுப் பார்த்தாள் பலகாரம்
சுட்டது சூடு கைமீதில்!

"வேண்டாம் போடி பலகாரம்
உள்ளே இருப்பவர் அவரன்றோ-இதை
உண்டால் சுடுமடி அவர்மீது!"
பூங்கொடி மறுத்தாள், தோழி வியந்தாள்.

"பைத்தியமோடி உனக்கென்பேன்."

"பைத்தியமல்ல கேள் தோழி
பைந்தமிழ் புலவர் வள்ளுவனார்
சிந்தித்து தீட்டிய குறள் பாராய்!"

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சதும் வேபாக்கு அறிந்து"

அதிகாரம்- 113. குறள்-1128.

# கங்குலிக்கு விருது



இந்திய கிரிக்கெட் வீரர் சவ்ரவ் கங்குலி இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு இருக்கிறார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்திய விளையாட்டுத்துறை பத்திரிகையாளர் சங்கம், சிறந்த விளையாட்டு வீரரைத் தேர்வு செய்து அவருக்கு விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது. விருதுடன் ரொக்கப் பரிசாக ரூபா 10 ஆயிரம் வழங்கப் படுகிறது.

1995-96ம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர் விருதை வருகிற நவம்பர் மாதம் 12ம் திகதி நடைபெறும் விழாவில் கங்குலி பெற்றுக்கொள்வார். கங்குலியுடன் இந்தியாவின் 10 தலை சிறந்த வீரர்களும் அந்த விழாவில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

# "ஷாருக்கான் என் மகன்"

## விநோதமான வழக்கு

"இளம் வயதில் காணாமல்போன என்னுடைய மகனே, பிரபல இந்தி நடிகர் ஷாருக்கான்," என்று ஒரு பெண் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்.

'தில்வாலே துலானியே லி ஜாயேங்கே', 'ரம்ஜானே', 'பாஸிகர்' உட்பட பல இந்திப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றிருப்பவர் ஷாருக்கான்.

அவர் மீது அகமத்பூர் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்து மாலன்பாய் கூறி இருப்பதாவது,

"லத்தூர் மாவட்டம், அகமத்பூர் தாலுகாவில் உள்ள ஹிம்பர்ஹா எனது சொந்த ஊராகும். கட்டட வேலை செய்வதற்காக என் மகன் அலசாப்பைத் தூக்கிக் கொண்டு மும்பை சென்றேன்.



ஷாருக்கான்


அப்போது அலசாப் காணாமல் போய்விட்டான். அவனை எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் நான் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பி விட்டேன்.

இளம்வயதில் காணாமல்போன என் மகன் அலசாப்தான் இப்போது இந்திப் படங்களில் நடிக்கும் ஷாருக்கான். அவன் 1965ம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் திகதி பிறந்தவன்."

இவ்வாறு மாலன்பாய் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்தி நடிகர் ஷாருக்கானுக்கு மஜிஸ்ட்ரேட் பி.டி. ரதோட் சம்மன் அனுப்பியுள்ளார்.

அதில் 'இம்மாதம் (ஒக்டோபர்) 30ம் திகதி ஷாருக்கான் கோர்ட்டில் ஆஜராக வேண்டும்' என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.



குழந்தைப் பருவத்தில் ஷாருக்

# சிந்தியா பதில்கள்

*** கொழும்பில் பெண் புலிகள் ஊடுருவி விட்டார்களாமே? பொலிசார் அறிவித்ததை படித்தீர்களா?**

சி. ஜோன்சன், தெகிவளை.

அப்படியா? இனிமேல் பொட்டு வைத்துக்கொண்டு நடமாடுவோர் பாடு அம்பேல்!

*** டியர் சிந்தியா! ஷாஜகானுக்கு எத்தனை மனைவிகள்?**

ஜி. இதயராணி, இரத்தினபுரி.

மும்தாஜை இழந்த சோகத்தில் வாடி விட்டு அந்த வாட்டத்துக்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து மனைவிகளை வரவில் வைத்துக்கொண்டாராம். புள்ளிவிபரம் சரியாகத் தெரியவில்லை.

*** கென்யாவில் நடந்தபோட்டிகளில் தூள்கிளப்பிய அணி எது?**

எம். ஜெயகாந்தன், கண்டி.

இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மூன்றுமே சளைக்காத அணிகள்தான். பாகிஸ்தான் இறுதிப் போட்டியில் பந்து தடுப்பு, பந்துவீச்சு இரண்டிலும் கோட்டை விட்டதால் வெற்றிவாய்ப்பு கைநழுவிப் போனது. இலங்கையின் முக்கிய துடுப்பாட்ட நட்சத்திரங்கள் மின்னிடத்தவறியதால் இலங்கை அணி இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தது. ஆனால் தூள் கிளப்பியவர்கள் இரண்டுபேர். ஒருவர் அரவிந்த டி சில்வா. மற்றவர் பதினாறு வயதுப் புயல் ஷகீத் அஃப்ரிடி.. யப்பா! முதல் அனுபவம் என்றாலும் இந்தப்போடு போட்டு அசத்திவிட்டார் போங்கள்.

***தானங்களில் சிறந்த தானம் என்று எதனைக் குறிப்பிடலாம்?**

எம்.ஏ.எம். முஸ்தபா, மருதமுனை-03.

அன்னதானம்! வேறு எந்த தானம் செய்வதற்கும் உடம்பில் ஒரு தெம்புவேண்டு மல்லவா? அந்தத் தெம்பைத் தருவது உணவுதானே!

*** ராமேஸ்வரத்தில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளின் நிலை என்ன?**

ஜி.ஜெயக்காந், கல்முனை.

தாண்டியது தண்ணீரை! தாண்டாதது கண்ணீரை!

*** கல்லால் அடித்தால் திருப்பியடிக்கலாம்; சொல்லால் அடித்தால்......?**

ஆர். ரங்கநாயகி, மன்னார்.

அடிக்கலாமே திருப்பி!

இங்கிலாந்து பிரதமராக இருந்த சர்ச்சில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தார். தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளையும் வேதனைகளையும் எடுத்துச்சொன்னார். "இந்த அனுபவங்கள்தான் எனக்குக் கற்றுத்தந்தன," என்று பேச்சை முடித்தார்.

அப்போது சர்ச்சிலை பிடிக்காத ஒருத்தர் கூட்டத்தில் இருந்து எழுந்து:

"அனுபவம் முட்டாள்களுக்குத்தான் பாடம் கற்பிக்கும் என்று சொல்வார்கள். அது சரியாகத்தான் இருக்கிறது," என்றார். உடனே கூட்டத்தில் சிரிப்பொலி கேட்டது.

சர்ச்சில் அசராமல் நிதானமாகச் சொன்னார்:

"நீ சொன்னது சரிதான் நண்பனே! அதுதான் என்னுடைய அனுபவத்தில் இருந்து நீங்கள் பாடம் கற்றுக்கொள்ளக்கூடும் என்று உங்களை இந்தக் கூட்டத்துக்கு அழைத்திருக்கிறேன்."

***அமைச்சர் பதவி ஒரு பொருட்டல்ல, என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறாரே?**

வி. பழனிச்சாமி, ஹட்டன்.

பதவியில் உள்ள யாராவது "எங்களுக்கு பதவி கண்போன்றது" என்று எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா? ம்ஹூம் நான் அறிந்தவரை கிடையாது. அப்படி யாராவது சொன்னால்தான் ஆச்சரியம்.

*** எப்போதுமே எதிலும் குற்றம் குறை கண்டுபிடிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வே. நிர்மலா, அப்புத்தளை.


ஏசுநாதரும் அவரது சீடர்களும் சென்று கொண்டிருந்த பாதையில் ஒருநாய் செத்துக் கிடந்தது. நாற்றமோ தாங்கமுடியவில்லை. ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. சீடர்கள் மூக்கைப் பொத்திக்கொண்டார்கள். ஏசுநாதர் மட்டும் நாயைக் கவனித்துவிட்டு,

"அடடா முத்துப்போன்ற வெண்மையான பற்கள்!" என்று வியந்து கொண்டார்.

"இந்த நாற்றத்தை சகித்துக்கொண்டு உங்களால் எப்படி வியக்க முடிகிறது?" என்று ஒரு சீடர் கேட்டார்.

அதற்கு ஏசுநாதர் சொன்னது இது:

"எதிலும் நல்லவற்றையே காண்பதற்கு பழகிக்கொள்ளவேண்டும்!"



*** சில்க் சுமிதாவின் மரணத்தால் பயன் அடைந்தது யார்?**

எம். அபூபக்கர், கல்முனை.

குலுக்கலில் பரிசுச் சீட்டு விழுந்தாலும் குலுக்குபவருக்கு பணம்சேராது. அதிஷ்டசாலிக்குத்தானே லாபம்? சுமிதாவின் குலுக்கலில் முதல் அதிஷ்டசாலி அவரது தாடிக்காரக் காதலர்.

***டியர் சிந்தியா! இந்தக் காலத்துப் பிள்ளைகளின் புத்திசாலித்தனம் வளர்ந்திருக்கிறதா? தேய்ந்துபோகிறதா?**

திருமதி து. மணிமேகலை, கண்டி.

ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்; நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

ஒரு சின்னப் பையன் தன் அப்பாவிடம் சென்று:

"அப்பா! நீங்கள் இந்த உலகத்தில் ஒரு மனுஷனாகப் பிறந்தது என்னுடைய அதிஷ்டம்" என்றான். அப்பாவுக்கு மகா சந்தோஷம்.

"ஏண்டா மகனே அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

மகன் சொன்னான்:

"நீங்க ஒரு கரடியா பிறந்திருந்தா இந்நேரம் நானும் ஒரு கரடிக்குட்டியாத் தானே இருந்திருப்பேன்!"

*** தென்னிலங்கையில் அரசியல் வன்முறைகள் அதிகரித்து வருவது தொடர்பாக உமது அபிப்பிராயம் என்ன?**

ஜெ. செபஸ்டின், நீர்கொழும்பு.

தேர்தல் காலமென்றால் வோட்டுக் கேட்கும் சத்தம் கேட்கும். தேர்தல் முடிந்தால் பழிவாங்கும் படலத்தில் வேட்டுச் சத்தங்கள் கேட்கும். இதையெல்லாம் நாம் புரிந்து கொண்டால் ஜனநாயகம் பற்றி கவலையே படத் தேவையில்லை.

*** பேராசை பெரும் நஷ்டம் என்பதற்கு ஒரு உதாரணம் எடுத்துவிடுங்கள் பார்க்கலாம்?**

கே. ஜெயக்குமார், கொழும்பு-11.

ஒருத்தன் கடவுளை நினைத்து தவம் இருந்தான். கடவுளும் நேராக வந்து ஆஜரானார்.

"என்ன வரம் வேண்டும் அப்பனே?" என்றார்.

"தேவலோகத்தில் ரூபாய் மதிப்பெல்லாம் எப்படி?" என்று கேட்டான் பக்தன்.

"அங்கேயெல்லாம் ஒரு ரூபாய் உங்க பணத்தில் ஒரு கோடி ரூபாய்க்குச் சமம். அதேபோல எங்களுக்கு ஒரு நாள் என்பதும் உங்க கணக்கில் ஒரு கோடி வருஷத்துக்குச் சமம்!" என்றார் கடவுள்.

பக்தனின் குறுக்குப்புத்தி ஒரு கணக்குப் போட்டுப் பார்த்துக்கொண்டது.

"கடவுளே! கடவுளே! எனக்கு நீங்க அதிகமாக எதுவும் தரவேண்டாம். ஒரே ஒரு ரூபா கொடுங்க. அது போதும்" என்றான் ரொம்ப சாமர்த்தியமாக!

கடவுள் சொன்னார்:

"அது ஒண்ணும் கஷ்டமில்லை. ஆனால் நான் இப்போது கையோடு கொண்டு வரவில்லை. எங்கள் கணக்குப்படி ஒருநாள் பொறுத்துக்கொள்! பணத்துடன் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் கடவுள்.

*** முத்தையா முரளிதரனின் முன்னேற்றம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆ. சசிகரன், மாத்தளை.

மெருகேறியிருக்கிறது பந்துவீச்சு. ஒரே ஒரு குறை; துடுப்பாட்டத்திலும் சற்றுக்கவனம் செலுத்தினால் மிக்க நல்லது! கென்யாவில் இலங்கை விளையாடிய கடைசிப் போட்டியில் முரளி பந்துவீச்சிலும் பந்து தடுப்பிலும் அபாரம். பின்னர் துடுப்பாட்டத்தில் வந்த வேகத்தில் திரும்பியது அவரது திறமையில் விழுந்த சிறு கறை போலாகிவிட்டதே!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 52

இராமபிரானும் தம்பி இலக்குவனும் வாலியை நெருங்கியதும் வாலி விடுத்த வினா இராமரின் உள்ளத்தில் ஒரு வேலைப் போல் தாக்கியது. இலக்குவனும் இவ்வினாவுக்கு விடை அளிக்க முடியாது வாய் மூடி நின்றான். வாலி தொடர்ந்து பல வினாக்களை வீசினான்.

"உலகங்களுக்கே நல்லறத்தைப் போதிக்கும் சிறப்புடையவன் நீ! அநீதிகளனைத்தையும் உன் பார்வையாலேயே களைந்தெறியக் கூடியவன் நீ! ஈடிணையற்ற பராக்கிரமசாலி நீ! மூன்று உலகங்களுக்கும் நீதி வழங்கும் ஆற்றலுடையவன் நீ! இத்தனை சிறப்புக்களையுமுடைய நீ, என் மீது உன் பாணத்தை ஏன் எய்தாய்?

உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? நீ வாழும் உலகத்தில் நான் வாழக் கூடாது என்று என்னை வதைக்கத் துணிந்தாயா?

நான் வேறொருவனுடன் போரிட்டுக் கொண்டிருக்கும்போது. இதில் தலையிட்டு என்னைக் கொல்லக் கணை வீசினாயே! தர்மநெறி, நீதி நியாயங்கள் தெரிந்தவன் என்று உன்னை அனைவரும் ஒரேமுகமாகப் புகழ்கின்றனரே! அவ்வாறிருக்க என் மீது கணை தொடுத்து எனை வீழ்த்துவதில் என்ன நியாயத்தைக் கண்டாயப்பா?

## குடும்பப் பிரச்சனை

எனது தம்பிக்கும் எனக்குமிடையில் சண்டை. இது எங்கள் குடும்பப் பிரச்சனை! என் தம்பியுடன் சேர்ந்து என்னை வீழ்த்தத் தலைப்பட்டாயே? இது எத்தகைய நீதிநெறிகளுக்குள் அடங்கும்?

சகோதரர்கள் மீது நீ எத்தகைய பாசம் வைத்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். உன் சிற்றன்னைக்கு உன் தந்தை கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற- உனக்குரிய அரச பதவியை உன் சிற்றன்னையின் மகன் பரதனுக்கே கொடுத்துவிட்டுக் கானகம் புறப்பட்டவன் நீ! இங்கு சகோதரர்களாகிய நாங்கள் எங்களுக்குள் சண்டை போடும் போது எங்களைச் சமாதானப் படுத்த எத்தனிக்காமல், என்னைக் கொன்று என் தம்பிக்குப் பதவியைக் கொடுக்க முற்பட்டாயே!

சகோதர பாசத்துக்கு எடுத்துக்காட்டாக எவரும் உன்னையே குறிப்பிடும்போது இரு சகோதரர்களுக்குள் எழுந்த பிணக்கில் நீ பாரபட்சமாக நடந்து கொண்டாயே!

தம்பி சுக்கிரீவனுடன் நீ சேர்ந்து என்னை முறியடிப்பதற்கு நீ வந்திருக்கிறாய் என்பதை என் மனைவி கூறி எச்சரித்தாளே! 'தசரத குமாரன் அத்தகைய அதர்மத்துக்குத் துணிய மாட்டான்' என்று கூறி அவளுடைய வாயை அடைத்துவிட்டு வந்தேனே!

மாவீரன் என்று உன்னை எல்லோரும் புகழ்ந்திருக்கும்போது, நீ என் முன்தோன்றி எதிர்நின்று பொருதாமல், கோழைபோல் மரங்களில் மறைந்து நின்று கணையினை ஏவினாயே? உன்னைப் போன்ற ஓர் அரசகுமாரனுக்கு இச்செயல் எவ்வாறு பொருந்தும்?

பெரும்புகழோடு பரம்பரை பரம்பரையாக ஆட்சி புரிந்து அறம்காத்து வந்த இச்வாகு குலத்துக்கே இழுக்கினைத் தேடித் தரும் வண்ணம் இழி செயலைச் செய்துவிட்டாயே!

உன் அன்பின் நாயகி உன்னைவிட்ட கன்றமையினால் உன் புத்தி பேதலித்துவிட்டது போலும்! சீதா தேவியைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்திருந்தால் சில நாழிகைகளிலேயே- உலகின் எந்த மூலையிலிருந்தாலும் கண்டு பிடித்து உன் காதலியைக் கொண்டு வந்து உன் காலடியில் சேர்த்திருப்பேனே!"

இராவணன் தான்சீதையைக் கவர்ந்தான் என்பதை நானும் அறிவேன். இராவணனோ எனக்குக் குற்றேவல் செய்யக்கடமைப் பட்டவன். அவனிடம் நான் ஒரு வார்த்தை சொன்னாலே, அவன் தானாகவே சீதையை விட்டு விடுவான். இல்லையேல் நானே இராவணனுடன் போரிட்டு அவனைக் கைதுசெய்து உன் காலடியில் வீழ்த்தியிருப்பேனே!

பிறந்தவரெல்லாம் இறந்தேயாக வேண்டும் என்பதுதான் நியதி. ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் நீ ஏன் என்னைக் கொல்லத் துணிந்தாய் என்பது தான் எனக்குப் புரியவில்லை. இராமா! என் உயிர் இந்த உடலை விட்டுப் பிரிய முன் இந்த வினாவுக்கு விடை கூறிவிடு. என் கேள்விகளுக்கான சரியான பதில் கிடைக்காமல் என் ஆன்மா உடலை விட்டு நீங்காது இது உறுதி!"

## இலக்குவனின் விளக்கம்

இவ்வாறு வாலியின் வாயிலிருந்து திக்கித் திணறி வார்த்தைகள் ஒவ்வொன்றாக வெளி வந்தன. இராமர் மௌனம் சாதித்தார். இலக்குவன் வாய்திறந்தான். "வாலி! நீ உன் தம்பி மீது அநியாயமாகப் பழி சுமத்தி அவனை அடித்து விரட்டினாய். மாயாவியுடன் நீ போரிடுவதற்காக மலைக் குகைக்குள் சென்று பல நாட்களாகியும் திரும்பிவரவில்லை. கிட்கிந்தைக் குடியான வானரர்கள் பலமுறைவேண்டியதன் பின்னர்தான் சுக்கிரீவன் ஆட்சி பீடமேறச் சம்மதித்தான். பல நாட்களின்பின் திரும்பிவந்த நீ, உன் தம்பியின் நியாயங்களைக் கேட்காமல் அவனைத் துன்புறுத்தினாய்! அது மட்டுமல்லாமல் உன் தம்பி மனைவி-உன் உடன் பிறப்புக்குச் சமமானவள்- அவளையே உன் மனைவியாக்கிக் கொண்டாய். எமது தர்ம நியதிப்படி மாற்றான் மனை நாடுவது மரண தண்டனைக்குரிய மாபெரும் குற்றம். இவையே இராம பாணத்தால் நீ மரணதண்டனை அடைய வேண்டியதற்கான காரணங்கள்," என்று இலக்குவன் அளித்த விளக்கத்தால் வாலி திருப்தி அடையவில்லை.

வாலியின் வாயில் விரக்தியும் ஏமாற்றமும் இணைந்த முறுவல் தென்பட்டது. "ஐயா! மாநிடருக்கான நீதி நெறிகள் எம் போன்ற வானரர்களுக்கு எப்படி ஐயா பொருந்தும்?" என்றான் வாலி.

# "குடும்பச் சண்டைக்குள் குறுக்கிட நியாயம் என்ன?"



இராஜகோபாலன்

## தவறுக்கு தண்டனை

இப்பொழுது இராமர் வாய் திறந்தார். "வாலி நீ வானரன் தான். ஆனால் நீயோ தேவர் மகன். தெய்வேந்திரன் உன் தந்தை. இதனை மறந்தாயா? அல்லது மறைக்க முற்படுகிறாயா? ஆறறிவு படைத்தவர்கள்கூட மனதாரப்பல குற்றங்களைப் புரிந்துவிட்டு, "அறிவிழந்து தவறிழைத்தேன்," என்று கூறினாலும் அவர்கள் தண்டனையிலிருந்து தப்பமுடியாது. உன் உருவம் தான் வானரமே தவிர நீ உள்ளத்தால் மிருகமல்ல; தெய்வாம்சம் பொருந்தியவன். உன் தம்பி மனையாளை தகாத உறவு பூண்டமையினால் உரிய தண்டனையைப் பெற்றாய்!" என்றார்.

"குற்றமிழைத்தமையினால் அரசன் என்ற நிலையில் எனக்குரிய தண்டனையைத் தந்தாயோ? இருப்பினும் என்னை நேரில் வந்து விசாரித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டுமல்லவா? ஆனால் நீயோ மறைந்திருந்தே என் மீது கணை தொடுத்தாய்?"

இந்தக் கேள்விக்குரிய பதில் இராமகாதை பாடிய வால்மீகி முனிவராலோ, தமிழில்தந்த கம்பநாட்டாழ்வாராலோ தர்க்க ரீதியில் அமையவில்லை, என்பதே பல பேரறிஞர்களுடைய கருத்து. இராம காதையை மேடைகளில் வியாக்கியானம் செய்பவர்களாயினும் காதாகாலாட்சேபம் செய்பவர்களாயினும் கொஞ்சம் மழுப்பலாக சொல்லிவிட்டு முடித்து விடுகிறார்கள். பேரறிஞர் ராஜாஜி அவர்கள் கூட இந்த இடத்தில்,

"வாலியின் குற்றச்சாட்டுக்கு இராமர் ஏதோ பதில் சொன்னதாகவும் அதைக் கேட்டு வாலி சமாதானப்பட்டதாகவும் நாம் படிக்கும் இராமாயணத்தில் சொல்லப்படுகிறது. அதில் சாரம் இல்லை; பெரியோர்கள் மன்னிப்பார்களாக," என்று கூறி ஒதுங்கி விடுகிறார். "அவதாரம் அவதாரமே..... அவதார புருடர்களின் நடவடிக்கைகளுக்கு விளக்கங்கள் கொடுப்பது பொருந்தாது" என்றும் கூறுகிறார் ராஜாஜி.

வாலி வதத்திற்குரிய காரணத்தை நாமும் நமக்கெட்டிய அளவில் ஆராய்ந்து பார்ப்போம்!

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 50

**சரியானவிடை:- வாலியின் மனைவி -தாரை, வாலியின் மகன்-அங்கதன்**

1. **செல்வன் த. சஞ்ஜீவன்.** அன்டர்சன் ஃபிளட்ஸ், கொழும்பு-5.
2. **ஏ.சி.எம். முஸம்மில்.** நீவ் பியூடி பெலஸ், மெயின் வீதி, குளியாப்பிட்டிய.
3. **செல்வன் எஸ்.கே. தாஸ்.** மாரியம்மன் கோயில் வீதி, ஆரையம்பதி-02.
4. **ஏ. செல்வகுமார்.** டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10.
5. **எஸ். விதுஷன்.,** கல்பொத்த வீதி, கொட்டாஞ்சேனை.

**போட்டி இல. 52** கேள்வி:- **வாலியின் குலம் என்ன?**

ஒக்டோபர்.19 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி–இல.52, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கலைஞர்–செல்வி -நேருக்கு நேர்- சந்திப்பு

### காதிலை பூ கந்தசாமி

கலைஞர்:- நீர்தான் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா என்பவரோ?

ஜெயா:- நீர்தான் இந்நாள் முதல்வர் கருணாநிதி என்பவரோ?

கலைஞர்:- பார்த்த ஞாபகம் இல்லையோ? என்னைப் பழித்த ஞாபகம் இல்லையோ? என்னிடம் விருது வாங்கி சிரித்த ஞாபகம் இல்லையோ?

ஜெயா:- உமது படத்தில் நடித்த ஞாபகம் வருகிறது. உமது வசனத்தை படித்த ஞாபகம் வருகிறது.

கலைஞர்:- நல்ல நடிகை நீர்.

ஜெயா:- நடிப்புக்கு ஏற்ப வசனம் வடிப்பவர் நீர்.

கலைஞர்:- பாராட்டுக்கு நன்றி.

ஜெயா:- பாராட்டவரவில்லை நான்.

கலைஞர்:- சீராட்ட வந்தீராக்கும். மன்னிக்கவும், வளர்ப்புமகனாக நான் மாறமாட்டேன்.

ஜெயா:- கிண்டலா?

கலைஞர்:- வந்தாரை வரவேற்கும் வளநெஞ்சத் தமிழன் நான். வீடு தேடி வருவோருக்கு சுண்டல்தான் தருவோம்.

ஜெயா:- வளநெஞ்சம் உமதோ? வழக்குப்போட்டு பழிவாங்கும் வஞ்சக நெஞ்சமும் உமதோ?

கலைஞர்:- உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான். தப்பைச் செய்தவன் தண்டனை பெறுவான்.

ஜெயா:- தப்பென்ன கண்டீர்? செப்பும் பார்க்கலாம்?



கலைஞர்:- ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? ஒருநாள் போதுமா விளக்கிச் சொல்ல?

ஜெயா:- அழகான கற்பனை.

கலைஞர்:- அது நடிகைகளுக்கு கைவந்த கலை.

ஜெயா:- துடிக்கிறது நெஞ்சம். உமது படத்தில் நடித்த பழைய நட்பு தடுக்கிறது கொஞ்சம்.

கலைஞர்:- திமிருக்கில்லை உம்மிடம் பஞ்சம்.

ஜெயா:- அது என்னுடன் கூடப்பிறந்த குணம்.

கலைஞர்:- உமது கூடப்பிறந்தது, கூடப்பிறக்காதது இரண்டாலும் கெட்டது நம் திருநாட்டின் சுத்தம்.

ஜெயா- நிறுத்தும்! நான் நினைத்திருந்தால் உடன்பிறவாத்தோழியை உள்துறை அமைச்சராக்கியிருக்கலாம்.

கலைஞர்:- உள்துறையை உரியமுறையில் கவனித்த காரணத்தினால்தான் அவர் உமது உடன்பிறவாத் தோழியானார். இதை நான் சொல்லவில்லை. நாடே சொல்கிறது.

ஜெயா:- அபாண்டம்! அபாண்டம்! நான் நினைத்திருந்தால் உம்மைப்போல வாரிசு அரசியல் நடத்த எண்ணியிருந்தால் என் வளர்ப்பு மகனை மேயராக்கியிருக்கலாம்.

கலைஞர்:- மேஜரானபின்னர்தானே அவன் உமது வளர்ப்பு மகனாக மாறினான். 18 வயதான பின்னர் 'மேஜர்' என்றுதான் சொல்லப்படுவதுண்டு. அது உமக்குத் தெரியாமல் போனது வெட்கம். வெட்கம்.

ஜெயா:- வார்த்தைகளால் விளையாடி நாட்டை ஏமாற்ற வேண்டாம்!

கலைஞர்:- என்னிடமிருப்பது வார்த்தைகளல்ல வலிவான கருத்துக்கள்! வார்த்தைகளால் நான் விளையாடுகிறேன் என்றால் அந்த வார்த்தைகள் எனக்கு மட்டும் சொந்தமல்லவே. பேசிப்பார்க்கலாமே நீரும். மூசிமூசி முழங்கிப் பார்க்கலாமே நீரும். வீதி தோறும் வீசிப்பார்க்கலாமே நீரும்!

ஜெயா:- நீர் கோபாலபுரத்தில் குடியிருக்கிறீர். குடும்ப ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறீர்!

கலைஞர்:- தஞ்சாவூர் குடும்பம் தமிழ்நாட்டை தன் கையில் வைத்திருக்கத் தலையாட்டிக் கொண்டிருந்தவர் நீர்.

ஜெயா:- உமது மருமகன் மந்திரி. மகன் மாநகர முதல்வர்.

கலைஞர்:- உமது தோழி ராணியாக இருந்தாள். தோழியின் கணவனோ ராஜாவாக இருந்தார்.

ஜெயா:- அவர்கள் பதவியில் இருக்கவில்லை.

கலைஞர்:- உமது பக்கத்தில் இருந்தார்கள். அதிகாரத்தின் உச்சியில் இருந்தார்கள்.

ஜெயா:- ஆதாரம்?

கலைஞர்:- சேதாரமில்லாமல் அவர்கள் சேர்த்துவைத்திருக்கும் சொத்துக்கள்!

ஜெயா:- அது உழைப்பால் கிடைத்த பயன்!

கலைஞர்:- உழைப்பு-களைப்பு-உயர்வு!
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
உழைத்தார்களா?
கொத்தி கொத்திப் புதையல் தேடிப்
பிடித்தார்களா?
யாரிடம் சொல்கிறீர் கதை? யாருக்கு
சொல்கிறீர் விடை?

வடையைத் திருடிய நரிக்கதை தெரிந்தவர்கள் நம் மக்கள். படையாக வந்து உம் கூட்டத்தையே கொத்துரொட்டியாகப் பிய்த்துப் போட்டுவிடுவார்கள் ஜாக்கிரதை!.

ஜெயா:- மிரட்டுகிறீரா?

கலைஞர்:- மிரட்டல், திரட்டல், சுருட்டல்! மூன்றும் கலந்த குணம் உமக்குத்தான் சொந்தம்!

ஜெயா:- இறுதியாக என்ன சொல்கிறீர்?

கலைஞர்:- உறுதியாகத்தான் சொல்லுவேன்!

ஜெயா:- என்னவென்று?

கலைஞர்:-அதை நீதிமன்றத்தில் நீரே அறிந்து கொள்ளலாம்!

ஜெயா:- நேரில் சொல்லமுடியாத கருத்தோ?

கலைஞர்:- பாரில் உள்ள யாவரும் அறிய வேண்டிய கருத்து. அதுதான் பகிரங்கத்தில் சொல்லவேண்டும் என்கிறேன்.

ஜெயா:- இதுதான் உமது முடிவா?

கலைஞர்:- முடிவிலும் முடிவான முடிவு! சந்தியாவின் மகளே! சிந்தித்துப்பார்! ஆடிய ஆட்டமென்ன? கூடிய கூட்டமென்ன? கையைவிட்டுப் பதவி போனால் கூடவே வருவதென்ன?

ஜெயா:- முத்துவேலர் மகனே! மீண்டும் முதல்வராகிவிட்டீர்! எனக்கும் ஒரு காலம் வரும். அப்போது உன்மீதும் வழக்கு வரும்! (வேகமாக வெளியேறிச் செல்கிறார் ஜெயலலிதா)

கலைஞர்:- (பாடுகிறார்)
குலுவாலிலே பதவி கிடைச்சல்லோ
குலுவாலிலே ஆட்சி மலர்ந்தல்லோ
தட்டி தட்டி வழக்குப் போட்டல்லோ
சொத்துச் சேர்த்த ஹேய் சொத்து சேர்த்த
கணக்கு கேட்டல்லோ
ஜெயாவுக்கு கோபம் வந்தல்லோ.
ஜெயா வந்து கேள்வி தொடுத்தல்லோ
பூவக்குள்ளே புயல் அடித்தல்லோ
(குலுவாலிலே)

ஜெயா:-(அழுது கொண்டு சென்று படுக்கையில் வீழ்கிறார். சசியை நினைத்துப் பாடுகிறார்.)
ஓஹோ.. ஓ.. ஒருமுறை எந்தன் நெஞ்சில்
காதை வைத்துக் கேளடியோ
இருதயம் உந்தன் பேரைச்
சொல்லும் சொல்லும் பாரடியோ.
ஆயிரம் சொத்துக்கள் அம்மம்மா
கண்டவள் நீயம்மா
கணக்கினில் ஒன்று குறைந்தாலும்
குலைப்பவள் நீயம்மா...

*சசிகலா:- (ஜெயாவின் கனவில் தோன்றுகிறார்)*
*மாலைப்பொழுதின் மயக்கத்திலே நான்*
*கனவு கண்டேன் தோழி*
*சொத்து இருந்தும் சுகங்கள் இல்லை*
*காரணம் ஏன் தோழி?*

*இன்பம் சிலநாள் துன்பம் சிலநாள்*
*என்றவர் யார் தோழி?*
*இன்பம் கனவில் துன்பம் எதிரில்*
*காண்பது ஏன் தோழி?*



ஜெயா:- (பதிலுக்கும் பாடுகிறார்)
பாட்டொன்று கேட்டேன்
பரவசமானேன்
நான் அதைப் பாடவில்லை.

சிறையொன்று கண்டேன் தோழியைக்
கண்டேன்
சிரிப்பினைக் காணவில்லை.. ஓ
சிரிப்பால் அழைக்கவில்லை.
சிரிப்பால் அழைக்கவில்லை.
(குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருக்கிறார்)

தொலைக்காட்சியில் ரஜினியின் பாடல் ஒலிக்கிறது. ஜெயா நிமிர்ந்து பார்க்கிறார்.

"உன் கையில் கொஞ்சம் காசு இருந்தால்
நீதான் அதற்கு எஜமானாம்
கழுத்து வரைக்கும் காசு இருந்தால்
அதுதான் உனக்கு எஜமானாம்
வாழ்வின் அர்த்தம் புரிந்துவிடு
வாழ்வின் அர்த்தம் புரிந்துவிடு...

ஜெயா எழுந்துபோய் தொலைக்காட்சியை எட்டி உதைக்கிறார்.

www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


# ஏக்கம்



← மழைக்காக ஏங்கும் நிலம் ஒன்று நமது பூமியில் உள்ளது. சில்லி நாட்டின் பசிபிக் சமுத்திரக் கரையோரம் அமைந்துள்ள அறிக்கா மற்றும் அன்ரொஃபகான்ஸ்றா ஊர்களுக்கிடையே காணப்படும் நிலப்பரப்புத்தான் உலகிலேயே அதிவறட்சியான பகுதி என்ற உலக சாதனைப் பட்டத்தைக் கொண்டுள்ள ஊராகும். (வேதனையும் சாதனையாகலாம்)

இங்கு ஆண்டொன்றுக்கு 0.1 மில்லி மீட்டர் (0.004 அங்குலம்) ற்கும் குறைவான மழைவீழ்ச்சியே இதுவரை அளவிடப்பட்டுள்ளது.

மேலும், வருடக்கணக்கல்ல நூற்றாண்டாக மழைவீழ்ச்சியே இல்லாத பகுதியாகவும் இப்பகுதி ஒரு காலத்தில் காணப்பட்டதாம்.

பின்பு, காலநிலை மாற்றத்தால் ஆண்டொன்றுக்கு மிகச் சொற்பமானளவு (மேற்கூறப்பட்ட) மழை பெய்கின்றதாம்.

போகிற போக்கில் நம்நாடும் வரட்சியில் உலக சாதனை படைக்கக்கூடும். ஜாக்கிரதை. சுற்றாடலை கவனமாகப் பார்க்கவும்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


# தீ



← படத்தைப் பார்த்ததும் எங்கு நடந்த அவலம் என்று கலங்க வேண்டாம். கோயில் திருவிழாக்களில் ஒரு தினத்தில் ஓலைக் கூடாரமொன்று கொளுத்தி எரிக்கப்படும் விழாவொன்றும் நடப்பது வழக்கம். இதனை 'சொக்கப்பனை' என்றழைப்பர், அதாவது 'பெருந்தீ' என அர்த்தப்படும்.

படத்தில் காணப்படுவதும் செயற்கையாக குடியிருப்பு மாடி போன்று அமைக்கப்பட்டு தீமுட்டப்பட்ட கட்டடமாகும்.

இதனைத் தீ முட்டிவிட்டுத் தீ மற்றவிடங்களிற்குப் பரவாமல் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் தீயணைப்புப் படையினர்

↑ கணிப்பீட்டின்படி 37.33 மீட்டர் (122 அடி 6 அங்குலம்) உயரம், ஏழாயிரத்து நூறு கன மீட்டர் (250 ஆயிரத்து எழுநூறு கன அடி) அளவுடைய மிகப்பெரும் தீ உருவாகியதாம். இதன் நடு மையப்பகுதியின் வெப்ப அளவீடு 9900 பாகை ஃபரன்ஹைட்.

உலகின் மிகப் பெரிய 'செயற்கைத் தீ' யென இது கின்னஸில் பதிவாகியது.


நம்நாட்டில் என்றால் 'செயற்கைத் தீ' மூட்டிப் பார்க்கும் அவசியமே இல்லையல்லவா.

# நகர் உலா



↑ யாழ் நகரில் ரோந்துப் பணியில் ஈடுபடும் இராணுவத்தினர். எப்போதும், எங்கிருந்தும் தாக்குதல் நடக்கலாம் என்ற உஷார் நிலையில் படையினர் இருந்தாக வேண்டும். எப்போது என்ன நடக்குமோ என்ற பயத்தில் மக்கள் வாழ்ந்தாக வேண்டும். சமாதானம் மலரும் வரை இந்நிலை மாறாது.

# இன்னும் கொஞ்சம் வேணுமா?



↑ 1992 இல் கற்பழிப்பு குற்றத்துக்காக மைக்டைசனுக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனை கொடுத்தபோது அந்தச் சிங்கத்தின் சரித்திரம் முடிந்துவிட்டதாகத்தான் அவரது எதிரிகள் நினைத்தனர்.

சிறைக்குள் இருந்தாலும் சிங்கத்தின் சீற்றம் குறையவில்லை. சென்ற ஆண்டு மார்ச் மாதம் சிறைவாசம் முடிந்து வெளியே வந்த மைக்டைசன் முன்பைவிட உற்சாகமாக குத்துக்கு மேல் குத்துவிட்டு எதிரிகளை மண்கவ்வ வைத்துக்கொண்டிருக்கிறார்.

செப்டம்பர் 7ம் திகதி அமெரிக்காவில் உள்ள லாவேகஸில் உலகக் குத்துச் சண்டைச் சபை சாம்பியன் பட்டத்துக்கான போட்டி நடைபெற்றது.

டைசனோடு மோதியவர் புருஸ் செல்டன். அவரும் குத்துச் சண்டையில் அபார சூரர். பழுத்த அனுபவசாலி.

யார் வெல்லப் போகிறார்கள்? என்று குத்துச்சண்டைப் பிரியர்கள் மத்தியில் பயங்கரமான எதிர்ப்பாப்பு. டைசனுக்கு டச் விட்டுப்போய்விட்டது. புருஸ் செல்டனுக்குத்தான் வெற்றிக்கனி என்று பந்தயம் கட்டினார்கள் பலர்.

விறு விறுப்பான மோதல் ஆரம்பித்தது. மொத்தம் 109 நொடிகள் மோதல் நடந்தது. டைசனின் குத்து மரணக் குத்து. திணறிப்போனார் புருஸ் செல்டன். இரண்டு தடவை முகம் குப்புற விழுந்த புருஸ் எழமுடியாமல் தவித்தபோது மைக் டைசனின் குத்தின் ஆழம் புரிந்தது.

தோல்வியோடு திரும்பிய புருஸ் ஒரு அறைக்குள் போய் விம்மி அழத்தொடங்கிவிட்டார்.

உலகக் குத்துச்சண்டை சபை சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிக் கொண்ட டைசனுக்கு மற்றொரு சவால் காத்திருக்கிறது. எதிர்வரும் நவம்பர் 9ம் திகதி குத்துச்சண்டை ஜாம்பவான் ஹொலிஃபீல்டுடன் மோதப்போகிறார்.

1990ல் டோக்கியோவில் மைக் டைசனை 10வது ரவுண்டில் வீழ்த்தியவர் பஸ்டர் டக்ளஸ். அந்த பஸ்டர் டக்ளஸை வீழ்த்தியவர் ஹொலிஃபீல்ட். எனவே சபாஷ் சரியான போட்டி என்று சொல்லுமளவுக்கு நவம்பர் 9ம் திகதி மோதல் தூள் பறக்கும்.

(படத்தில் ஓங்கிக் குத்துபவர் மைக்டைசன். சுருண்டில் சுருள்பவர் புருஸ் செல்டன்.)

# இதய அஞ்சலி



ஏ.கே. ஆனந்த லத்துவஹெற்றி
A.K. Ananda Ladduwahetti

ஜனனம்- 12/12/1953
மரணம்- 25/09/1996

நண்பா! நண்பா!
இதயமில்லா மரணம்
உன்னை கவர்ந்து போனதே!
இரக்கமில்லா மரணம்
உந்தன் புன்னகை பறித்ததே!
எங்கே காண்போம்
இனியுன்னை நாங்கள்!
நட்பு என்பது
இன மொழி பேதம் கடந்தது!
உனது நட்பும்
உன்னதமானது!

உனது புன்னகையும்
உனது நினைவுகளும்
பசுமரத்தாணியாய்
எமக்குள் பதிந்திருக்கும்!
காணிக்கை எங்கள்
கண்ணீர் பூக்கள்!
-என்றும் உன் நண்பர்கள்-

# கை மாறியது

↓ கீழே உள்ள படத்தில் இருப்பதுதான் 120 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட ஆட்டிலறிப் பீரங்கி. இதன் சுடுதூரம் கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர். முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்ட ஆட்டிலறிப் பீரங்கி என்று புலிகள் புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளனர். ஆட்டிலறியை வாகனமொன்றால் கட்டி இழுத்துச் செல்கிறார்கள் புலிகள் இயக்கத்தினர்.





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்